குரல்: 03 முழக்கம்: 03 திருவள்ளுவராண்டு 2051 மாசி-பங்குனி / மார்ச் 2020 திங்களிதழ் (தனிச்சுற்றுக்கு) பக்கங்கள் 33 நன்கொடை ரூ. 20

### சாவின் விளிம்பில் நிற்கிறதா முதலாளித்துவம்?



கடந்த நூற்றாண்டில் இரண்டு முறைக்கு அதிகமாகவே தனது இறுதிக்காலத்தினைத் தொட்டுவிட்டுத் திரும்பிய முதலாளியம் கொரோனா உருவாக்கியுள்ள புதுவிதச் சூழலிலிருந்து தப்பிக்குமா என்ற மார்க்சியர்களின் கேள்வி நியாயமானதே.

பக்கம் : 03

### வாழ்வின் விளிம்பில் முறைசாரா தொழிலாளர்கள்



நாடெங்கும் இருக்கும் தொழிலாளர்களைப் பற்றி கவலைப்படாமல் மோடி அரசு அறிவித்த ஊரடங்கு உத்தரவால், 50க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பசியாலும், வெயிலாலும், தண்ணீர் இல்லாமலும் உயிரிழந்திருக்கிறார்கள். இதில் 5 பேர் குழந்தைகள்

பக்கம் : 18

### கொரோனா நோயும் இஸ்லாமிய வெறுப்பும்



குடியுரிமைத் திருத்தச் சட்டத்திற்கு எதிரான தொடர் போராட்டம் மறுபடியும் தொடரும் போது இந்த நியாயமான கோரிக்கைக்கு இருக்கும் பொது சமூக ஆதரவை குறைத்து இஸ்லாமியர்கள் மீதான வெறுப்பை விதைப்பதற்கே இந்த கொரோனா நோய்த்தொற்றைக்கு இஸ்லாமிய சாயம் மோடி அரசால் பூசப்படுகிறது.

பக்கம் : 23

மே17 இயக்கக் குரல்
www.may17iyakkam.com
தமிழின புலிசார் அரசியல் செய்தி இதழ்



‘கெஞ்சிக் கிடப்பதில் பஞ்சந் தெளியாது’

# நீதியிலிருந்து விலகி நீளும் பயணம்

இந்தியக் கூட்டாட்சி எனும் போலி கூட்டமைப்பினால் கொரோனாவின் தொற்றுக்குள்ளாகி திணறிக் கொண்டிருக்கிறது தமிழ்த்தேசிய இனமும், இந்திய ஒன்றியத்தின் இதர தேசிய இனங்களும். இந்த நோய் தொற்றை சாமானிய மக்களிடத்தில் கொண்டு சேர்த்தது இந்த ஆரியப் பார்ப்பனியக் கட்டமைப்பு என்றால் அது மிகையாகாது. தேசிய இனங்கள் தன்னிச்சையாக தம் மக்களின் பாதுகாப்பை முன்னெடுக்க இயலாத சூழலையே இந்திய ஒன்றியம், தேசிய இனமக்கள் மீது திணித்திருக்கிறது. இதுமட்டுமல்லாமல், இந்த நெருக்கடியைப் பயன்படுத்தி தனது அதிகாரத்தைக் குவியப்படுத்தி, வலுப்படுத்தி இருக்கிறது. மேலும், தனது பெருவணிக நிறுவனங்களின் நிதி நெருக்கடியைத் தளர்த்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது.

கொரோனாவின் பரவலைக் கட்டுப்படுத்த ஊரடங்கு உத்தரவை மோடி திடீரென அமல்படுத்தியதிலிருந்து, ஏழைகள் துவக்கிய வீடு நோக்கிய பயணம் இன்னும் முடிந்தபாடில்லை. சமூகப்பரவலைத் தடுப்பதற்காக மோடியின் இந்திய அரசு அறிவித்த நடவடிக்கைகள் பெரும்பான்மை ஏழை மக்களுக்கு எதிரானதாகவே சென்றிருக்கிறது. ஒரு பெரிய மனித அவலமே நிகழ்வதை உலக ஊடகங்கள் தலைப்புச் செய்திகளாக பதிவு செய்தன. லட்சக்கணக்கில் மக்கள் தங்கள் வீடுகளை, ஊர்களை, மாநிலங்களை நோக்கி பீதியுடன் கூடிய பயணத்திற்கு திரண்டதை உலகமே மிரட்சியுடன் பார்த்தது. மனித நெருக்கம் அதிகம் இருக்கக் கூடிய நாட்டில் ‘தனிமனித இடைவெளி’ என்பது குறித்தான எவ்வித பயிற்சியும், தெளிவுபடுத்தலுமில்லாமல் இந்த ஊரடங்கு திடுமென மக்கள் மீது திணிக்கப்பட்டது. 2020 மார்ச் முதல் இரண்டு வாரங்கள் வரை கொரோனா குறித்து எவ்வித அறிவிப்பையும் மோடி அரசு அறிவிக்கவில்லை. வதந்திகளை நம்பாதீர்கள் என்று மக்களிடத்தில் பரவிய கொரோனா குறித்த தகவல்களுக்கும் முற்றுப்புள்ளி வைத்தார் பிரதமர். ஒரு தொற்றுநோய்க் குறித்த மக்களுக்கு அறிவுறுத்தல் என்பது இந்தியா போன்ற நாடுகளில் ஒரு நீண்ட நாள் தேவைப்படும் பயிற்சி. இது சமூக சிக்கல் நிறைந்ததும் கூட. தொற்று நோய் என்பது சுகாதாரப்பிரச்சனை மட்டுமல்ல; அது அடிப்படையில் பொருளாதாரப் பிரச்சனையும் கூட. இப்படியான பல்வேறு பரிமாணம் கொண்ட தொற்று நோய் எதிர்ப்பு போராட்டத்தைப் பற்றிய எவ்வித அக்கறையுமின்றி காலம் கடத்தியது மோடி அரசு. சீனாவின் வூகான் மாகாணத்தில் நோய் கடுமையாக பரவிய காலத்தில் தொற்று நோய் பற்றிய முன்னெச்சரிக்கை பிரச்சாரம் எதுவும் இந்தியாவில் முன்னெடுக்கப்படவில்லை. நோய்த்தொற்று பரவும் பட்சத்தில் நோயாளிகளைக் காப்பதற்குரிய எவ்வித முன் திட்டமிடலும், முன்தயாரிப்புகளும் சுகாதாரத்துறையால் மேற்கொள்ளப்படவில்லை. வெளிநாட்டிலிருந்து இந்தியா வந்திறங்கிய லட்சக்கணக்கான பயணிகளைக் கண்காணிக்க, தனிமைப்படுத்த எவ்வித முயற்சியும் எடுக்கப்படவில்லை. சீனாவும், பின் இத்தாலியும், இங்கிலாந்தும் திணறிக்கொண்டிருந்ததை நன்கறிந்தும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாததற்குக் காரணம் ஆராயப்பட வேண்டும். இது எதேச்சையானதாகவோ, அலட்சியப் போக்கானதாகவோ எடுத்துக் கொள்ளத்தக்கது அல்ல. கொரோனா தொற்றினால் உருவாகும் பொருளாதார நெருக்கடியும், மனித அவலமும் நன்கறியும் திறன் இருந்தும் இந்த நோய்த் தொற்று இந்தியாவிற்குள் ஏன் அனுமதிக்கப்பட்டது என்பதற்கான விடையை நாம் கண்டறிந்தாக வேண்டும்.

**ஒரு பெரிய மனித அவலமே நிகழ்வதை உலக ஊடகங்கள் தலைப்புச் செய்திகளாக பதிவு செய்தன. லட்சக்கணக்கில் மக்கள் தங்கள் வீடுகளை, ஊர்களை, மாநிலங்களை நோக்கிய பீதியுடன் கூடிய பயணத்திற்கு திரண்டதை உலகமே மிரட்சியுடன் பார்த்தது.**

**தொற்று நோய் என்பது சுகாதாரப்பிரச்சனை மட்டுமல்ல. அது அடிப்படையில் பொருளாதாரப் பிரச்சனையும் கூட. இப்படியான பல்வேறு பரிமாணம் கொண்ட தொற்று நோய் எதிர்ப்பு போராட்டத்தைப் பற்றிய எவ்வித அக்கரையுமின்றி காலம் கடத்தியது மோடி அரசு.**

# சிறும் புயலால் மெலிந்தவருக்குச் சர்க்கார் செஞ்ச உதவிகள் என்ன மச்சான்? அங்கு-நாளும் பிணத்தைப் புதைப்பதற்கு நம்ம நாணய சர்க்கார் உதவுமடி

பாவேந்தர் பாரதிதாசன்



கட்டுரை குறித்த கருத்துக்களை தெரிவிக்க
may17voice@gmail.com

உலகம் முழுவதும் கொரோனா பரவும் அபாயமாக அறியப்பட்ட காலத்தில் மோடி அரசு அமெரிக்காவின் அதிபர் ட்ரம்ப்பின் வருகைக்காக தயாராகிக் கொண்டிருந்தது. இதற்காக பெரும் தொகையை மோடி அரசு செலவு செய்தது. ஏழை மக்கள் வசிக்கும் பகுதி ட்ரம்ப்பின் கண்களில் படாமல் இருப்பதற்காக பெரும் சுவர்களை மைல்கணக்கில் எழுப்பிக் கொண்டிருந்தது. அதே நேரத்தில் டில்லியில் வன்முறை வெறியாட்டமும், இசுலாமியர் மீதான இனப்படுகொலையும் அமித்ஷா தலைமையில் கட்டவிழ்க்கப்பட்டன. இதே காலத்தில் நிர்மலா சீதாராமனின் பட்ஜெட் சமர்ப்பிக்கப்பட்டது. இதில் பெரும் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு வரிச்சலுகைகளும், மானியங்களும் அறிவிக்கப்பட்டன. அதே நேரத்தில் சிறுகுறு தொழில்களுக்கும், விவசாயிகளுக்கும், முறைசாரா தொழிலாளர்களுக்கும் எதிரான பல்வேறு அறிவிப்புகள் இந்த பட்ஜெட்டில் இருந்தன. இப்படியான சூழலிலேயே இந்த கொரோனா தொற்று இந்தியாவில் வந்திறங்கியது. இது ஏற்கனவே சீரழிக்கப்பட்டிருந்த அடித்தட்டு மக்களை நோக்கி திருப்பிவிடப்பட்டிருக்கிறது என்பதைக் கூர்ந்து கவனித்தால் புரியும். உயர்தட்டு அல்லது விமானப் பயணிகளின் வழியாக பரவும் ஒரு தொற்றுநோயை எளிமையாக கடந்த காலங்களில் (சார்ஸ், எச்1.என்1 போன்று) தடுத்ததைப் போல ஏன் தற்போது அரசு தடுத்து நிறுத்தவில்லை. அதே நேரம் இது சமூகப்பரவல் நிகழும் வரை அரசு அமைதி காத்தது ஏன்? என்பது போன்ற கேள்விகள் தவிர்க்க இயலாதவை.

**நாக்பூர் நகரிலிருந்து நாமக்கல் நோக்கி நடந்துவந்த 21வயது மாணவர் பயணத்தினால் இறந்து போனதைப் போல இந்தியா முழுவதும் கிட்டதட்ட 21க்கும் மேற்பட்ட அப்பாவிகள் பலியாகி இருக்கிறார்கள். இதைப்பற்றியெல்லாம் கவலைப்படாமல் கைத்தட்டல், பத்திரங்களை தட்டுதல், இரவு விளக்கை அணைத்து கைவிளக்கை ஏந்துதல் என பலவேறு ஆரிய மூடப்பழக்கங்களை இந்நிலையிலும் ஆரிய அரசு மக்களிடத்தில் திணிக்கிறது**

மோடி அரசு ஊரடங்கு அறிவித்த பின் நடந்த மனித அவலம் இந்தியாவின் மோசமான மக்கள் விரோத அரச முடிவுகளைக் காண்பித்தது. நாக்பூர் நகரிலிருந்து நாமக்கல் நோக்கி நடந்துவந்த 21வயது மாணவர் பயணத்தினால் இறந்து போனதைப் போல இந்தியா முழுவதும் கிட்டதட்ட 21க்கும் மேற்பட்ட அப்பாவிகள் பலியாகி இருக்கிறார்கள். இதைப்பற்றியெல்லாம் கவலைப்படாமல் கைத்தட்டல், பாத்திரங்களைத் தட்டுதல், இரவு விளக்கை அணைத்து கைவிளக்கை ஏந்துதல் என பலவேறு ஆரிய மூடப்பழக்கங்களை இந்நிலையிலும் ஆரிய அரசு மக்களிடத்தில் திணிக்கிறது. ஐநாவின் உலக சுகாதார நிறுவனம் உலக நாடுகளுக்கு தொடர் சோதனை செய்வதைத் தான் கொரோனா தொற்றைத் தடுப்பதற்கான வழியாக பரிந்துரை செய்ததை இந்தியாவின் ICMR இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் மார்ச் மாதம் 18ஆம் தேதி நிராகரித்தது. இந்திய மக்களின் உணவுப்பாதுகாப்பு குறித்தோ, வேலைப் பாதுகாப்பு குறித்தோ, ஆரோக்கியப் பாதுகாப்பு குறித்தோ எவ்வித முன்னேற்பாடும் இல்லாமல் மார்ச் மாதத்தில் மோடி அரசு வேலை செய்தது. மார்ச் மாத இறுதிவரை தொடர் சோதனை என்பதைப் பற்றிய அறிவிப்பே இல்லாமல் அரசின் செயல்பாடு தொடர்ந்தது. மேலும் இந்த நாடு தழுவிய ஊரடங்கு என்பது மாநில அரசுகளின் ஒப்புதல் இல்லாமலேயே மோடி அரசு சர்வாதிகாரத்தனமாக மேற்கொண்டது. நிர்வாகம் என்பது மாநிலங்களையே சார்ந்திருக்கும் சூழலில் மாநிலங்களைக் கலந்தாலோசிக்காமல் எதேச்சதிகாரத்தனத்தோடு மோடி அரசு முடிவெடுத்தது. இந்த காலத்தில் மாநிலங்கள் இந்திய அரசின் உதவியை எதிர்கொண்டு நின்றன. மாநில அரசிற்கு பட்டுவாடா செய்யப்பட வேண்டிய ஜிஎஸ்டி நிலுவைத் தொகையை இந்திய அரசு இதுநாள் வரை தமிழ்நாட்டிற்கு வழங்கவில்லை. மேலும், நெருக்கடி நிலையைச் சமாளிக்க நிதி உதவி வேண்டி தமிழ்நாடு அரசு மக்களிடம் கையேந்த வேண்டிய நிலையை உருவாக்கியது. இதே காலத்தில் மோடி அரசும் தனியே நிதி உதவி வேண்டி மக்களிடத்தில் கோரிக்கை வைத்தது. ஏற்கனவே உள்ள ஒன்றிய அரசின் தேசிய நிவாரண நிதி வங்கிக்கணக்கில் இக்கோரிக்கை எழுப்பப்படாமல் புதியதாக தனியான வங்கிக் கணக்கு தனியார் தொண்டு நிறுவனமாக (Charitable Trust) PMCares என்ற பெயரில் தொடங்கி, அதில் கோரப்பட்டது. இதே நேரத்தில் ஊரடங்கு உத்தரவை முன்னிட்டு காவல்துறை அதிகாரத்தைத் தன்னிச்சையாக மக்கள் மீது பயன்படுத்தியது. ஊரடங்கை மீறியதாக வெகுமக்கள் மீது தாக்குதலை நடத்தியது. சிறு கடைகள், தெருவோர வணிகர்கள், அன்றாட வேலைகளில் ஈடுபட்டவர்கள் என்பதிலிருந்து மருத்துவப்பணியாளர்கள் வரை காவல்துறையின் லத்தி நீண்டது. தூய்மைப் பணியாளர்களிலிருந்து, செவிலியர், மருத்துவர் என எவருக்குமான பாதுகாப்புக் கவசங்கள் வழங்கப்படாமலேயே கொரோனா தடுப்புப்பணி என்பது துவங்கியது. முகக்கவசத்தின் தேவைக் குறித்து கேள்வி எழுப்பிய அரசு மருத்துவர் இடமாற்றம் செய்யப்பட்டார் என்பது போன்ற நிகழ்வுகள் அரசின் கையாலகத்தனத்தை அம்பலப்படுத்தியது. மத்திய அரசு எதேச்சையாக நடந்து கொண்டதும், மாநில அரசுகள் நிதி இன்றியும், வழிகாட்டுதல் இன்றியும் தங்களது எல்லையைப் பாதுகாக்க வழியின்றியும் இருந்தன. இந்தியாவின் சர்வதேச விமானநிலையங்கள் சரியான முறையில் மத்திய அரசினால் கண்காணிக்கப்படவும் இல்லை; தொற்றைத் தவிர்க்கும் முயற்சியை இந்நிலையங்களில் ஏற்படுத்தவும் இல்லை. இந்தியாவின் கூட்டாட்சி முறையின் கேலிக்கூத்து இம்முறை கொரோனா தொற்றைத் தமிழ்நாட்டிற்குக் கொண்டு வந்து சேர்த்தது. மாநிலங்களின் உரிமையை முற்றிலுமாக பறித்துக் கொள்வதும், அவர்களது அதிகாரங்களைக் குறைப்பதுமான சூழலில் கொரோனா தொற்று போன்றவற்றிற்கு தமிழர்கள் பலியாவதன் அடிப்படைக் காரணியாக அமைவது இந்திய அரசின் எதேச்சதிகாரமும், நிர்வாகக் கையாலாகாதத் தன்மையுமே.

உலக அளவில் முதலாளித்துவ நாடுகள் கொரோனா தொற்றினை எதிர்கொள்ள இயலாமல் தோல்வியைத் தழுவிக்கொண்டிருக்கின்றன. இத்தாலி நாட்டில் 21,000 மக்களுக்கும் மேலானவர்கள் இறந்து போய் இருக்கிறார்கள். 1000 மக்களுக்கு ஒரு மருத்துவர் என்ற விகிதத்தில் மிக மோசமான மருத்துவக் கட்டமைப்பினைக் கொண்டிருந்ததே வளர்ந்த நாடான இத்தாலியின் தோல்விக்குக் காரணமாக நாம் பார்க்கிறோம். ஐரோப்பாவின் தனியார்மயமும், தாராளவாதக் கொள்கையும் அம்மக்களுக்கு தேவையான கட்டமைப்பைப் பலவீனப்படுத்தி இருப்பதைக் கொரோனா தொற்று அம்பலப்படுத்தி இருக்கிறது.

இந்த கொரோனா தொற்று பல்வேறு கேள்விகளை மனித சமூகத்தின் முன் எழுப்பி இருக்கிறது. உலகின் சுற்றுப்புறச்சூழல் மாசுபாடு, சமூக மருத்துவக் கட்டமைப்பின் பலவீனம், உலக முதலாளித்துவக் கட்டமைப்பு, உலகமயம், நிதிமூலதனம், சாதிய–வர்க முரண்கள், சமூக ஏற்றத்தாழ்வு, மதமூட நம்பிக்கைகள், வலதுசாரி அரசியல், தனியார்மயம் என்பன உள்ளிட்டு தேசிய இனங்களின் விடுதலை என பல அரசியல் விவாதத்திற்கு வந்திருக்கின்றன. தேசிய இனங்களாக தம்மை விடுவித்துக் கொண்டவையும், தாராளமயவாதம் எனும் தனியார்மயத்திற்கு அடிபணியாத நாடுகளும் தம் மக்களை ஆளுமையுடன் பாதுகாத்துக் கொள்வதையும், வளர்ந்த ஏகாதிபத்திய நாடுகள் தோல்வியுருவதையும் மீண்டுமொரு முறை உலகம் பார்க்கிறது. ●

## கொரோனா சூழ் உலகம்

# சாவின் விளிம்பில் நிற்கிறதா முதலாளித்துவம்?

**கடந்த நூற்றாண்டில் இரண்டு முறைக்கு அதிகமாகவே தனது இறுதிக்காலத்தினைத் தொட்டுவிட்டுத் திரும்பிய முதலாளியம் கொரோனா உருவாக்கியுள்ள புதுவிதச் சூழலிலிருந்து தப்பிக்குமா என்ற மார்க்சியர்களின் கேள்வி நியாயமானதே.**




’மனித குலத்திற்கு (அது தோன்றிய காலத்திலிருந்து) இதுவரையில் ஒரு வரலாறு இருந்திருக்கிறது. (முதலாளியத்தினை வந்தடைந்த பின்) இனி எந்த ஒரு வரலாறும் இருக்காது’ என்றே முதலாளிய அறிஞர்கள் வாதிட்டிருக்கிறார்கள். அவ்வளவு தூரம் வலிமையானதாக, தீர்மானகரமானதாக முதலாளியம் மனிதகுலவரலாற்றில் நிரந்தர ஆற்றலாக நிற்பதாகவே அவர்கள் பிம்பத்தினைக் கட்டி எழுப்பியும் இருக்கிறார்கள். முதலாளியம் தோன்றி வளர்ந்த கடந்த சில நூற்றாண்டுகளில் உலக அளவில் மனித குலம் பல்வேறு மாற்றங்களை எதிர்கொண்டு தன்னை வடிவமைத்துக் கொண்டது. முதலாளியத்திற்கு முன்பான உலகை அது உடைத்தெறிந்து மக்களுக்கு சனநாயகத்தை, வளத்தை, புதிய உலகத்தை, கண்டுபிடிப்புகளை என பலவற்றை உருவாக்கியதாக மார்தட்டிக்கொண்டது. இதுவே மனித குலத்தின் இறுதித் தேவை எனவும், இனிவரும் தேவைகளை முதலாளியமே நிறைவேற்றிக் கொடுக்கும் என்பதான மாபெரும் கனவு தொடர்ந்து நம்மிடம் விதைத்துக் கொண்டு வந்திருக்கிறது. இந்த நம்பிக்கையிலேயே உலகமக்களை அது வழிநடத்தவும் செய்கிறது.

இப்படியான இரும்புப்பிடிப்பை நம் மீது கொண்டிருப்பதாக முதலாளியம் சொல்லிக் கொண்டிருந்த காலத்தில் அது பல்வேறு நெருக்கடிகளையும் நம் கண்முன் சந்தித்தது. கடந்த ஒரு நூற்றாண்டில் மயிரிழையில் உயிர் தப்பிய சம்பவமும் இன்றைய நிலையையும் பொருத்திப் பார்த்து இனிமேல் வேறெதுவும் வரலாறு தேவையா இல்லையா என்பதை நாம் ஆய்வு செய்யும் காலமிது.

14ஆம் நூற்றாண்டில் (1346-53) இங்கிலாந்து மற்றும் ஐரோப்பாவில் ப்யூபோனிக் ப்ளேக் எனும் தொற்று நோய் பரவியது. வெகுசில மாதங்களுக்குள்ளாகவே கிட்டதட்ட ஐரோப்பாவின் 30-60% மக்கள் தொகை இந்த நோயால் அழிந்தனர். இதனால் ஐரோப்பாவில் நிலம் சார்ந்த விவசாயமும், பண்ணைகளும் கடும் நெருக்கடியைச் சந்தித்தன. பல பண்ணைகளும் அதனது பண்ணையார்களும், பிரபுக்களும் கூட இந்நோயினால் அழிந்தனர். அதுவரையில் நிலத்துடன் பிணைக்கப்பட்டு இருந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு நிலம் சார்ந்த விவசாயம் என்பது பயனற்றதாகிப் போனது. பல்லாயிரம் வருடங்களாக நிலத்தைச் சார்ந்து இயங்கி வந்த சமூகத்தை நாம் நிலவுடமைச் சமூகம் என்போம். இச்சமூகம் கடும் நெருக்கடியை இந்த கொள்ளைநோயால் சந்தித்தது. இந்த நிலவுடமையைச் சார்ந்தே அரச அதிகாரங்கள் இயங்கிவந்த நிலையில் இந்த அழிவானது ஒட்டுமொத்த நிலவுடமை கட்டமைப்பை ஆட்டம் காணவைத்தது. உழவுத்தொழில்களால், பண்ணையார்களால் இனிமேலும் விவசாயக்கூலிகளை அடிமைகளைப் போல நிலத்தோடு பிணைத்து சுரண்ட இயலாது. நிலம் சார்ந்த உற்பத்தி வேலைவாய்ப்பில்லாமல் போனது; அதன் உற்பத்தி லாபம் இல்லாது போனது. மக்கள் தொகையில் கிட்டதட்ட 60 சதவீத

மக்கள் இல்லாது போனபின்னர் விவசாய உற்பத்தியானது மக்கள் தொகையைவிட மிகுதியாகவே அறுவடையானது. இவ்வாறு மிகுதியான உற்பத்தியும், குறைவான மக்கள் தொகையும், லாபமில்லாத உழவும், காணக்கிடைக்காத தொழிலாளரியும் இந்த நிலவுடமைச் சமூகத்திற்கு சாவுமணி அடிக்கக் காரணமாயிருந்தன. இந்தப் பேரழிவைக் 'கருப்பு மரணம்' என்று அழைத்தார்கள். இந்த மரண நோயின் காரணமாக உழவுத்தொழிலுக்கான தொழிலாளர்கள் குறைந்து போனார்கள். இவ்வாறான பற்றாக்குறையை எதிர்கொண்ட பண்ணையார்கள் (அல்லது பண்ணைநிலத்தின் பிரபுக்கள்) தொழிலாளர்கள் பற்றாக்குறையை எதிர்கொள்ள வேண்டியதாயிற்று. நிலத்திற்குத் தேவைப்படும் உழைப்பாளர்களை விட மிகக்குறைந்த எண்ணிக்கையிலேயே உழைப்பாளிகள் இருந்த காரணத்தினால் புதுவித நெருக்கடி உருவானது. அதுவரை பண்ணையார்களைச் சார்ந்திருந்த தொழிலாளர்கள் அவர்களது கட்டுப்பாட்டிலேயே இயங்கவும், வாழவும் வேண்டியதாயிருந்தது. இந்நிலை தளரத் தொடங்கியது. தொழிலாளர்களைத் தங்கள் பண்ணையில் வைத்துக் கொள்ள வேண்டுமெனில் கடந்த காலத்தைப் போல அவர்களை அடிமைகளைப் போலவோ, விலங்குகளைப் போலவோ நடத்த இயலாத நிலை பண்ணையாளர்களுக்கு ஏற்பட்டது. இந்த நிலையைச் சாதகமாக பயன்படுத்திக் கொண்டு தொழிலாளர்கள் தங்களது சுதந்திரமான தனித்துவத்தை ஏற்படுத்திக் கொள்ள தலைப்பட்டனர். பண்ணையாளர்கள் கூலிகளை ஏற்றிக் கொடுக்கவேண்டிய நிலை உருவானது. தொழிலாளர்கள் தங்கள் உழைப்பிற்கான விலையைப் பேரம் பேசி உயர்த்திக் கொள்ள இயன்றது. இதனால் அவர்களது பொருளாதார நிலை உயரத்தொடங்கியது. இது பெரும் மாற்றத்தினைப் பொருளாதாரத்தில் கொண்டுவந்தது. நிலத்தில் பிணைக்கப்பட்ட காலத்தில் அவர்கள் பெற்றுவந்த உழைப்பிற்கான கூலி என்பது தற்போது பண வடிவில் கிடைக்கத் துவங்கியது. தொழிலாளர்கள் தங்களது உழைப்புக்கூலியைத் தங்கள் விருப்பத்திற்கும் சூழலுக்கும் ஏற்ப பெற்றுக்கொள்ளக் கூடிய சுதந்திரத்தைப் பெற்றார்கள். இதனால் அவர்கள் சுதந்திர தொழிலாளர்களானார்கள். அவர்களது உழைப்பு ஒரு பொருளைப் போல விற்பனைக்குரிய விலைபெறக்கூடியதாக மாறியது. இச்சமயத்தில் விவசாயம் அல்லாத பிற தொழிலை நோக்கி தொழிலாளர்கள் நகரத்தொடங்கினார்கள். இதனால் தொழிற்துறை வளரவும், நகரங்கள் புதிய பொருளாதார வடிவத்திற்குள்ளும் நகர ஆரம்பித்தன. தொழிலாளர்களை இதுவரை அடிமைகளைப் போல பிணைத்து வைத்திருந்த நிலப்பிரபுக்களின் கை பலவீனமானது. எனவே ஒரு புறம் தங்களது உழைப்புச்சுதந்திரத்தை மீட்டெடுக்கவும், மறுபுறம் தங்களை அழுத்திக் கொண்டிருந்த பழைய அரசியல் அமைப்பான பிரபுக்களை உள்ளடக்கிய நிலவுடமை கட்டமைப்பு அரசியலை எதிர்த்து நிற்பதற்குமான வலிமையை இவர்களுக்குக் கொடுத்தது. 1350இல் இந்தத் தொழிலாளர்களுடைய கூலி உயர்வைக் கட்டுப்படுத்தும் சட்டத்தினை இங்கிலாந்து அரசு கொண்டு வந்தது. ஆனால் தொழிலாளர்களின் எழுச்சி இந்த சட்டத்தை எதிர்த்து வெற்றி பெற வைத்தது. இவ்வாறான கட்டமைப்பு மாற்றமானது அரசின் அடுக்கில் அதிகாரத்தோடு இருந்த பிரபுக்களின் உயர்நிலையை கேள்விக்குள்ளாக்கியது. நிலம் சார்ந்த விவசாய உற்பத்தியைப் பெருக்கிக் காட்டியதால் தமது அதிகார பலத்தைத் தக்கவைத்த பிரபுக்கள் இந்த உழைப்பாளர்களோடு கூலி உயர்வு கோரிக்கையில் சமரசத்திற்கு தள்ளப்பட்டார்கள். இதனால் பிரபுக்களை நம்பியோ, அவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான வகையிலோ செயல்பட்டால் மட்டுமே வாழ இயலும் எனும் அரசியல் கட்டுப்பாடுகள் தளர்ந்து அறுந்து போயின. அது வரை சமூகக்கூட்டமாக தொகுப்பாக பார்க்கப்பட்டு வந்த உழைப்பாளர்கள் தனித்த நபர்களாக அரசால் பார்க்கப்பட்டனர். சமூகத்திற்கான உற்பத்தி என்றோ, சமூகத்திற்கான கூலி என்பதிலிருந்தோ மாறி, தனிநபருக்கான உற்பத்தி, தனிநபர் கூலி என்பதாக சமூகம் மாற்றம் பெற்றதை இங்கிலாந்தின் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட சட்டங்கள் ஆதாரமளிக்கின்றன. 1381ஆம் வருடத்தில் தனிநபருக்கான வரியை விதிக்க ஆரம்பித்தது. (ஒரு ஷில்லிங் ஒரு நபருக்கு எனும் வரிவிதிப்பைக் கொண்டு வந்தார்கள்).

**1350இல் இந்தத் தொழிலாளர்களுடைய கூலி உயர்வைக் கட்டுப்படுத்தும் சட்டத்தினை இங்கிலாந்து அரசு கொண்டு வந்தது. ஆனால் தொழிலாளர்களின் எழுச்சி இந்த சட்டத்தை எதிர்த்து வெற்றி பெற வைத்தது.**

**நில உடமைச் சமூகத்தின் அரசுகளுக்கு ஒரு முடிவுரையை எழுத ப்யூபோனிக் ப்ளேக் நோய் ஒரு மிகப்பெரும் காரணியாகவும் அமைந்தது.**

இது போன்ற மாற்றங்களைக் கொண்டு வந்த சட்டங்களை எதிர்த்து உழைப்பாளிகள் போர்க்கொடி தூக்கினார்கள். இது உழைப்பாளர்களுக்கு ஒரு அதிகாரத்தோடு போராடும் வலிமையை பெற்றுக் கொடுத்தது. இந்த தனிநபர் வரி (போல் வரி Poll Tax)க்கு எதிராக உழைப்பாளர்கள் திரண்டார்கள்.

அரசர்கள் அவர்களுக்கு கீழிருந்த பிரபுக்கள்/பாதிரிமார்கள்/மன்றத் தலைமைகளுக்கு வரிச்சலுகையும், நிலமும் வழங்கி இருந்தார்கள். இதற்கு பதிலீடாக இவர்கள் அரச குடும்பத்தினருக்கு விசுவாசத்தையும், போர் காலத்தில் படைவீரர்களையும் கொடுத்தார்கள். இந்தப் பிரபுக்கள் பெரும் கோட்டை/கொத்தளங்களில் வாழ்ந்து வந்தார்கள். இவர்களுக்கு பணிவிடை செய்யும் வகையில் படைத்தளபதிகள், போர் வீரர்கள் அமர்த்தப்பட்டிருந்தனர். அவர்களுக்கு பிரபுக்கள் நிலங்களை வழங்கி இருந்தனர். பிரபுக்களின் நிலங்களில் மற்றும் படைத்தளபதிகளின் நிலங்களில் மிகக்குறைந்த




கூலிக்கும், தங்குவதற்குரிய இடத்திற்காகவும் உழைப்பாளர்கள் விவசாயிகளாக, கூலிகளாக, தொழிலாளர்களாக பணி செய்தார்கள். இந்த வேலையாட்களுக்கு நில உரிமை கொடுக்கப்படவில்லை. நிலமற்றவர்களாக சொத்துக்களற்றவர்களாகவே இந்நிலங்களில் வாழ்ந்தார்கள். இந்த நில உடமை (அரசர்–பண்ணையாளர்கள்) காலகட்டத்தில் வணிகர்கள் பிரபுக்களாலும், தேவாலயங்களாலும் கட்டுப்படுத்தப்பட்டனர். இந்த அதிகார அடுக்குமுறையில் வணிகர்களுக்கு பிரதான இடமளிக்கப்படவில்லை. இந்நிலை 15ஆம் நூற்றாண்டு நோய்த் தொற்றுக்குப் பிறகு மாறியது.

கெண்ட், எஸ்ஸெக்ஸ் எனுமிடத்திலிருந்து லண்டன் நோக்கி உழைப்பாளர் படை திரண்டு கிளம்பியது. இப்படையை இங்கிலாந்து அரசரின் படை எதிர்கொண்டு போர் நடத்தியது. இதில் உழைப்பாளர்கள் படை தோற்று பலர் கொல்லப்பட்டனர். இந்த ஏழைக்குடியானவர் புரட்சி வீழ்த்தப்பட்டாலும், அரசு தனது வரிவிதிப்பைத் திரும்பப் பெற்றுக் கொண்டது. ஆனால் இதன் பின்னர் அரசியலில் தங்களுக்கான இடத்தை மிக அழுத்தமாக உழைக்கும் வர்க்கம் பெற்றுக் கொண்டது.

இதற்கு அடுத்தடுத்த நூற்றாண்டுகளில் எழுந்த அறிவியல், தொழிற்புரட்சி இந்த தொழிலாளர்களை மேலும் சுதந்திரம் அடைந்தவர்களாகவும், அரசியல் அதிகாரத்தைக் கேள்வி எழுப்பும் ஒரு வர்க்கமாகவும் மாற்றி அமைத்தது. நிலம் சார்ந்து அமைந்திருந்த அரசாங்க ஆட்சியதிகார முறையில் பொருளாதாரம் சார்ந்த ஆட்சியதிகார முறைக்கு இந்நிலை வழி விட்டது. இப்படியாக நில உடமைச் சமூகத்தின் அரசுகளுக்கு ஒரு முடிவுரையை எழுத ப்யூபோனிக் ப்ளேக் நோய் ஒரு மிகப்பெரும் காரணியாகவும் அமைந்தது.

இந்த நிலவுடமைச் அரசுகளுக்கும், நிலவுடமை சமூகத்திற்கு பின்பும் புதிய வணிகச் சமூகங்கள் புதிய நாடுகளோடும் புதிய காலனிகளுடனான வணிகத்தையும் உருவாக்குகின்றன. இது உள்நாட்டில் பலவேறு மாற்றத்தைக் கொண்டுவருகின்றன. அதிக உற்பத்தி, பொருளுக்கான விலை என்பதாக பொருளாதாரக் கட்டமைப்பு வளர்கின்றது. இதன் காரணமாக காலனிகளை உருவாக்குதல், அடிமை வணிகம் என ஏகாதிபத்தியமாக இது விரிகிறது. இவ்வாறான புதிய உற்பத்தி கேந்திரங்களாக மாறிய நகரங்களுக்கு முன்னர் நிலத்தோடு பிணைக்கப்பட்டிருந்த உழைப்பாளர்கள் வருவதும், தங்களது உழைப்பை விற்பதுமாக மாறுகிறது. இப்படியான போக்கு 17–18ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தை ஒரு தொழில்துறை நாடாக மாற்றுகிறது. இந்நிலையிலேயே தொழிற்சாலைகளும், மில்களும் உருவாகின்றன. இந்த கட்டத்திலேயே ஒரு தேசத்தின் பொருளாதாரம் எனும் புதிய போக்கினைக் கண்டறிகிறார்கள். இதையே ஆடம் ஸ்மித் தேசங்களின் வளம் அல்லது சொத்து என்பதான கருத்தியலை முன்வைக்கிறார். இவரே முதலாளித்துவத்தின் தந்தையாகவும் அறியப்படுகிறார். இவர் முன்வைக்கும் கருத்தியலின் அடிப்படையில் முதலாளித்துவ நாடுகள் உருவாகின்றன. அக்கருத்தியலை வளர்த்தெடுக்கின்றன. ஒரு தேசத்தின் வளம் அல்லது செல்வம் என்பது அதனுடைய ஏற்றுமதியில் உருவாகிறது. ஏற்றுமதியை அதிகரித்து இறக்குமதியைக் குறைத்திடல் வேண்டுமென்கிறார். ஒரு தேசத்தின் செல்வம் என்பது அது உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களே என்பது தான் அவரது பிரதான உற்பத்தி சார்ந்த கருத்தியலாக அமைகிறது. இந்த உற்பத்தியை அரசு தலையீட்டினால் தடுத்திடவோ, கட்டுப்படுத்திடவோ கூடாது. ஒரு கட்டற்ற உற்பத்தி வளர்ச்சியே, அதுவும் அரசின் தலையீடற்ற உற்பத்தியே மிக முக்கியமான பொருளாதாரக் கருதுகோளாகிறது. மேலும், ஒரு தேசத்தில் உற்பத்தி என்பது ஒரு புறம் வளர்த்தெடுக்கப்படும் பல பிரிவு தொழிலாளர்களும், மறுபுறம் சேர்க்கப்படும் மூலதனமும் சார்ந்தது என்கிறார், ஆடம் ஸ்மித். உற்பத்தியைப் பல சிறு பிரிவுகளாக பிரித்து சிறு சிறு சவால்களாக மாற்றி அதற்குரிய சிறப்பு தொழிலாளர் மூலம் உற்பத்தியை வடிவமைப்பதால் உற்பத்தியைப் பலப்படுத்திடவும் அதிகரித்திடவும் முடியும் என்கிறார். இதனால் உற்பத்தியாளர்கள் அல்லது முதலாளிகள் பெரும் லாபம் அல்லது


**முதலாளியக்கட்டமைப்புஎன்பதுலாபத்தையும், அதை உருவாக்கும் மூலதனத்தையும், வணிகத்தையும், உற்பத்தியையும் மையப்படுத்தி கட்டமைக்கப்படுகின்ற அரசும், சமூகமாக அமைந்தது. முதலாளியத்தோடு**



**கைகோர்த்து அதன் நலனுக்காக கொள்கை வகுத்துக் கொள்ளும் அரசு சாமானிய மக்கள் மீதான முதலாளிய சுரண்டலையும், அரச ஒடுக்குமுறையும் ஏவி ஆதிக்கத்தை நிலைநிறுத்துகிறது.**

**ஸ்மித் இந்த தன்னிச்சையான முதலாளித்துவ வளர்ச்சிக்கு அரசின் தலையீடு இருக்க இயலாது என்றார். ஆனால் அரசின் தலையீடு இல்லாமல் முதலாளியத்தின் தன்னிச்சையான போக்கு நிறைவடையாது என்றார் கார்ல் மார்க்ஸ். அரசும் முதலாளியமும் இணைந்தே முதலாளியக் கட்டுமானம் நிறைவடைகிறது என்றார்.**

உபரியை ஈட்ட முடியும். அதுமட்டுமில்லாமல் தொழிலாளர் சார்ந்திருக்காத எந்திரங்களை உருவாக்குவதும் அவசியம் என்கிறார். இதைக் கொண்டு அவர்கள் தங்களது மூலதனத்தை அதிகரித்துக் கொள்ள இயலும் என்கிறார். இவ்வாறான மூலதனச் சேர்க்கை மூலமாகவே அரசு அல்லது ஒரு தேசம் தனக்கான எதிர்கால செல்வத்தை உருவாக்கிக் கொள்ள இயலும். இந்த மூலதனத்தை உருவாக்கிக் கொள்வதும், அதை நிர்வகிப்பதும், அதை பாதுகாப்பதும் ஒரு தேசத்திற்கு இன்றியமையாதது எனும் ஸ்மித்தின் கருதுகோளே முதளாளித்துவ அரசுகளின் எழுதப்படாத கொள்கைகளாக விளங்கின. இதனடிப்படையிலேயே மேற்குலக அரசுகள், ஜப்பான் போன்ற முதலாளித்துவ அரசுகள் தங்களது மூலதனத்தை வளப்படுத்திக் கொள்ள எல்லாவகையான முயற்சிகளை மேற்கொள்வதையும், அதன் ஏற்றுமதி வணிகத்தைப் பாதுகாப்பதற்கான வழிவகைகளை உருவாக்கிக் கொள்வதையும், அதன் நிறுவனங்களின் நலனைப் பாதுகாப்பதிலும் முன்நிற்பதைக் கவனிக்க இயலும். ஒவ்வொருமுறையும் இரு தேசத் தலைவர்கள் சந்திக்கும் பொழுதும் வணிக ஒப்பந்தங்கள் குறிப்பாக ஏற்றுமதி – இறக்குமதி தொடர்பான ஒப்பந்தங்கள், தங்கள் நாட்டின் நிறுவனங்களுக்கான சலுகைகள் எனும் மூலதனம் தொடர்பான நிகழ்வுகள் மட்டுமே நடப்பதை நாம் கவனிக்க இயலும். மக்கள் சார்ந்த ஒப்பந்தங்களைக் காட்டிலும் இவைகளே பிரதானமானவையாக இருந்தும் வருகின்றன. இரு நாடுகளிடையே கல்வி, மருத்துவம், அறிவியல், சூழலியல் சார்ந்த ஒப்பந்தங்களைக் காட்டிலும் இந்த வணிக ஒப்பந்தங்களையே இவர்கள் முன்னெடுப்பதன் பின்னணி இந்த முதலாளியக் கொள்கைகளே ஆகும்.




ஸ்மித் முன்வைக்கும் மிக முக்கியமான கருத்தியல் என்பது இந்த முதலாளியம் 'தன்னிச்சையானது' என்கிறார். அதாவது ஒரு இடத்தில் ஒரு பொருளுக்கான தேவை அதிகமாகவும் அதன் இருப்பு குறைவானதாகவோ அரிதாகவோ இருக்குமெனில், அவ்விடத்திற்கு அப்பொருளைக் கொண்டு சேர்ப்பது லாபத்தைக் கொடுக்கும். இதனால் முதலாளிகள் அதிக மூலதனத்தை இவ்விடத்திற்கு கொண்டு சேர்ப்பார்கள் அல்லது முதலீடு செய்வார்கள் (அதாவது அதிக லாபம் ஈட்டுவதற்காக). ஆனால் அதே போல அவ்விடத்தில் அப்பொருளுக்கு மதிப்பும் (விலையும்) அதன் லாபமும் குறைவாக இருக்கும்பட்சத்தில் இந்த முதலாளிகள் தங்கள் நிறுவனங்களை வேறிடங்களுக்கு மாற்றிக் கொள்வர். இவ்வாறாக ஒரு தேசத்தின் முக்கியத் தேவைகளுக்கு ஏற்ப தன்னிச்சையாக முதலாளியம் தன்னைத் தகவமைத்துக் கொள்ளும் என்கிறார். இவ்வாறு இந்த முதலாளியம் தன்னிச்சையாக இயங்குவதைச் சாத்தியமாக்கவேண்டுமெனில் அவ்விடத்தில் சுதந்திரமான வணிகமும், அந்த வணிகத்திற்கான போட்டியும் இருக்கவேண்டும். இம்மாதிரியான வணிகத்திற்குள் அரசு கட்டுப்பாடுகளை வரி, கட்டுப்பாடு, விலைக் நிர்ணயம் கொண்டு வரும்பட்சத்தில் அல்லது குறிப்பிட்ட சில பொருட்களுக்கு மானியம் கொடுக்கும்பட்சத்தில் இந்த வணிகச் சூழல் சிதைந்துவிடும் என்பது ஸ்மித்தின் மிக முக்கியமான கருத்தாக்கம். ஆகவே அரசின் தலையீடோ, வரிவிதிப்போ, விலைக்கட்டுப்பாடு இல்லாத நிலையோ இருந்தால் மட்டுமே இந்த சுதந்திர வர்த்தக முதலாளியம் வளரும் என்கிறார். இதன் அடிப்படை என்பது வணிகத்தில் தலையிடுவது என்பது அரசின் வேலையில்லை என்கிறார். அரசு இதர பணிகளான கல்வி, உள்கட்டமைப்பு, பாதுகாப்பு, போன்றவற்றை மட்டுமே கவனத்தில் கொள்ளவேண்டுமென்கிறார்.

**அமெரிக்காவின் போர்ட் நிறுவனம் (உதாரணமாக) சாமானியர்கள் கூட விலைக்கு வாங்கக்கூடிய கார்களை உற்பத்தி செய்தது. இந்தக் கார்களை வாங்குவதற்கான கடன்களை வாரிக்கொடுகொடுத்தன, அமெரிக்க வங்கிகள். இந்த அபரிமிதமான வளர்ச்சி அதன் பங்குச் சந்தையில் பெருமளவு லாபத்தை ஈட்டியது. இந்த வளர்ச்சிப் போக்கு 1929ம் வருடத்தில் மிகப்பெரும் நெருக்கடியைச் சந்தித்தது.**

இப்படியாக முதலாளியம் தன்னிச்சையாக தம்மை வளர்த்துக் கொள்ளும் என்பது ஸ்மித் உட்பட பல பொருளாதார அறிஞர்களின் கூற்று. இந்த தன்னிச்சையான போக்கிற்கு அடிப்படையாக ஒரு புறத்தில் மூலதனம் சேர்வதும் மறுமுனையில் தொழிலாளர்கள் உருவாக்கமும் அவசியம் என்கிறார் ஸ்மித். இந்த கருதுகோளை முதன்முதலாக எதிர்கொண்டு இதன் உள்ளார்ந்த தீங்குகளை அறிவியல்பூர்வமாக உடைத்தவர் கார்ல் மார்க்ஸ். முதலாளியம் தன்னிச்சையாக தன்னைத்தானே கட்டுப்படுத்திக் கொள்வது என்பதை மார்க்ஸ் ஏற்றுக்கொண்டே இருந்தார். ஆனால் தேசத்தின் செல்வம் உருவாக்கப்படும் பொழுது ஒரு புறத்தில் ஸ்மித் சொல்வது போல செல்வம் அல்லது மூலதனம் சேர்வதைப் போலவே மறுமுனையில் ஏழை தொழிலாளர்களும், தீர்க்க இயலாத வறுமையும் உருவாகும் என்பதை மார்க்ஸ் தீர்க்கமாக வரையறை செய்தார். அதை வரலாறு நிரூபித்தது.

**1950, 60களில் பொருளாதார வளர்ச்சி அபரிமிதமாக ஏற்பட்டது. இப்படியான ஒரு வளர்ச்சியை முதலாளியம் அதன் வரலாற்றில் கண்டதில்லை. வேலையின்மை என்பது குறைந்ததால் தொழிலாளர்களின் பேரம் பேசும் வலிமை அதிகரித்திருந்ததால் கூலி உயர்வு ஏற்பட்டிருந்தது.**


ஸ்மித் இந்த தன்னிச்சையான முதலாளித்துவ வளர்ச்சிக்கு அரசின் தலையீடு இருக்க இயலாது என்றார். ஆனால் அரசின் தலையீடு இல்லாமல் முதலாளியத்தின் தன்னிச்சையான போக்கு நிறைவடையாது என்றார் கார்ல் மார்க்ஸ். அரசும் முதலாளியமும் இணைந்தே முதலாளியக் கட்டுமானம் நிறைவடைகிறது என்றார். அரசியல் தலையீடு இல்லாமை முதலாளியத்தின் அராஜகமான லாபவெறி, உழைப்புச் சுரண்டல், நிதியை–மூலதனத்தைச் சேகரித்தல் என்பது தொடர்ந்தது. இந்த முதலாளியச் சுரண்டலும், அதனால் முதலாளித்துவ நாடுகளின் ஆதிக்கப் போட்டிகள், அரசியல் முரண்பாடுகளுமே உலகின் முதல் உலகப்போரை உருவாக்கியது. இவ்வாறே உலகில் முதலாளித்துவம் தன்னை வளர்த்துக் கொண்டு தனது மூலதனத்தைக் குவித்துக் கொண்டிருந்தது. இந்த போக்கு 1929–30ம் வருடத்தில் மிகப்பெரும் நெருக்கடியைச் சந்தித்தது. 1920ம் வருடத்திலிருந்து அமெரிக்கா மிகப்பெரும் முதலாளிய லாபத்தை ஈட்டத்தொடங்கியிருந்தது. அமெரிக்காவின் போர்ட் நிறுவனம் (உதாரணமாக) சாமானியர்கள் கூட விலைக்கு வாங்கக்கூடிய கார்களை உற்பத்தி செய்தது. இந்தக் கார்களை வாங்குவதற்கான கடன்களை வாரிக் கொடுத்தன, அமெரிக்க வங்கிகள். இந்த அபரிமிதமான வளர்ச்சி அதன் பங்குச் சந்தையில் பெருமளவு லாபத்தை ஈட்டியது. இந்த வளர்ச்சிப் போக்கு 1929ம் வருடத்தில் மிகப்பெரும் நெருக்கடியைச் சந்தித்தது. முதலாளியம் தனது அபரிமிதமான லாபவெறிக்காக ஆற்றலுக்கு மீறிய செயற்கை தேவையைச் சந்தையில் உருவாக்கி வளர்த்தெடுத்த லாபம் வீழ்ந்தது மட்டுமல்லாமல் உற்பத்தியே நிறுத்தும் நிலையை நோக்கி நகர்ந்தது. ஒருகட்டத்தில் அமெரிக்காவில் வேலைவாய்ப்பற்ற விகிதம் 25% என எட்டியது. இது மிகப்பெரும் வறுமையை, ஏழ்மையை அடித்தட்டு மக்களிடத்தில் கொண்டு வந்தது.

மார்க்ஸ் சொன்னதைப் போல தேசத்தின் செல்வம் எனும் முதலாளிகளின் மூலதனம் ஒரு புறத்தில் குவிந்தது, மறுபுறத்தில் ஏழைகளின் வறுமை அதிகரித்தது. இது சந்தையின் வீழ்ச்சிக்கு சென்று நிறுத்தியது. இப்படியாக முதலாளியம் தனது மூலதன சேகரிப்பு பேராசையினால் மரணத்தின் வாயிலை வந்தடைந்தது. இந்தக் காலகட்டத்தில் இந்த பொருளாதார வீழ்ச்சிக்கு இரையாகாத தனித்த வளரும் நாடாக சோவியத் விளங்கியதை முதலாளித்துவ நாடுகளின் பத்திரிக்கைகளே எழுதின. ஏனெனில் அங்கே லாபம் என்பது மக்களுக்கானதாகவும், உற்பத்தி என்பது மக்களின் அடிப்படைத் தேவைகளுக்காகவுமே தீர்மானிக்கப்பட்டு வளர்த்தெடுக்கப்பட்டது. சோவியத் தனிநபர் மூலதன குவிப்பில் ஈடுபடாத காரணத்தினால் இந்த நெருக்கடியைச் சந்திக்கவில்லை. இவ்வாறாக 1930இல் உருவான உலகப் பொருளாதார நெருக்கடி முதலாளியத்தின் பலவீனத்தின் மீது வெளிச்சத்தைப் பாய்ச்சியது. இச்சமயத்தில் ஆடம் ஸ்மித்தின் கருதுகோளான கட்டற்ற சந்தையைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் ஈடுபடாமல் அரசு செயல்பட வேண்டுமென்கிற நிலை மாறவேண்டிய நெருக்கடி முதலாளியத்திற்கு ஏற்பட்டது. இதைக் கையாள முன்வைக்கப்பட்ட கோட்பாடு 'கெய்னீசிய பொருளியல்' கோட்பாடு எனப்பட்டது. இதை உருவாக்கியவர் ஜான் மெய்னார்ட் கெய்ன்சியன் பெயரிலேயே இந்தக் கோட்பாடு அழைக்கப்பட்டது. இவரது கோட்பாட்டின் படி, ஆடம் ஸ்மித் வழிவகைப்பட்ட தனியார் சந்தைகள், அவ்வப்போது எதிர்கொள்ளும் குறைபாடுகளும், வரம்புகளும் அதைப் பல்வேறு நெருக்கடிக்குள்ளாக்குகின்றன. உதாரணமாக பொருளாதார மந்த நிலை, பொருளாதார வீழ்ச்சி–பின்னடைவுகள் என தொடர்ந்து இதனால் உருவாகின்றன. இப்படியான நெருக்கடி இயங்குநிலைகளைத் தடுக்கவும், இதனால் ஏற்படும் இழப்புகளை ஈடு செய்யவும் அரசு விதிமுறைகள், விதிகள், வரி–நிதிக் கொள்கைகளைச் செய்ய முன்வரவேண்டும் என்றது. அதாவது அரசின் தலையீடு முதலாளியம் எதிர்கொள்ளும் பிரச்சனைகளைக் கையாண்டு அதை நிலைநிறுத்தும் ஆற்றலாக செயல்படும் என்பதே இதனால் முன்மொழியப்பட்ட கோட்பாடு. இந்தக் கோட்பாடும், வீழ்ந்து கொண்டிருந்த முதலாளியப் பொருளாதாரத்தைத் தூக்கி நிறுத்தவும், அமெரிக்கரான ரூஸ்வெல்ட்டின் 'புதிய ஒப்பந்தம்' (New Deal) உருவானது. இதன்படி அரச முதலாளியம் உருவெடுத்தது. இதன்படி முதலாளியத்தைச் சிக்கலில்

இருந்து மீட்க ரூஸ்வெல்ட் அரசு பல்வேறு முதலீடுகளை/உதவிகளைச் செய்தது. இந்த கெய்னீசியக் கொள்கைப்படி 'தேவையே(Demand)' பொருளாதார வளர்ச்சியை நிர்ணயம் செய்கிறது. இந்த 'தேவை'யின் அடிப்படையிலேயே வளர்ச்சிகள் உருவாகின்றன. உற்பத்தி வளர்ச்சியும், வணிக வளர்ச்சியும் இதர வளர்ச்சியும் இதனாலே கட்டுப்படுத்தப்படுகின்றன எனப்பட்டது. இந்த கெய்னீசியக் கோட்பாடு அரசின் தலையீட்டை ஆமோதிக்கிறது. முதலாளித்துவம் நிலைபெற அரசிற்கும் பொறுப்பு இருக்கிறது. அவ்வகையில் அரசாங்கத்தின் பொதுப்பணிகள் காரணமாக வாய்ப்புகளை ஏற்படுத்துதல் என்பது வலியுறுத்தப்பட்டது. குறிப்பாக நுகர்வோரின் வாங்கும் திறனை அதிகரிக்க வருமான நிர்வாகத்தை மேற்கொள்ளும் பணிகள் அரசுடையது. இவரின் முயற்சியாலேயே உலக வங்கி (World Bank), பன்னாட்டு நாணய நிதியம்(International Monetary Fund) உருவாயின. இவ்வாறு அரசின் தலையீட்டின் உதவியோடு இயங்கும் கெய்னீசிய முதலாளியம் அல்லது அரசின் தலையீடு இல்லாத கட்டற்ற சுதந்திரத்தோடு இயங்கும் ஆடம் ஸ்மித் வகையான முதலாளியம் என இருவகைக் கோட்பாட்டிற்குள் முதலாளிய விவாதங்கள் நடந்து வருகின்றன.

1930க்கு பின் ரூஸ்வெல்ட், மற்றும் கெய்னீசிய முறைகளால் முதலாளியப் பொருளாதாரம் தூக்கி நிறுத்தப்பட்டதும், வேலைவாய்ப்பின்மை குறைக்கப்பட்டதும் நிகழ்ந்தன. இரண்டாம் உலகப்போருக்கு பின்பான காலகட்டத்தில் முதலாளியம் மிகப்பெரும் சீரழிவிற்கு வந்தது. 'தேவை' சார்ந்த முதலாளியப் பொருளாதாரமோ, கட்டற்ற சுதந்திரமான பொருளாதாரமோ எதுவாகினும் நிலைபெற வேண்டுமெனில் அது தொழிலாளி வர்க்கத்துடன் சமரசம் செய்து கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தது. காலனிய நாடுகளை முதலாளித்துவ நாடுகள் இழந்திருந்தன. ஏகாதிபத்தியக் கட்டமைப்பு அலங்கோலமாகிக் கிடந்தது. இரண்டாம் உலகப்போரை வெற்றிகரமாக்கியது தொழிலாளி வர்க்கத்தின் போராட்ட குணமே எனும் பேருண்மை வெட்ட வெளிச்சமாகி இருந்தது. முதலாளித்துவ நாடுகளின் சீர்கெட்ட பொருளாதாரம், ஆதிக்க வீழ்ச்சி, முதலாளித்துவத்தின் உருக்குலைந்த நிலை ஆகியவற்றைச் சரி செய்து கொள்ள வேண்டிய தேவை முதலாளியத்திற்கு இருந்தது. மேலும் வளர்ந்து வருகின்ற சோசலிய ஆதிக்கமும் இந்த அச்சத்தை அதிகரித்தது. வேலைவாய்ப்பு அதிகரித்தது. இது ஒருகட்டத்தில் 4 சதவீதமாக குறைந்தது. இதனால் தேவை அதிகரித்திருந்தது, முதலீடும் அதிகரித்தது, வளர்ச்சிவீதமும் அதிகரித்ததால் 1950,60களில் பொருளாதார வளர்ச்சி அபரிமிதமாக ஏற்பட்டது. இப்படியான ஒரு வளர்ச்சியை முதலாளியம் அதன் வரலாற்றில் கண்டதில்லை. வேலையின்மை என்பது குறைந்ததால் தொழிலாளர்களின் பேரம் பேசும் வலிமை அதிகரித்திருந்ததால் கூலி உயர்வு ஏற்பட்டிருந்தது. இப்படியான ஒரு வளர்ச்சி நிலையில் இருந்த முதலாளியம் 1970களில் ஏற்பட்ட நெருக்கடியில் மேலும் ஒரு சிக்கலுக்குள்ளாகியது. 1970களில் பொருட்களில் விலையில் ஏற்பட்ட சரிவு, வேலைவாய்ப்பின்மையின் அதிகரிப்பு ஆகியவை இந்த வீழ்ச்சிக்குக் காரணமாயின. இந்த நெருக்கடி இன்றளவும் முதலாளியத்தையும் ஆட்டி படைக்கிறது. 1970க்கு பிறகு சந்தைக்கட்டுப்பாடு நீக்கப்பட்டது; தனியார்மயமானது வர்த்தகத்தையும், அரசியலையும், ஊடகத்தையும், கல்வியையும் இதர துறைகளையும் ஆட்கொண்டன. அதாவது கெய்னீசிய கொள்கையாளர்களை விரட்டிவிட்டு முழுக்கட்டுப்பாடற்ற வர்த்தக சந்தை பொருளாதாரத்திற்குள் முதலாளியம் ஆடம் ஸ்மித் வகையறா கோட்பட்டிற்குள் நகர்ந்தது. இந்த சகாப்தத்தை இவர்கள் நவீன தாராளவாதம் (neo liberalism) என்றார்கள். 1970க்குப் பின்னர் மனித உழைப்பைக் குறைக்கும் வகையிலான தொழிற்நுட்ப முன்னேற்றங்களில் ஈடுபட்டு, கூலியை மட்டுப்படுத்தியது. இச்சமயத்தில் கொண்டுவரப்பட்ட கம்ப்யூட்டர் வகையிலான வேலைத்திட்டங்கள் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களின் வேலைக்கும் உலை வைத்தன. குறைந்த கூலிக்கு தொழிலாளர்கள் கிடைக்கிறார்கள் என்பதால் முதலாளிகள் தங்களது தொழிற்சாலைகளை வேறு நாடுகளுக்கு நகர்த்தினார்கள். இதனால் வேலைவாய்ப்பின்மை அதிகரித்தது. ஒருபுறம் வேலைவாய்ப்பின்மை மறுபுறம் குறைந்த கூலி எனும் நிலை உழைக்கும் மக்களுக்கு உருவானது. மேலும் இந்தக் காலகட்டத்தில் தொழிலாளி என்பவன் தொழிலாளியாக மட்டுமல்லாமல் அவன் ஒரு நுகர்வாளராக மாற்றம் செய்யப்பட்டான். முதலாளிகள் உற்பத்தி செய்கின்ற பொருட்களை நுகரும் நபராக கட்டமைக்கப்பட்டான். பொருட்களை வாங்கும் திறன் கொண்ட 'நியாயமான கூலி'களுக்குப் பதிலாக கடன்கள் வழங்கப்பட்டன. ஊதியங்கள் சமூகத்தின் வாங்கும் திறனுக்கு ஏற்ப உயர்த்தப்படாமல் நிறுத்தப்பட்டன. மேலும் லாபம் கொழிக்கும் துறைகளில் முதலீடுகள் செய்யப்பட்டன. இதனால் பெரும் லாபத்தை முதலாளிகள் அனுபவித்தார்கள். ஒருபக்கம் உபரி பெருக்கம் ஏற்பட்டு முதலாளிகளின் மூலதனம்/செல்வம் பெருகியது; மறுபுறம் தொழிலாளர்களின் ஊதியம் வீழ்ந்தது. இப்படியான ஒரு நிலையை இவர்கள் 'புதியப் பொருளாதாரம்' என்றெல்லாம் அழைக்க ஆரம்பித்தார்கள்.

சந்தையின் கட்டற்ற தன்மையினால் விலைகுறைவு என்பதெல்லாம் பொய்க்கனவாகிப் போய், நிச்சயமற்ற பொருளாதாரத்தன்மையும், ஊசலாட்டமும் ஏற்பட்டன. இந்நிலையில் ஏற்பட்ட சோவியத்தின் வீழ்ச்சி முதலாளியம் நிலைபெற்ற கோட்பாடாக வெற்றிபெற்றதாக முதலாளியச் சிந்தனையாளர்கள் கொண்டாடினார்கள். தொழிற்சங்கங்களின் செல்வாக்குகள் முடக்கப்பட்டன. அரசியல், பொருளாதாரம், பண்பாடு ஆகியவை வலதுசாரி திசை நோக்கி திருப்பிவிடப்பட்டன. இப்படியான சூழல் நீண்டு 2000ஆம் ஆண்டின் துவக்கத்தில் பங்குச் சந்தை வீழ்ச்சியும், ரியல் எஸ்டெட் துறையின் சரிவு, பணப்புழக்கம் இல்லாத நிலை மற்றும் பொருளாதார பின்னடைவு (Recession) என தொடர்ந்து சமமற்ற ஊசலாட்டமான நிலைக்கு முதலாளியம் சென்றது. அதாவது 'ஸ்மித்' வகையறா பொருளாதாரவாதிகளின் ஆதிக்கத்தால் ஒருபுறம் மூலதனம் குவிந்தாலும் மறுபுறத்தில் வறுமையும், திண்டாட்டமும் அதிகரித்ததானது பொருளாதார சமமற்ற நிலையை வளர்த்தெடுத்தன. குடும்பங்கள் தங்களது தேவைகளுக்காக கடுமையாக உழைக்கவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டன. குறைவான கூலி அல்லது மெய்யான கூலி உயர்வு இல்லாதது அதை பேரம் பேசி பெற்றுக்கொள்ளும் தொழிற்சங்க அமைப்புகளின் செல்வாக்கு குறைந்த பின்னர் முழுமையான நிதிபாரத்தை குடும்பத்தின் பிற உறுப்பினர்களும் சுமக்கும் படியான நிலை ஏற்பட்டு மூச்சுமுட்ட உழைக்க வேண்டியதாயிற்று. ஆக இவர்களது அதிக உழைப்பு (அதிகரித்திருந்த உற்பத்தித் திறனும்) குறைந்த கூலியும் முதலாளிகள் பெரும் லாபத்தையும், உபரியையும் ஈட்டும் நிலையைக் கொடுத்தன. இப்படியான சக்கையாக பிழியப்பட்ட உழைப்பாளர்களின் உழைப்பினால் 'மூலதனக்குவிப்பு' மறுபுறம் வலிமையானதாக எதேச்சதிகாரப் போக்குடன் வளர்ந்து வந்தது. கடந்த நூற்றாண்டில் வேறெப்போதும் இல்லாத அளவிற்கு இந்த நிதி மூலதன குவிப்பு என்பது மிக வேகமாகவும், அசுரத்தனமாகவும் வளர்ந்து அரசாங்கங்களை நிர்வகிக்கிற, கட்டுப்படுத்துகிற தனிப்பெரும் ஆற்றலாக வளர்ந்து நின்றது. அதே நேரத்தில் பல்வேறு கடன், வீட்டுத் தேவைகள், கல்விக்கான கடன், மருத்துவ தேவைகளுக்கான செலவுகள், மருந்து செலவுகள், உணவு–உடைக்கான செலவுகள் என்று பணத்தின் தேவை அதிகரித்தது மட்டுமல்ல சொந்தமாக வீடு வாங்குவதனால் ஏற்பட்ட கடனும் மக்களைப் பிழிந்தெடுத்தது. 1975ஆம் ஆண்டு அளவில் 734 பில்லியன் டாலராக இருந்த வீட்டுக்கடன் தொகை என்பது முப்பது வருடங்களில் அதாவது 2006 ஆம் ஆண்டிற்குள் 12.81 ட்ரில்லியனாக பலமடங்காக உயர்ந்திருந்தது. கிட்டதட்ட 20 மடங்கு அதிகரித்தது எனலாம். இப்படியான நிலையில் உழைப்பாளிகளின் குடும்பங்கள் கடுமையான நெருக்கடிகளை எதிர்கொண்டன. கல்வி விலை மதிக்க இயலாததாகி இருந்தது. மருத்துவம் எதிர்கொள்ள முடியாத செலவினமாகியது. குடும்பங்கள் சிதைவுற்றன. உலகிலேயே அதிக மனநோயாளிகளைக் கொண்ட நாடாக அமெரிக்கா மாறியது.




**உழைப்பாளிகளின் குடும்பங்கள் கடுமையான நெருக்கடிகளை எதிர்கொண்டன. கல்வி விலை மதிக்க இயலாததாகி இருந்தது. மருத்துவம் எதிர்கொள்ள முடியாத செலவினமாகியது. குடும்பங்கள் சிதைவுற்றன. உலகிலேயே அதிக மனநோயாளிகளைக் கொண்ட நாடாக அமெரிக்கா மாறியது.**

இந்த காலகட்டத்தில் நிதி மூலதனம் தன்னை அசுர வளர்ச்சியிலேயே வைத்துக் கொள்ளவேண்டுமென்கிற பேராசை 2008இன் முதலாளிய நெருக்கடிக்கு வழிகோலியது என்பது மிகையல்ல. மேலே சொன்னபடியாக உழைப்பாளர்களைச் சுரண்டிக் கொழுத்த மூலதனச் செல்வமானதை மீண்டும் பலமடங்கு பெருக்குவதற்கு, அதாவது சுருக்கு வழியில் ஈட்டுவதற்காக ஊக வணிகம் முன்வைக்கப்பட்டது. அதாவது கடன்வாங்கி வீடு வாங்கும் நிலையை ஊக்குவித்தது. இது ஏழை நடுத்தர குடும்பத்தினரை நோக்கி முன்வைக்கப்பட்டது. அதிக வட்டி விகிதங்களுக்கு கடன் தொகை வழங்கப்பட்டது. இந்த கடன்களே 'சப்-ப்ரைம்' கடன்கள் எனப்பட்டன. கடன்களை வாங்கி இம்மக்கள் வீடு வாங்கினார்கள். உண்மையான உழைப்பிற்கு ஏற்ற ஊதியம் இல்லாத மக்களால் இந்த அதிகப்பட்சக் கடனைத் திருப்பி செலுத்த இயலாத நிலை ஏற்பட்டது. மேலதிகமாக உழைக்கவோ, கடன்

**2008இல், 1929இல் நடந்த நெருக்கடிகளில் முதலாளியத்தைக் காப்பாற்றிய அரசு தலையீடுகள் போதுமானதாக இருக்க இயலுமா அல்லது 1346இல் நடந்ததைப் போன்ற அடிப்படை மாற்றத்தினை உருவாக்கக்கூடிய வழிமுறைகளை இப்பிரச்சனை திறந்து விடுமா என்பதை கவனிக்க வேண்டும்**

கட்டுரை குறித்த கருத்துக்களை தெரிவிக்க
may17voice@gmail.com

வாங்கவோ இயலாத நிலையில் திருப்பிக் கடனைக் கட்ட இயலாத நிலைக்குச் சென்ற இம்மக்கள் கையை விரித்தனர். இவ்வாறு அசுர லாபத்தை ஈட்டும் நோக்கில் முதலாளியம் ஈடுபட்டு ஒரு பெரும் சரிவை 2008இல் சந்தித்தார்கள். பெரும் வங்கிகள், மூலதன நிறுவனங்கள், கார்ப்பரேட் ஜாம்பவான்கள் கடும் நெருக்கடியில் வீழ்ந்து திவாலாகிப் போனார்கள். 1929க்குப் பின்பான மிகப்பெரும் வீழ்ச்சியை முதலாளித்துவம் சந்தித்தது.

இந்த மீள முடியாத நெருக்கடியில் வீழ்ந்த 'கட்டற்ற நியோ லிபரல்' முதலாலியத்தை மீட்டெடுக்க ஒபாமாவின் தலைமையிலான அமெரிக்க அரசு முன்வந்து மக்களின் பணத்தைக் கொண்டு இந்நிறுவனங்களை மீட்டது. இவ்வாறு பெரும் நிறுவனங்கள் திவாலாகிப் போய்விட, அதை நிர்வகிக்கும் முதலாளிகள், உயர் நிர்வாகிகள் எவ்வித நட்டமுமின்றி வீட்டிற்கு சென்றுவிட, இந்நிறுவனங்களில் வேலை பார்த்தவர்கள் எவ்வித இழப்பீடுமின்றி நிலைகுலைந்து போய் அரசினால் கைவிடப்படுகிறார்கள். இவ்வாறான ஏற்ற இறக்கத்துடனேயே முதலாளிய அமைப்பு தனது முரண்களை வளர்த்துக் கொண்டிருக்கிறது. 1929–30இல் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சி நிலையின் பொழுதும், 2008இல் ஏற்பட்ட வீழ்ச்சியின் பொழுதும் கெய்னீசிய கோட்பாட்டின் படி அரசானது முதலாளித்துவத்தின் உறுதித்தன்மைக்கு துணை செய்யும் ஆற்றலாகியது. காரல்மார்க்ஸ் சொன்னதைப் போன்று அரசு என்பது முதலாளித்துவ கட்டுமானத்தின் மிகமுக்கியமான அங்கமான ஒன்று என்பது தொடர்ந்து நிரூபணமானது.

முதலாளிய சரிவுகளினால் பாதிக்கப்படும் மக்கள் மீது தனது கரிசனத்தைச் செலுத்தாமல் முதலாளிய நட்டங்களை இம்மக்கள் மீது திருப்பி விடுவதும், இம்முதலாளிய நிறுவனங்களை, கட்டமைப்புகளைப் பாதுகாக்க அரசு கைகொடுப்பதுமான நிலையையே இதுநாள் வரை முதலாளிய சனநாயகமானது நியாயப்படுத்தி வந்திருக்கிறது. இந்த அரசுகள் முதலாளியத்தின் முரண்களை அல்லது சுரண்டலை மாற்றியமைக்கும் ஆற்றல் கொண்டவையாக இல்லாமல் அதை பாதுகாக்கும் நிறுவனங்களாகவே செயல்பட்டன. நட்டங்கள், வரிகள், கடன்கள் மக்கள் மீதும், லாபங்கள், உபரிகள், மூலதனக்குவிப்புகள் முதலாளிய ஆற்றல்களிடத்திலும் கொண்டு சேர்க்கப்பட்டன. இப்படியாக தொடர் தோல்விகளையே முதலாளியம் சந்தித்துக் கொண்டிருக்கின்றது.

## கொரோனாவும், முதலாளியமும்


2008இன் நெருக்கடியிலிருந்து முழுமையாக மீள இயலாத நிலையில் முதலாளியம் கொரோனாவினால் உருவாகி இருக்கும் புதுவிதமான நெருக்கடியைச் சந்தித்திருக்கிறது. ஏற்கனவே பொருளாதார மந்த நிலையை எதிர்கொண்டிருக்கும் முதலாளியம் இந்த புதிய நெருக்கடி என்பதை எவ்வாறு எதிர்கொள்ளப் போகிறது, எவ்வாறு இதன் கூட்டாளியான அரசு எவ்வாறு கைகொடுக்கப்போகிறது என்பதை கவனித்தல் வேண்டும்.

அடுத்துவரும் கட்டுரைகளில் முதலாளியம் எதிர்கொண்டுள்ள நெருக்கடிகளை விரிவாக பார்க்கலாம். இதுவரை முதலாளியம் எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடிகளின் அடிப்படைக் காரணிகளாக இருந்தவை சந்தையின் வாங்கும் திறனோ, சந்தையின் 'தேவை (Demand)' காரணிகளாகவோ இருந்திருக்கின்றன. உற்பத்தி மற்றும் உற்பத்தியான பொருளைக் கொண்டுசேர்த்தல் ஆகியவை நெருக்கடிக்குள்ளாகவில்லை. ஆனால் இம்முறை இவை நெருக்கடிக்குள்ளாகி இருக்கின்றன. இதைப்போல பிரதானக் காரணியாக கவனிக்கத் தக்கவையாக இருப்பது உலக அளவில் பெருகி இருக்கின்ற கடன் சுமை. இந்த நெருக்கடிகளைக் கடந்து ஒவ்வொரு தேசமும் வர்த்தகம் என்பதைக் கடந்து உள்நாட்டுச் சந்தை நெருக்கடிகளையும் சேர்த்து எதிர்கொள்ளும் நிலை இருக்கிறது. பலவீனமான அரசுகள், தேங்கிப் போய் நிற்கும் பொருளாதார வளர்ச்சி, சந்தைகளில் வாங்கும் திறனற்று இருக்கும் மக்கள், மலைபோல வளர்ந்து நிற்கும் உலகக்கடன் என சூழ்ந்திருக்கும் சூழலில் கொரோனா கொண்டு சேர்த்த நெருக்கடிகள் முதலாளியத்தை எவ்விடத்திற்கு கொண்டு சேர்க்கும் என்பதை விவாதிக்கும் காலம் இது. அமெரிக்காவின் வெள்ளை மாளிகையில் நடந்த பத்திரிக்கையாளர் சந்திப்பில், ஒரு நிருபர்," நோய்க்கான அறிகுறியே இல்லாதவர்கள் பரிசோதனையை மேற்கொள்ள இயலும் பொழுது, (தேவைப்படுவோர்) பரிசோதனையை எளிதாக செய்ய இயலாமல் வரிசையில் இருக்க நேர்கிறதே, (வசதியான–வாய்ப்புள்ள) உயர்மட்ட தொடர்புடையவர்கள க் ால் அவ்வரிசைகளில் முன்னால் செல்ல முடிகிறதே எப்படி?" என்கிறார். இதற்கு அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப், "இது நடக்கவில்லை எனச் சொல்ல மாட்டேன். ஆனால் வாழ்க்கையின் கதை இப்படியாகத்தான் இருக்கிறது" என்கிறார். நெருக்கடிகளிலும் இதுவே முதலாளியத்தின் அப்பட்டமான கதை. 2008இல், 1929இல் நடந்த நெருக்கடிகளில் முதலாளியத்தைக் காப்பாற்றிய அரசு தலையீடுகள் போதுமானதாக இருக்க இயலுமா அல்லது 1346இல் நடந்ததைப் போன்ற அடிப்படை மாற்றத்தினை உருவாக்கக்கூடிய வழிமுறைகளை இப்பிரச்சனை திறந்து விடுமா என்பதை கவனிக்க வேண்டும்.


கட்டற்ற சந்தையும், கட்டுப்பாடற்ற வணிகத்தையும் மூலதனத்தையும் ஈட்டுவதற்கு தனியார்மயம், உலகமயம், தாராளமயம் எனும் பொருளாதார வழிமுறை வழியாக உலகைச் சுரண்டிய இந்த முதலாளியமே இந்த நெருக்கடியின் அடிப்படை காரணியாக இருக்கிறது. இந்த கொள்கைகள் காரணமாக மக்கள் சார்ந்த மருத்துவ–போக்குவரத்து–இதர கட்டமைப்புகள் தனியாரின் லாபவெறிக்காக பலியிடப்பட்டதால் மேற்குலக நாடுகளில் மக்கள் கொத்து கொத்தாக கொல்லப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். சுற்றுப்புறச் சூழலைச் சிதைத்து, உணவுச் சங்கிலியைத் தொழிற்மயமாக்கி, மருத்துவத்தைத் தனியார்மயமாக்கி மக்கள் சார்ந்த கட்டமைப்புகளை வேட்டையாடிய முதலாளியம் மக்களைக் கொரோனா தொற்று எனும் நெருக்கடிக்கு தள்ளி இருக்கிறது.இந்த நெருக்கடி யாருக்கான மாற்றங்களைக் கொண்டு வரும் என்பதையும் கவனிக்க வேண்டும். 1970களில் முதலாளியம் நெருக்கடியைப் பயன்படுத்திக் கொண்டு பல்வேறு தொழிற்நுட்பங்களைக் கொண்டுவந்து தொழிலாளிகளை நெருக்கடிக்குள்ளாக்கியது. தற்பொழுதும் கூட அது 'ஆட்டோமேசன்' எனும் தொழிலாளர்களே இல்லாத உற்பத்திக் கட்டமைப்புகளை அது மேலும் முன்னகர்த்தலாம். ஆனால் முதலாளியம் எதிர்முனையில் உருவாக்குகின்ற வறுமையும், வேலையின்மையின் நிலையும் இதே வாய்ப்புகளை முதலாளியத்திற்கு அனுமதிக்குமா என்பதும் கவனத்தில் எடுக்கவேண்டிய இதர காரணிகள்.

கிழக்கு ஆசிய நாடுகளான தென்கொரியா, வியாத்நாம், கம்போடியா, சிங்கப்பூர் போன்ற நாடுகள் சிறப்பான முறையில் இந்நோய் தொற்றைக் கட்டுப்படுத்துகின்றன. அதே நேரத்தில் வளர்ந்த பொருளாதாரங்களான ஐரோப்பிய நாடுகள், அமெரிக்கா போன்றவை கையாளாக முடியாமல் திணறுவதை உலகம் காண்கிறது. கிழக்கு ஆசிய நாடுகள் தொடர்ந்து இது போன்ற தொற்று நோய்களைக் கையாண்ட அனுபவம் கொண்டவையாக இருப்பதும், மேற்குலகம் இது போன்ற நோய்த்தொற்றை எதிர்கொள்ள தயாராக இல்லாத நிலையில் இல்லாமல் இருக்கலாம். ஆனால், இந்த நேரத்தில் வேறொரு கேள்வியும் நமக்கு எழுகிறது.

மேற்குலகைவிட ஆரோக்கியமான நிலையில் இருந்த ஆசிய நாடுகள் இந்த நெருக்கடியைச் சிறப்பாக கையாள்கின்றன. பொருளாதார வளர்ச்சி மந்தமான நிலையில் இருக்கும் நாடுகள் இந்த நெருக்கடியைக் கையாளாமல் மக்களை நெருக்கடிக்குள்ளாக்கின. இதில் உள்ளார்ந்த ஒரு முதலாளித்துவ நோக்கமும் இருக்கலாம் என நவோமிக்லீன் போன்றவர்கள் முன்வைக்கும் 'அதிர்ச்சி அரசியல்' யுக்தியில், முதலாளியம் தன்னுடைய தோல்வியை மறைக்க இந்த கொரோனா நெருக்கடியைப் பயன்படுத்தி தன்னை பாதுகாக்க அரசின் உதவிகளை எதிர்கொள்ளும் என்கிறார். ஆனால் இவையனைத்திலும் நம் கண்முன்னே தெரிவது, முதலாளியம் மீண்டுமொரு கடுமையான நெருக்கடியைச் சந்தித்திருக்கிறது. இந்நெருக்கடியிலிருந்து மீளுமா அல்லது மாற்றுப் பொருளாதார வழிமுறைகளை உலகம் முன்வைக்குமா என்பதை வரலாறு எழுதும். அந்த வரலாற்றுக் கடமைகள் முற்போக்கு செயல்பாட்டாளர்களுக்கானது. முதலாளித்துவ வரலாற்றுக்கு முடிவுரையை எழுதும் வாய்ப்பை உலகம் மீண்டும் பெற்றிருக்கிறது. ●





**உலக முதலாளிய வளர்ச்சிப் போக்கு:** உலக முதலாளிய உற்பத்தியின் வளர்ச்சிப் போக்கு 1950–2016 வரையிலான ஆண்டு பற்றிய வரைபடம். 1950களில் முதலாளியம் மிகப்பெரும் வளர்ச்சியை, உறுதிநிலையை எட்டியது. இது 1965 வரை தொடர்கிறது. பின்னர் சரிய ஆரம்பிக்கும் இதன் லாபங்களின் நிலை 1983 வரை தொடர்கிறது. 'புதிய–தாராளமயக் கொள்கை' யெனும் 'கட்டற்ற சந்தை' அடிப்படையில் தனது லாபவிகிதத்தை அதிகரிக்க முயலுகிறது. இந்நிலையில் தொழிலாளர்களின் ஊதியங்கள் குறைக்கப்படுவதும், கடன் சார்ந்து தொழிலாளர் தேவைகளை நிவர்த்தி செய்துகொள்ள தள்ளப்படுவதும் நிகழ்கிறது. இதனால் கிடைத்த லாப விகிதம் மீண்டும் 1998க்குப் பின்னர் சரியத் தொடங்குகிறது. 2008இல் அமெரிக்காவில் ஏற்பட்ட மிகப்பெரும் சரிவைத் தொடர்ந்து, முதலாளியத்தால் மீண்டும் வளர்ச்சி நிலையை எட்ட இயலாமல் 2010லிருந்து தடுமாறிக் கொண்டிருப்பதை இந்த ஆவணப்படம் அப்பட்டமாக காட்டுகிறது. 1950களில் தொழிலாள சமூகத்தோடு ஒரு சமரசப் பொக்கையும், அவர்களுக்கான கூலி உயர்வையும் ஏற்றுக் கொண்டு செயல்பட்ட முதலாளியம் கண்ட வளர்ச்சியானது பின்னாளில் லாபவெறியால் தொழிலாளர் ஊதியத்தை குறைத்தது முதல் பல்வேறு சுரண்டல் நடைமுறைகளைக் கொண்டு வந்ததனால் சந்தித்த தொடர் சரிவுகளை வரலாறு நமக்குக் காட்டுகிறது.





உலக கார்ப்பரேட் நிறுவனங்கள் கடந்த 20 வருடங்களில் சந்தித்த ஏற்ற இறக்கங்களின் வரைபடம் இது 1997இல் இருந்து ஏற்ற இறக்கத்துடன் கார்ப்பரேட்டுகளின் லாபவளர்ச்சி (ஒரு வருடத்திற்கும் அடுத்த வருடத்திற்குமான வளர்ச்சி) ஏற்றமும், இறக்கமும் இருந்தாலும், ஒட்டு மொத்த அளவில் (புள்ளிக் கோடு) அது வீழ்ச்சியை நோக்கி சென்று கொண்டிருப்பதைக் காணமுடிகிறது

**நில உடைமையும் முதலாளியமும்**




**வளர்ச்சி**

**நில உடைமையில் நிலம் மீதான அதிகாரமும், முதலாளித்துவத்தில் நிலத்தின்மீதான அதிகராமும்**



### கொரோனா சூழ் உலகும், முதலாளியமும்

# கொரோனா நோயும் முதலாளித்துவக் கிருமியும்

**உற்பத்தி–வினியோகச் சங்கிலியை அறுத்து சந்தையைச் சிதைக்கும் கொரோனா நெருக்கடியினால் சிக்கலுக்குள்ளாகி இருக்கும் கார்ப்பரேட்டுகள்**

இக்கட்டுரை எழுதும் நாள் வரை 1,35,569 மக்கள் கொரோனாவிற்கு பலியாகி இருக்கிறார்கள். இது என்று முடியும் என்கிற எந்தவித கணக்கும் இல்லாமல் உலகின் வாழ்க்கை முறையை முற்றிலுமாக மாற்றி அமைத்திருக்கிறது. கொரோனாவிற்கு பின்பான உலகம் என்பது முற்றிலும் வேறாக அமையும். இந்தியாவில் 450க்கும் மேற்பட்டோர் அரசின் எண்ணிக்கைப்படி பலியாகி இருக்கின்றனர். எந்தவித முன்னேற்பாடுகளும் இல்லாமல் உலகம் இந்த நோய்க்கிருமி தொற்றை எதிர்கொள்கிறது. ஒவ்வொரு நாடும் ஒவ்வொருவிதமான அனுபவத்தை நமக்கு சொல்லிக்கொண்டிருக்கின்றன.

இந்த நோய் இயற்கையாக வெளிக்கிளம்பியதா அல்லது செயற்கையாக உருவாக்கப்பட்டு ஒரு கிருமியுத்தமாக நடத்தப்படுகிறதா என பலவகையான கேள்விகள் எழுந்து கொண்டிருக்கின்றன. சீனாவின் வூகான் பிரதேசத்தில் என்பது வரலாற்று ரீதியாக கடந்த 19ஆம் நூற்றாண்டிலேயே இதுபோன்ற தொற்றுநோய்க்கு உள்ளாகி பல லட்சக்கணக்கான மக்கள் இறந்திருக்கிறார்கள். ஆனால் இப்போதைய கொரோனா வகைக்கிருமி என்பதன் புதுவகையான செயல்பாடு என்பது பலகேள்விகளை எழுப்பி இருக்கிறது. இக்கிருமி வலிமையான தாக்கத்தைச் செலுத்தும் வகையில் தம்மை தகவமைத்துக் கொள்ளும் கிருமியாக அமைந்திருக்கிறது. இந்தக் கிருமித் தொற்று பலவகையான மாற்றங்களை உலகின் பொருளாதாரத்திற்குக் கொண்டு சேர்க்கும் என்பதில் ஐயமில்லை.


**உலகப் பொருளாதார வளர்ச்சி 2.5% எனும் அளவில் கிட்டதட்ட ஊர்ந்து கொண்டிருந்தது. இதில் வளர்ந்த நாடுகளான அமெரிக்கா 2% எனும் அளவிலும், ஜப்பான் 1% எனும் அளவில் தான் வளர்ச்சியைக் கொண்டிருந்தன**




இந்த நோய்த்தொற்று ஆரம்பித்த 2019இன் டிசம்பரில் உலகப் பொருளாதாரம் மந்த நிலையை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. அதாவது உலகப் பொருளாதார வளர்ச்சி2.5% எனும் அளவில் கிட்டதட்ட ஊர்ந்து கொண்டிருந்தது. இதில் வளர்ந்த நாடுகளான அமெரிக்கா 2% எனும் அளவிலும், ஜப்பான் 1% எனும் அளவில் தான் வளர்ச்சியைக் கொண்டிருந்தன. இந்தியாவும், சீனாவும் மிகமோசமான வளர்ச்சி விகிதத்தையே காட்டின. 2020ஆம் ஆண்டிற்கான பொருளாதார வளர்ச்சி நிலை என்பது பின்னோக்கியே இருக்குமென OECD எனும் 36 வளர்ச்சியடைந்த நாடுகளின் அமைப்பு சொல்லி இருக்கிறது. இதன்படி சீனாவின் வளர்ச்சியானது கடந்த 30 வருடங்களில் இருந்ததை விட மிகவும் மோசமான நிலையை அடைந்திருக்கிறது. இதே போல இத்தாலியும் தொடந்து 17 மாதங்களாக மிக மோசமான உற்பத்தியைக் கொண்டிருக்கிறது. பிரஞ்சு தேசத்தின் நிலையும் இதே போல வளர்ச்சி நிலை மிகக்குறைவாக இருக்கிறது. இப்படியான மோசமான பொருளாதார சூழலின் நடுவிலேயே இந்தக் கொரோனா தாக்கம் ஏற்பட்டது.

தொற்றுநோய்களின் தாக்கம் குறித்து ஆய்வுகளை மேற்க்கொண்ட ஆஸ்திரேலியாவின் பல்கலைக்கழகம் 2006இல் ஒரு செய்தியைச் சொன்னது. அதாவது ஏதேனும் ஒரு உலகளாவிய தொற்று நோயினால் இறப்பு விகிதம் 1.2% இருக்குமெனில் வளர்ந்த நாடுகளின் உற்பத்தியில் 6% தடுக்கப்படும் என்றது. கொரோனாவினால் ஏற்படும் இறப்பு விகிதம் 3%லிருந்து 9%வரை வளர்ந்த நாடுகளில் இருப்பதைக் கணக்கில் எடுத்தால் வளர்ந்த நாடுகளின் பொருளாதார மாற்றம் மிகமோசமானதாகவே இருக்க இயலும்.

> **சாமானிய மக்களிடத்தில் நிதி சென்று சேரும் வகையில் மக்களுக்கான சம்பள உயர்வும், இதர வரி விதிப்பு விலக்கும், அடிப்படை தேவைகளுக்கான மானியமும், சிறு-குறு வணிக நிறுவனங்களுக்கு குறைந்த வட்டியும், நீண்டகால கடனும், குறைந்த வரிவிகிதமும் கேட்கப்பட்டன.**

### பொருளாதார சவாலை எப்படி உலக முதலாளிகள் எதிர்கொள்ளப் போகிறார்கள்?

'முதலாளிகள்' என்பதைவிட முதலாளித்துவ அரசுகள், முதலாளித்துவ நிறுவனங்கள் என்பது மிகப்பொருத்தமாக அமையும். இந்த முதலாளித்துவ நிதி மூலதன அமைப்புகளுக்கு உதவி செய்யும் விதத்தில் அமெரிக்க அரசு வட்டி விகிதத்தைக் குறைத்துள்ளது. கனடாவும் இதையே செய்தது. ஐ.எம்.எஃப். மேலும் உலகவங்கி கிட்டதட்ட 50பில்லியன் டாலர்களை (கிட்டதட்ட 3லட்சத்து50000 கோடி ரூபாய்) வழங்கித் தயாராகிறது. இதில் 10பில்லியன் டாலர்களை ஏழை நாடுகளுக்கு வட்டி இல்லாத கடனாக தர முன்னுக்கு வந்தது. இந்த முயற்சிகள் அடிப்படையில் ஸ்டாக் மார்க்கெட் எனப்படும் பங்குச் சந்தையினைச் சிறிது வலுப்படுத்தியது. எனினும் போதுமான விளைவினை ஏற்படுத்தாமல் தொடர்ந்து பங்குச் சந்தை கீழிறங்கிக் கொண்டே இருந்தது. இந்தியாவிற்கும் ஒரு பில்லியன் டாலர் பணத்தைத் தருகிறது. (இந்த அறிவிப்பு வந்து சேர்ந்த அதே காலத்தில் இந்தியாவானது சவுதி அரசின் உபரியாக உற்பத்தி செய்து வீணாகிக்கொண்டிருக்கும் கச்சா எண்ணையை வாங்குவதாக கூறுகிறது. இதன் மூலம் சவுதியின் பொருளாதாரத்தைப் பாதுகாக்க இயலுமென அமெரிக்கா கருதுகிறது. அமெரிக்காவின் அழுத்தத்தால் இது நடந்திருக்கிறது)

இது எதனால் ஏற்படுகிறது என்பதைக் கவனிக்க வேண்டும். பங்குச் சந்தையின் வளர்ச்சி என்பது மக்களின் வாங்கும் திறனையும், நிறுவனங்களின் விற்பனைத் திறனையும் வைத்து ஏறி இறங்குவதாகவே அறியப்பட்டது. இதுவே 'மார்க்கெட் எக்கானமி' எனப்படும் 'சந்தை வணிகம்' எனப்பட்டது. அதாவது பொருட்களுக்கான தேவையே அனைத்து வளர்ச்சி–உற்பத்தி–வணிகம் ஆகியவற்றினை முடிவு செய்வதாக முதலாளிகளால் முன்மொழியப்பட்ட கருத்தியல் இது. (அதாவது மக்கள் அதிகமாக பொருட்களை நுகர்ந்தால் / வாங்கினால் பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும் என்பது இன்றைய முதலாளிய பொருளாதார வளர்ச்சியின் அடிப்படை தத்துவம்.)

மக்களிடத்தில் பொருட்களின் தேவை உயர உயர, வாங்கும் திறன் அதிகரிக்க அதிகரிக்க பொருளாதாரம் மேம்படும் என்றார்கள். இதன் அடிப்படையிலேயே வணிகம் உயர்வதும், உற்பத்தி


உயர்வும் அதன் மூலமாக லாபம் உயர்வும் என தொடர் சங்கிலியாக அறியப்பட்டது. இதன் மூலமாக நிறுவனங்களின் பங்குகள் உயர்கின்றன. விற்பனை அதிகரிப்பதால் லாபங்கள் பங்குச்சந்தையில் பங்கிடப்படுவதுமாக கணக்கிடப்பட்டது. இதன் அடிப்படையிலேயே தேசத்தின் வளர்ச்சி விகிதம் என்பதும் கணக்கிடப்பட்டது. எனவே ஒரு தேசத்தின் வளர்ச்சிக்கு பொருள் தேவையும், அதை மக்கள் வாங்கும் திறனும் அவசியம் என வளர்ச்சி என்பது சொல்லப்பட்டதைக் கொரோனாவினால் உண்டான நெருக்கடி எவ்வாறு மாற்றுகிறது என்பதை பதைபதைப்புடன் முதலாளிய உலகம் கவனிக்கிறது.

பெருமளவில் பணத்தை மூலதனத்தில் இறக்கியப் பின்னரும் (மூலதனத்தில் தொடர்ச்சியாக நிதி சேர்க்கப்பட்டும்) நிறுவனங்கள், லாபங்கள், பங்குகள் இறங்கு முகத்தைச் சந்தித்தன. 2019இன் இறுதிவரை மக்களின் வாங்கும் திறன் இல்லாமல் போனதாலேயே பொருளாதாரம் கீழே சென்றது என்கிற கருத்து முன்வைக்கப்பட்டது. இந்த பொருளாதார மந்தநிலை என்பது மக்களிடத்தில் வாங்கும் திறன் அதிகரிக்கும் பட்சத்தில் மீளும் எனும் யோசனைகளும் முன்வைக்கப்பட்டன. உலக நாடுகளில் இது குறித்து பல்வேறு மாறுபட்ட கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. கார்ப்பரேட்டுகளுக்கு சார்பான நிதி ஒதுக்கீடு, மானியம், கடன், வரிக்குறைப்பு, வட்டிவிகிதம் குறைப்பு என பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. இதை கார்ப்பரேட்டுகளின் சார்பில் அரசுகளுக்கு அழுத்தமாக கொடுக்கப்பட்டது. அதே நேரத்தில் சாமானிய மக்களிடத்தில் நிதி சென்று சேரும் வகையில் மக்களுக்கான சம்பள உயர்வும், இதர வரி விதிப்பு விலக்கும், அடிப்படை தேவைகளுக்கான மானியமும், சிறு-குறு வணிக நிறுவனங்களுக்கு குறைந்த வட்டியும், நீண்டகால கடனும், குறைந்த வரிவிகிதமும் கேட்கப்பட்டன. முறைசாரா தொழிலாளர்கள், விவசாயக் கூலிகள், உதிரித்தொழிலாளர்கள் ஆகியோரின் வேலைவாய்ப்பை அதிகரிப்பதும், வேலையை உறுதி செய்வதும், கூலி உயர்வைக் கொடுப்பதும் இந்த நெருக்கடியைச் சமாளிக்க உதவ இயலும். அதாவது அரசின் உதவி என்பது கார்ப்பரேட்டுகளுக்கா அல்லது சாமானிய மக்களுக்கா என்கிற கேள்விகளே கடந்த வருட இறுதியில் பெரும் விவாதங்களாக இருந்தன. (இந்த கோரிக்கைகள் வலுப்பெறாத வகையிலேயே இந்தியா போன்ற நாடுகளில் திசை திருப்பும் வகையிலான சட்டங்கள், பிரச்சாரங்கள் வலதுசாரிகளால் முன்னெடுக்கப்பட்டன. சாமானிய மக்கள் ஒற்றை ஆற்றலாக இக்கோரிக்கையை நோக்கி நகர்ந்துவிடக் கூடாது என்பதற்காகவே மதவெறி பரப்பப்பட்டு மக்கள் ஒற்றுமை பிளக்கப்பட்டது.)

ஆனால் கொரோனா நிலை இந்த விவாதங்களை மேலும் புதிய பரிணாமத்திற்கு கொண்டு சென்றிருக்கிறது. அதாவது மக்களின் 'வாங்கும்திறன்' முற்றிலும் இல்லாத நிலை ஒரு புறம் வலுப்படுத்தியது. அதே போல மறுபுறம் இதுவரை இல்லாத புதிய பிரச்சனையைக் கொண்டு வந்தது. அதாவது சந்தைக்கு தேவைப்படும்'உற்பத்தித் திறன்' முழுமையாக கொரோனாவால் பாதிக்கப்பட்டது. சந்தைக்கு பொருட்களைக் கொண்டுவரும் வழிவகைகள் முழுமையாக பாதிக்கப்பட்டன. அதே நேரம் பொருட்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் இயங்க முடியாத நிலை ஏற்பட்டதால் பொருட்களை உற்பத்தியே செய்ய இயலாத நிலை ஏற்பட்டது. ஆகவே இந்த சங்கிலித் தொடர் முழுமையாக சிதைந்தது.

இந்த நிலை விற்பனையை/ சந்தையைக் கடுமையாக பாதித்திருக்கிறது. பொருள் உற்பத்தியும் அதை சந்தைக்குக் கொண்டு வந்து சேர்க்கும் வழிவகையும் அடைபட்ட காரணத்தினால் புதிய நெருக்கடியைக் கார்ப்பரேட்டுகள் சந்தித்திருக்கிறார்கள். பொருட்களைச் உற்பத்தி செய்ய முடியாத நிலையும், உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை சந்தைக்குக் கொண்டுவர இயலாமல் போன நிலையும் மோசமான சூழலை இந்த முதலாளிகளின் சந்தைகளுக்குக் கொண்டு வந்திருக்கிறது.

ஊரடங்கு, கடையடைப்பு, தனித்திருத்தல் காரணமாக தொழிலாளர்களால் நிறுவனங்களுக்கு செல்ல முடியவில்லை, அல்லது அவர்களால் குறைந்த அளவிலேயே வேலைகளில் ஈடுபட முடிகிறது. இதனால் உற்பத்தி என்பது குறைந்து கொண்டே வந்திருக்கிறது. பெரிய வணிக நிறுவனங்களால் போதுமான உற்பத்தியைச் செய்ய இயலாமல் போனது. இதே போல ஏற்கனவே உற்பத்தியான பொருட்களைச் சந்தைக்குக் கொண்டு செல்லும் வழிமுறைகளும் அடைபட்டு நிற்கின்றன. இதையே, உற்பத்தி சங்கிலி அறுந்து போன நிலை. இது உழவு போன்ற தொழில்களுக்கும் இது நடந்து கொண்டிருக்கிறது. இப்படியாக சந்தை என்பது முடங்கிக் கிடக்கிறது.




உதாரணமாகச் சொல்வதெனில், வாகனங்கள் சாலையில் செல்வது குறைய ஆரம்பித்ததால் ஆட்டோமொபைல் நிறுவனங்களின் விற்பனையும் முடக்கி இருக்கிறது. இந்த ஆட்டோமொபைல் நிறுவனங்களின் தொழிற்சாலைகளும் முடங்கிக் கிடக்கின்றன. இந்த ஆட்டோமொபைலுக்கு தேவைப்படும் உதிரிபாகங்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்களும் முடங்க ஆரம்பித்தன. இது சங்கிலியாகச் சென்று வாகன உற்பத்தியில் ஈடுபடும் தொழிலாளர்கள், இதை கொண்டு சேர்க்கும் பணியில் இருக்கும் கண்டெய்னர்-லாரி போக்குவரத்து நிறுவனங்கள், இவர்களைச் சார்ந்து இயங்கும் சிறுவணிகக்கடைகள், இந்த வாகனங்களை விற்பனை செய்யும் நிறுவனங்கள், இந்த நிறுவனத்தில் பணி செய்யும் பணியாளர்கள், இந்த வாகனங்களை விலை கொடுத்து வாங்க கடன் கொடுக்கும் நிறுவனங்கள், வங்கிகள், அதன் பணியாளர்கள் என ஒட்டு மொத்த சங்கிலியே முடங்கி நிற்பதால் முதலாளித்துவச் சங்கிலி திகைத்து நிற்கிறது.

இதே போல சாலைகளில் வாகனப் போக்குவரத்தும் என்பதும், மக்களின் போக்குவரத்தும் குறைந்ததும் பெட்ரோலியப் பொருட்களின் விற்பனை சரிகிறது. இது பெட்ரோலியச் சந்தையைப் பாதிக்கிறது. பெட்ரோலியத்திற்கான தேவை குறைகிறது. இது உலக அளவில் பெட்ரோலியத்தின் விலையைப் பாதிக்கிறது. பெட்ரோலியத்தை மையமாக வைத்து இயங்கும் வளைகுடா (சவூதி உள்ளிட்ட அரபு) நாடுகளின் பொருளாதாரம் ஆட்டம் காண்கிறது. இந்த நாடுகளின் பெட்ரோலிய வணிகத்தை மையமாக வைத்து அமெரிக்க டாலரின் மதிப்பு கணக்கிடப்படுவதால், அமெரிக்க டாலரின் மதிப்பும் கேள்விக்குள்ளாக்கப்படுகிறது. இது அமெரிக்காவின் டாலரோடு தொடர்புடைய இதர மூலதன நிறுவனங்களைக் கடுமையாக பாதிக்கின்றன. டாலர் மதிப்பு ஆட்டம் காணுமெனில் அது உலகின் ஏகாதிபத்திய மையமாக இருக்கும் அமெரிக்காவின்'வால்ஸ்ட்ரீட்' எனும் பங்கு சந்தையைக் கடுமையாக பாதிக்கும். இவ்வாறு இந்த பாதிப்புகள் உலகெங்கும் எதிரொளிக்க ஆரம்பிக்கிறது. இந்த சந்தைகளோடு தொடர்புடைய மென்பொருள் நிறுவனங்களும் சரிவைச் சந்திக்கின்றன. ஆட்டோமொபைல், மென்பொருள் ஆகியவற்றின் வளர்ச்சியைச் சார்ந்து இயங்கும் ரியல் எஸ்டேட் எனும் கட்டுமானத் தொழிலும் சரிவைச் சந்திக்கிறது. கட்டுமான வணிகம் தடைபடுமெனில் அதைச் சார்ந்து இயங்கும் சிமெண்ட், இரும்பு, பெயிண்ட், மின்பொருட்கள், பெயிண்ட், செங்கல் என பெரும் சங்கிலித் தொடர் சரிவை எதிர்கொள்கிறது. இவ்வாறு அடுக்கி வைக்கப்பட்ட சீட்டுக்கட்டு கோபுரம் சரிவது போல பொருளாதார வீழ்ச்சி நடக்கிறது.

வாங்கும் திறன் மட்டுமல்லாமல் உருவாக்கும் திறனும் அடிபட்டு போன நிலையில், அனைத்து வழிகளிலும் உலக முதலாளியம் திணறிக்கொண்டிருக்கிறது. ஏற்கனவே திணறிக்கொண்டிருந்த உலக முதலாளிய ஆற்றல்கள் இந்த கொரோனா பாதிப்பால் பல சவால்களை எதிர்கொள்கின்றன. மக்களிடம் இல்லாமல் போன கையிறுப்பு, அல்லது வாங்கும் திறனை அதிகரிக்கும் எந்த முயற்சியும் இல்லாது சூழல் சிக்கலாகிக் கொண்டிருக்கிறது. மக்களின் பொருளாதார வளத்தை வளப்படுத்த வழிவகையை ஏற்படுத்தாமல் சரிந்து கொண்டிருக்கும் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு முட்டுக் கொடுத்துக் கொண்டிருக்கிறது அரசுகள். பெரும் லாபங்களைக் குவிப்பதற்கு மக்களின் உழைப்பையும், செல்வத்தையும் சுரண்டிக் கொழுத்திருக்கிறார்கள் பெரும் பணக்காரார்கள்.


உலக அளவில் இந்த பணக்காரர்களின் செல்வங்கள் பலமடங்கு உயர்ந்திருக்கின்றன. ஒரு உதாரணத்திற்கு சொல்வதென்றால் 2019ஆம் வருட காலத்தில் முகேஸ் அம்பானியின் சொத்து மட்டுமே ஒரு லட்சத்தி 30,000 கோடி ரூபாய் அதிகரித்திருக்கிறது. இது தமிழ்நாட்டின் பட்ஜெட்டைத் தொட்டுவிடுமளவிலான வருமானம். இந்தியாவின் வளமிக்க ஒரு மாநிலமான தமிழ்நாட்டின் வருமானத்தையே மிஞ்சக் கூடிய பணத்தை ஒரு தனிநபர் ஒரு வருட காலத்திற்குள் குவித்திருக்கிறார். இன்னும் எளிமையாகச் சொல்லவேண்டுமெனில் 8 கோடி மக்களின் வருமானத்தினை ஒருவரே பெற்றிருக்கிறார் என்றால் இந்தியாவில் செல்வம் எங்கே சேர்கிறது, யாரிடமிருந்து அது செல்கிறது என்பதை யூகிக்கலாம். மக்களிடமிருக்கும் செல்வம் இது போன்ற தனிப்பெரும் பணக்காரர்களின் பைகளுக்குச் சென்றுவிடுகிறது. இப்படியாக ஒருபக்கத்தில் குவிந்த பணமும், மறுபுறம் எவ்வித ஆதாரமும் இல்லாத ஏழைகளும் நிறைந்த தேசத்தில் முதலாளிகளின் சந்தையில் யார் பொருட்களை வாங்குவார்கள்? வாங்குவதற்கு எவரிடத்தில் போதிய பணம் இருந்திருக்க முடியும்?. இதுதான் 2020ம் வருடத்தின் ஆரம்பத்தில் இருந்த நிலை. இது கொரோனாவினால் மேலும் மோசமடைந்து தற்போது ஏழைமக்களின் வாழ்வாதார வேலையைத் தின்று கொண்டிருக்கிறது. இது மட்டுமல்லாமல் முதலாளிகளின் உற்பத்தி சாலைகளில் பணி செய்ய தொழிலாளர்கள் இல்லாமல் முடங்கி நிற்கிறது. உற்பத்தியானவற்றைச் சந்தைக்கு கொண்டு செல்வதும் இயலாமல் போகிறது. இதுவே இன்றைய பொருளாதாரச் சூழல். இச்சமயத்தில் தான் பெரும் வங்கிகள் பெரும்

**உலக அளவில் இந்தப் பணக்காரர்களின் செல்வங்கள் பலமடங்கு உயர்ந்திருக்கின்றன. 2019ஆம் வருட காலத்தில் முகேஸ் அம்பானியின் சொத்து மட்டுமே ஒரு லட்சத்தி 30,000 கோடி ரூபாய் அதிகரித்திருக்கிறது. இது தமிழ்நாட்டின் பட்ஜெட்டைத் தொட்டுவிடுமளவிலான வருமானம்.**

கார்ப்பரேட்டுகளுக்கு அளவுக்கு மீறிய நிதியைக் கடனாகக் கொடுத்து திவாலாகிக் கொண்டிருக்கிறது. வங்கிகளின் இந்த நிதி என்பது அனைத்து மக்களிடமிருந்தும் பெறப்பட்ட சேமிப்பு தொகையே என்பதை நாம் மறக்கக்கூடாது. இந்த கடனைச் செலவழித்து சுருட்டிக் கொண்டு பெரும் பணக்காரர்கள் நாட்டைவிட்டு வெளியேறினார்கள், பலர் நாட்டிற்குள்ளேயே இன்றும் பாதுகாப்பான வாழ்க்கை வாழ்கிறார்கள். இவ்வாறு நிதியைப் பொறுப்பின்றி சீரழித்த சுயநலவாத முதலாளிகளான அனில் அம்பானி போன்ற முதலாளிகளுக்கு மறுவாழ்க்கையை அளிப்பதையே பிப்ரவரி 2020இல் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் வழங்கிய பட்ஜெட்டில் விரிவாக முன்மொழிந்திருக்கிறார். (இது குறித்த கட்டுரை 2020 பிப்ரவரி குரல் இதழில் வெளியாகி இருக்கிறது).

### இந்தியப் பணக்காரர்களின் செல்வக் குவிப்பு

இந்திய நாட்டின் செல்வத்தில் 77.4சதம் மக்கள் தொகையில் 10சதமாக இருக்கும் பணக்காரர்களிடம் இருக்கிறது. மீதம் உள்ள 60 சதம் ஏழைகளுக்கு 4.7 சதமான சொத்துக்களுக்கு சொந்தமாக இருக்கின்றனர்.




தகவல் உதவி: Suisse

இந்தியாவின் மொத்த செல்வ வளத்தில் கிட்டதட்ட நான்கில் மூன்று பங்கு (அதாவது 77%) வெறும் 10 சதவீதமான பெரும் பணக்காரர்கள் வசம் இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இதில் குறிப்பாக சொல்லவேண்டுமெனில் இந்தியாவின் மக்கள் தொகையில் வெறும் ஒரு சதவீத பணக்காரர்கள் இந்தியாவின் மொத்த செல்வத்தில் பாதியைத் தம் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார்கள். இந்தியாவின் பெரும்பாலான ஏழை மக்கள் இந்தியாவின் மொத்த செல்வத்தில் வெறும் 4.7% அதாவது 5 சதத்திற்கும் குறைவான அளவையே வைத்திருக்கிறார்கள் என்கிறது. இவ்வாறு இந்தியாவின் மிக மோசமான ஏழைப் பணக்கார பிரிவு புதிய பொருளாதாரக் கொள்கைக்குப் பின் ஏற்பட்டிருக்கிறது. (23 அக்டோபர் 2018இல் இந்தியாவின் மிண்ட் இதழில் வெளியான ஸ்விஸ் வங்கியான 'க்ரெடிட் சுயிஸ்' நிறுவனத்தின் ஆய்வை மேற்கோள் காட்டி செய்தி வெளியிட்டிருந்தது.)

**சுயத்தொழில், சிறு-குறு தொழில் நிறுவனங்களை மக்கள் முன்னெடுப்பதை நசுக்கும் பணியில் கடுமையான கட்டுப்பாடுகளை மோடி அரசு விதிக்கிறது. கடன் கொடுப்பதும், வரிவிகிதத்தை குறைக்காமல் மறுப்பதும், வரிச்சுமையை அதிகரிப்பதுமாக மோடி அரசின் பட்ஜெட் அமைந்தது. அரசிடம் நிதி இல்லாமல் போனதால் லாபமாக இயங்கும் பொதுத்துறை நிறுவனங்களைத் திவாலாகிப்போன இந்தியாவின் பெரும் முதலாளிகளுக்கு மோடி அரசு தாரை வார்க்கிறது**

எனவே ஒரு புறம் ஏழைகளின் நிதி சேமிப்பு பணக்கார முதலாளிகளிடம் தாரை வார்க்கப்படுகிறது. அப்பணத்தினை மீட்க முடியாமல் வங்கிகள் திவாலாகிக் கொண்டிருக்கிறன. திவாலாகிப்போன நிறுவனங்கள் மக்களின் வேலைவாய்ப்பைச் சுரண்டிக்கொண்டிருக்கின்றன. வங்கிகளை மீட்க மக்களிடமிருக்கும் சேமிப்புப் பணத்தையே பயன்படுத்துகிறது அரசு. ஒருபுறத்தில் பெரும் நிறுவனங்களும், மக்கள் விரோத வங்கிகளும் மக்களின் நிதியால் மீட்கப்படுகின்றன, மறுபுறத்தில் மக்கள் மீது வரிகள் கடுமையாக்கப்படுகின்றன. இது தவிர மக்களின் வேலை வாய்ப்பு என்பது பறிக்கப்படுகிறது. சுயத்தொழில், சிறு-குறு தொழில் நிறுவனங்களை மக்கள் முன்னெடுப்பதை நசுக்கும் பணியில் கடுமையான கட்டுப்பாடுகளை மோடி அரசு விதிக்கிறது. கடன் கொடுப்பதும், வரிவிகிதத்தை குறைக்காமல் மறுப்பதும், வரிச்சுமையை அதிகரிப்பதுமாக மோடி அரசின் பட்ஜெட் அமைந்தது. அரசிடம் நிதி இல்லாமல் போனதால் லாபமாக இயங்கும் பொதுத்துறை நிறுவனங்களைத் திவாலாகிப்போன இந்தியாவின் பெரும் முதலாளிகளுக்கு மோடி அரசு தாரை வார்க்கிறது. பெருமளவில் லாபத்தில் இயங்கிக்கொண்டிருந்த அரசு நிறுவனங்கள் விற்கப்பட்டன. மக்களுக்கு லாபநோக்கமில்லாமல் சேவை செய்யும் அரசு துறைகளும் சிதைக்கப்பட்டன. ஆனால் இந்த துறையின் எச்சங்களே கொரோனா நெருக்கடிகாலத்தில் மக்களுக்கு துணையாக இயங்கிக்கொண்டிருக்கின்றன. பொதுச்சுகாதாரக் கட்டமைப்பு, தொலைத்தொடர்பு, போக்குவரத்து, ரயில்வேதுறை, ஏர் இந்தியா நிறுவனம், ரேசன்கடைகள் ஆகியவையே கொரோனா தொற்று காலத்தில் மக்களுக்குத் தேவைப்படும் சேவையை வழங்கின.

இப்படியாக மக்கள் சுரண்டப்பட்டு நசுக்கப்பட்டுக்கொண்டிருக்கும் போதே கொரோனா பாதிப்பு இந்தியாவைத் தாக்குகிறது. இதுவே உலக அளவிலான நிலையாகவும் இருக்கிறது. உலகம் முழுவதும் வலதுசாரி அரசுகள் அரசு நிறுவனங்களைத் தனியாருக்குத் தாரை வார்ப்பதும், மக்கள் நலத்திட்டங்களை ரத்து செய்வதும், பெரு வணிகங்களுக்கு அதிக நிதி உதவியை வாரி வழங்குவதும், பணக்காரர்களுக்கு வரியிலிருந்து விலக்கு அளிப்பதுமானப் பணிகளைச் செய்து வருகின்றன. அமெரிக்கா, இங்கிலாந்து, ப்ரான்ஸ், முதற்கொண்டு இந்தியா, இலங்கை என இந்த வலதுசாரி அரசுகள் இவ்வாறே இயங்கிக் கொண்டிருக்கின்றன. தென்கொரியா, வியட்நாம், சிங்கப்பூர் போன்ற பொருளாதாரத்தில் உறுதித்தன்மையைச் சற்றே பெற்ற கீழ்த்திசை நாடுகள் கொரோனா தொற்றைத் தடுக்கக் கையாண்ட வழிகள் எதையும் மேற்குலக நாடுகள் கையாளவில்லை. இந்த நெருக்கடியைப் பயன்படுத்தி தங்களது மக்கள் விரோத கொள்கைகளான தனியார்மயத்திலிருந்து, கார்ப்பரேட் நிதி மூலதன நிறுவனங்களுக்கான மானியத் தொகையை வழங்குவதற்கும் இந்த கொரோனா தொற்றைப் பயன்படுத்திக் கொள்கின்றனவா எனும் கேள்வி எழாமல் இல்லை.


இப்படியான மோசமான நிலை உலகெங்கும் நிலவுவதற்குக் காரணமாக மார்க்சிய ஆய்வாளர்கள் முன்வைக்கும் காரணிகள் என்பன, உற்பத்தி மந்தமான நிலை, ஒரே கார்ப்பரேட்டின் கீழ் அனைத்தும் வருவது அதாவது கார்ப்பரேட்டுகளின் ஏகாதிபத்திய நிலை, மக்களின் மிக மோசமான வாழ்நிலை. இவற்றை நாம் அப்பட்டமாக இந்தியச் சூழலில் காணமுடியும். இப்படியான சூழலில் கொரோனாவின் மூலமாக உருவாகி இருக்கிற நெருக்கடியும், இந்திய மோடி அரசு செய்கின்ற மக்கள் விரோத நடவடிக்கைகளும் மிக மிக மோசமான சூழலை இந்தியாவிற்குள் உருவாக்கப் போகின்றது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

இந்த சூழலை இப்பின்னணியில் இருந்து தொடர்ந்து கவனித்து வருவது நமக்கு அவசியம். இப்படியான காலத்தில் தான் கொரோனாவை எதிர்கொள்ளும் பொருளாதாரத் திட்டம் குறித்த நிர்மலா சீதாராமனின் அறிவிப்பானது முழுமையாகவே கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு சாதகமாக அமைந்தது. கார்ப்பரேட் நலன்களை மட்டுமே கணக்கில் எடுத்துக் கொண்டு திட்டங்கள் அறிவிக்கப்பட்டன. நாட்டின் 21 நாட்கள் ஊரடங்கினால் பாதிப்படையும் ஏழை எளிய மக்கள், அன்றாட தொழிலாளர்கள், சிறுகுறு தொழிலகங்கள் என எவற்றையும் கணக்கில் எடுக்காத அந்த அறிவிப்புகள் மிக மோசமான பொருளாதார விளைவையே ஏற்படுத்தும். பணமதிப்பிழப்பு நடவடிக்கையின் பொழுது ஏற்பட்ட பொருளாதார முடக்க நிலையை விட சிக்கலான நிலை இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. அன்றைய பொழுதில் அடித்தட்டு மக்களின் சேமிப்பும், சிறுவணிகர்களின் மூலதனமும் சுரண்டப்பட்டது. இதை அவர்கள் மீட்டெடுக்க முயலும்பொழுதே ஜி.எஸ்.டி அவர்கள் மீது சுமத்தப்பட்டது. இந்நிலை ஒட்டுமொத்த மக்களையும் முடக்கியது. இதைவிட மிக மோசமான நிலைக்குள் நாம் நுழைந்து கொண்டிருக்கிறோம். நெருக்கடிக்குள்ளாகி இருக்கும் முதலாளித்துவ உற்பத்தியின் சங்கிலித்தொடரையும், அதன் மூலதனத்தையும் அரசு பாதுகாக்கப் போகிறதா அல்லது இதனால் சிதைக்கப்பட்ட மக்களை காக்கப் போகிறதா என்பதே இனிவரும் வரலாறு. ●

கட்டுரை குறித்த கருத்துக்களை தெரிவிக்க
may17voice@gmail.com

## தொழிலாளர் வைப்பு நிதி (பிஎஃப்) வட்டி விகிதத்தைக் குறைக்கும் முடிவை உடனடியாக கைவிடு!

### மத்திய அரசை மே பதினேழு இயக்கம் வலியுறுத்தல் – 2 மார்ச் 2020



**கடுமையாக உழைக்கும்** தொழிலாளர்கள் தனது கடைசி காலத்தில் சிரமமின்றி வாழ்க்கையை நடத்துவதற்காக தொடங்கப்பட்டதுதான் தொழிலாளர் வைப்பு நிதி பிஎப் திட்டம்.இந்தத் திட்டத்தின்படி தொழிலாளர்கள் ஊதியத்தில் ஒரு பங்கும், அரசு ஒரு பங்குமாக செலுத்தும். இப்படி செலுத்தப்பட்ட பணத்திற்கு வருடத்திற்கு இவ்வளவு என்று ஒரு வட்டி விகிதத்தை மத்திய அரசு நிர்ணயிக்கும். இதை ஆண்டுக்காண்டு குறைந்து கொண்டே வருகிறது மத்திய அரசு.இப்போது இந்த வட்டி விகிதம் 8.65% இருக்கிறது. இதை 8.5% குறைக்க மத்திய அரசு முடிவு செய்திருப்பதாக செய்திகள் வருகிறது. அதாவது தொழிலாளர்களின் பிஎஃப் பணத்தில் 18 லட்சம் கோடியை அரசு பங்குச் சந்தையில் முதலீடு செய்திருக்கிறது. இதில் திவான் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் கம்பெனி மற்றும் ஐ எல் அண்ட் எப்எஸ் (IL&FS) என்ற இரண்டு நிறுவனத்தில் 4,500 கோடி அடங்கும். மேற்சொன்ன இரண்டு நிறுவனங்களும் தற்போது திவாலாகி விட்டது. ஆகவே தொழிலாளர்களின் பணம் 4,500 கோடி காந்தி கணக்கில் சேர்க்கும் நிலை ஏற்படிருக்கிறது. இதை காரணம் காட்டித்தான் வட்டி விகிதத்தைக் குறைக்க மத்திய அரசு முடிவெடுத்து இருக்கிறது.மத்திய அரசின் இந்த முடிவானது பல லட்சக்கணக்கான தொழிலாளர்களின் வாழ்வில் கைவைக்கும் நடவடிக்கையாகும். ஏற்கனவே மத்தியில் மோடி அரசு வந்தபின்பு தொழிலாளர்களுக்கு எதிரான பல்வேறு மசோதாக்களை எந்தவித விவாதமும் இல்லாமல் சட்டமாக நிறைவேற்றியிருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்த வட்டி விகிதக் குறைப்பு மேலும் தொழிலாளர்களின் வாழ்வை நிர்மூலமாகி விடும். எனவே இந்த நடவடிக்கையை மத்திய அரசு உடனடியாக கைவிட வேண்டும் என்று மே 17 இயக்கம் வலியுறுத்துகிறது.



# பேராசிரியர் அறிவரசன் அவர்களுக்கு வீரவணக்கம்

**“தமிழ், தமிழர் என்று இறுதிமூச்சு அடங்கும்வரை வாழ்ந்தவர். ஈழத்தில் இரண்டாண்டுகள் தங்கி விடுதலைப் புலிகளுக்கு தமிழ் கற்றுத்தந்தவர்”**

> நாடென்கிறது நில அமைப்பினால் அதற்கு சிறப்பில்லை. அது மேடாக இருக்கலாம், காடாக இருக்கலாம், பள்ளமாக இருக்கலாம். அங்கு வாழ்கின்ற மக்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதில் தான் ஒரு நிலத்திற்கு சிறப்பு’

திருநெல்வேலி மாவட்டம் கடையத்தைச் சேர்ந்த தமிழ் பேராசிரியர் மு.சே குமாரசாமி என்ற பேராசிரியர் அறிவரசன் அவர்கள் மார்ச் 4ஆம் தேதி,2009 அன்று முதுமையின் காரணமாக அவரது இல்லத்தில் காலமானார்.

தமிழ் மொழி, இனம் காக்க பல்வேறு போராளிகளையும் பேராசிரியர்களையும் உருவாக்கிய சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக் கழகம் தான் ஐயா அறிவரசன் அவர்களையும் உருவாக்கியது. பட்டம் பெற்றவர் ஆழ்வார்குறிச்சி கலை அறிவியல் கல்லூரியில் தமிழ் பேராசிரியராக பணியாற்றி 1996இல் ஓய்வு பெற்றவர். ஓய்வுக்குப் பின் தனக்கென்று இல்லாமல் கடையத்தில் திருவள்ளுவர் மன்றம் என்ற ஒன்றைத் தொடங்கிதமிழ்தமிழர் அரசியலை முன்வைத்து பல்வேறு தமிழ் காப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டார்.தந்தை பெரியாரின் போர்வாளான விடுதலை, உண்மை ஆகிய இதழ்களில் துணை ஆசிரியராக சிறுது காலம் பணியாற்றி இருக்கிறார். அதுபோக ’மக்கள் தாயகம்’ என்னும் மாத இதழைச் சொந்த ஊரிலிருந்தே நடத்தியிருக்கிறார். இவரின் தமிழ்காப்பு நடவடிக்கையைப் பார்த்து ஈழத்திலுள்ள விடுதலைப் புலிகளுக்கு தமிழ் இலக்கண இலக்கியப் பயிற்சி அளிக்க தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களால் ஈழத்துக்கு அழைக்கப்பட்டார். அங்கு சுமார் இரண்டாண்டுகள் தங்கி தமிழ் பயிற்சியைப் போராளிகளுக்கு அளித்தார். அதுமட்டுமில்லாமல் வருடந்தோறும் பிரான்ஸ், கனடா, சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளுக்கு சென்று அங்கு புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்களுக்கு தமிழ் வகுப்பு எடுத்து நல்ல தமிழர்கள் பலரை உருவாக்கிய பெருமை இவருக்கு உண்டு.

அய்யா அவர்களின் இன்னொரு சிறப்பு என்பது வெறும் தமிழ் சொல்லிக்கொடுப்பதோடு தன்பணியைச் சுறுக்காமல் தமிழுக்கும் தமிழர்களுக்கும் எப்போதெல்லாம் இன்னல் வருகிறதோ அப்போது அதை தடுத்து நிறுத்த சனநாயக சக்திகளோடு களத்திலும் போராடும் போராளி. அப்படியாக மே 17 இயக்கம் திருநெல்வேலியில் நடத்திய எல்லா பொதுக்கூட்டங்களில் கலந்துகொண்டு உரையாற்றியிருக்கிறார். குறிப்பாக 2009 இல் ஈழத்தில் நடந்த தமிழருக்கெதிராக சிங்கள இனவெறி அரசு நடத்திய இனப்படுகொலையில் கூட்டாளியாக சிங்களத்தோடு சேர்ந்து வேலை செய்த இந்திய அரசைக் கண்டித்து, அப்போது மத்தியில் ஆட்சியிலிருந்த காங்கிரசை வீழ்த்தும் தேர்தல் பரப்புரையில் தனது தள்ளாத வயதையும் பொருட்படுத்தாமல் தென்காசி கடையநல்லூர் பகுதிகளில் மே 17 இயக்கத்தோடு இணைந்து பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.

அவர் சொல்வதைப் போல ‘நாடென்கிறது நில அமைப்பினால் அதற்கு சிறப்பில்லை. அது மேடாக இருக்கலாம், காடாக இருக்கலாம், பள்ளமாக இருக்கலாம். அங்கு வாழ்கின்ற மக்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதில் தான் ஒரு நிலத்திற்கு சிறப்பு’ இப்படியாக நல்ல தமிழ் மக்களை உருவாக்க தனது இறுதிமூச்சுவரை வாழ்ந்தவர் தான் அய்யா பேராசிரியர் அறிவரசன் அவர்கள். அவருக்கு மே 17 இயக்கத்தின் வீரவணக்கத்தைச் செலுத்துகிறோம்.

●

## சேலத்தில் சாதி மறுப்பு திருமணம் செய்துகொண்ட மணப்பெண் கடத்தப்பட்ட சம்பவம் குறித்து மே பதினேழு இயக்கம் 10 மார்ச் 2020ல் வெளியிட்ட அறிக்கை

### “சேலம் கொளத்தூரில் சாதி மறுப்பு திருமணம் செய்து கொண்ட மணப்பெண் இளமதியைக் காப்பாற்று”

**மணமக்களை கடத்திய சாதிவெறி கும்பலை உடனடியாக கைது செய்து சிறையில் அடைக்க தமிழக அரசை மே பதினேழு இயக்கம் வலியுறுத்தல்**

**ஈரோடு மாவட்டம்** குருப்பநாயக்கம்பாளையம் பகுதியைச் சேர்ந்த இளமதி என்ற இடைநிலை சாதியைச் சேர்ந்த பெண்ணும், கவுந்தப்பாடி பகுதியைச் சேர்ந்த செல்வன் என்ற பட்டியல் சாதியைச் சேர்ந்த இளைஞரும் காதலித்துள்ளனர். சாதியின் காரணமாக அவர்கள் மிரட்டப்பட்டதால், அவர்கள் திராவிடர் விடுதலைக் கழகத்தின் தோழர்களை அணுகி திருமணம் செய்து வைக்கக் கோரி அடைக்கலம் கேட்டுள்ளனர். மணமக்கள் இருவருக்கும் நேற்று 09-3-2020 அன்று சுயமரியாதை திருமணம் நடந்துள்ளது. சாதி வெறி கும்பலால் தம்பதியரின் உயிருக்கு ஆபத்து இருந்ததால் அவர்களை திவிக தோழர்கள் பாதுகாப்பான இடத்தில் தங்க வைத்திருந்துள்ளனர். இரவு 10 மணியளவில் சாதி வெறி கும்பல் பயங்கர ஆயுதங்களுடன் திவிக தலைமைக் குழு உறுப்பினர் காவை ஈசுவரன் அவர்களின் வீட்டில் புகுந்து தாக்கி அவரை கடத்திச் சென்றுள்ளனர். அதே போல் மணமக்கள் இருவரையும் கடத்திச் சென்று தாக்கியுள்ளனர்.



மூவரும் கொலை செய்யப்படலாம் என்ற அச்சம் எழுந்ததால் திவிக தோழர்கள் கொளத்தூர் காவல் நிலையத்தில் குவிந்து 12 மணிநேரத்துக்கும் மேலாக போராட்டம் நடத்தி வருகிறார்கள். திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைவர் கொளத்தூர் மணி அவர்களும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார். இப்போராட்டத்தின் விளைவாக திவிக தோழர் காவை ஈசுவரனும், மணமகன் செல்வனும் மீட்கப்பட்டுள்ளனர். மணமகள் இளமதி இன்னும் மீட்கப்படவில்லை. கொலைவெறித் தாக்குதல் நடத்திய சாதி வெறி கும்பல் இளமதியை ஆணவக் கொலை செய்யக் கூடும் என்ற அச்சம் இருக்கிறது. உடனடியாக இளமதியை காவல்துறை மீட்க வேண்டும். இளமதியின் உயிருக்கு இனி தமிழக அரசே பொறுப்பு! சாதி மறுப்பு திருமணம் செய்வோரின் உயிருக்கு காவல்துறை பாதுகாப்பு அளித்திட வேண்டும். சாதி மறுப்பு திருமணம் செய்வோரை கொலைவெறியுடன் மிரட்டும் சாதி வெறி கும்பல் உடனடியாக கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட வேண்டும். அவர்கள் மீது பிணையில் வெளிவராத வகையில் வன்கொடுமை மற்றும் கொலை முயற்சி பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட வேண்டும்.

தமிழகத்தில் தொடரும் சாதி ஆணவப் படுகொலைகளுக்கு தமிழக அரசு துணை போகக் கூடாது. உடனடியாக ஆணவப் படுகொலைகள் நிறுத்தப்பட வேண்டும்.மணமகள் இளமதி மீட்கப்பட்டு அவரின் இணையரான செல்வத்துடன் பாதுகாப்பாக சேர்க்கப்பட வேண்டியது காவல்துறையின் கடமை என்பதை வலியுறுத்துகிறோம். திராவிடர் விடுதலை கழகத் தோழர்களின் அறம் சார்ந்த போராட்டத்திற்கும், சாதி மறுப்பு திருமணம் புரிந்த செல்வன் – இளமதி இணையோருக்கும் மே பதினேழு இயக்கமும் உறுதுணையாக நிற்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

## முதலாளியத்தின் கழுத்தை நெறிக்கும் கொரோனா

# கடனில் மூழ்கும் உலகப் பொருளாதாரம்




**வளர்ந்த நாடுகளில் பெருகிய கடன் சுமையை எதிர்கொள்ளும் முதலாளித்துவம் தற்போது கொரோனாவினால் வரும் ஆபத்தை எதிர்கொள்ள நடத்தும் வாழ்வா சாவா போராட்டம்**

### தனிமனிதக் கடன் பற்றி

நாம் அறிந்திருக்கிறோம், குடும்பக் கடனை நாம் அனைவரும் எதிர்கொண்டிருக்கிறோம். கடன் தொல்லை தாங்கமுடியாமல் குழந்தைக்குத் தீவைத்து இறந்து போன குடும்பத்தைப் பதட்டத்துடன் பார்த்தோம். கடன் இல்லாமல், வட்டியில்லாமல் நவீன வணிகக் கட்டமைப்பு இயங்குவது சிரமம் என்பதையும் பார்த்துக் கொண்டிருக்கிறோம். வங்கி தரும் கடன் உதவி, கடன் அட்டையில்லை எனில் பெரும்பாலான பொருட்கள் வீடுவந்து சேராது. கடன் நம் வாழ்க்கையின் பிரிக்க இயலாத அங்கமாகிவிட்டது. இந்தக் கடன் இல்லாமல் நவீன வாழ்க்கை முறை சாத்தியமில்லை என்று முதலாளித்துவக் கட்டமைப்புகள் நம்மை நம்பவைத்து வெகு நாட்கள் ஆகின்றன.

மறுபக்கத்தில் பார்ப்போமெனில் முதலாளித்துவப் பெரும் நிறுவனங்கள் கடன்களின் உதவியோடே தங்களை வளப்படுத்திக் கொண்டிருக்கின்றன. இந்த கடன் கட்டமைப்பு என்பது உலகளாவிய பொருளாதார நிதிக்கட்டமைப்பின் மிக முக்கிய அங்கமாக மாறி இருக்கிறது. இன்று நாம் காணும் வங்கிகளுக்கான நெருக்கடிகள் என்பது கார்ப்பரேட் பெருநிறுவனங்களின் நிதி ஏமாற்றுத் திட்டங்களினால் முடக்கப்படும் நிலைக்கு தள்ளப்பட்டவை. வங்கிகள் எனப்படுபவை பொதுமக்களின் சேமிப்பை, உழைப்பை நிதி மூலதனமாக மாற்றும் அமைப்பாக இருக்கிறது. இவ்வங்கி கட்டமைப்பு என்பது நாம் புரிந்து வைத்திருப்பதைக் காட்டிலும் வேறு பல உள்ளார்ந்த மதிப்புகளை, பணிகளைக் கொண்டிருக்கின்றன. இந்தக் கட்டமைப்பின் ஒரு அங்கமாக சொல்வதெனில் வெகுமக்களிடத்தில் பெறப்படுகின்ற நிதியைப் பெரு நிறுவனங்களுக்கான மூலதனமாக மாற்றும் பணியில் மிகமுக்கிய கண்ணியாக செயலாற்றுகின்றன. வங்கிகள் சாமானிய மக்களுக்கு கொடுக்கும் கடன் உதவியை விட பெரும் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு அளிக்கும் கடன் திட்டங்களே அவர்களுக்கு கவர்ச்சிகரமாக இருந்திருக்கின்றன என்பதை வங்கிகளின் கடன் திட்டங்களை கூர்ந்து நோக்கினால் புரியும். மக்களிடத்தில் இருக்கும் நிதியைத் தனது மூலதனமாக மாற்றிக் கொள்ள வங்கிகளைப் பெரும் நிறுவனங்கள் பயன்படுத்துகின்றன. அரசும் , அரசு நிறுவனங்களும் வங்கிகளே நமது முறையான, சட்டப்பூர்வமான நிதிக்கட்டமைப்பாக நம்மை நம்ப வைக்கின்றன. இந்த வகையில் கடந்த 2016இல் அறிவிக்கப்பட்ட பணமதிப்பிழப்பு நடவடிக்கையில் வங்கிகள் மையமான பங்கை வகித்தன. வங்கிகளே பணத்தை மாற்றிக் கொடுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கட்டமைப்பாக இறுதி செய்யப்பட்டு, இறுதியில் பெரும்பான்மையான மக்களின் கையிறுப்பு வங்கிக்கு சென்றடைந்தன. இவ்வாறு மக்களிடமிருந்து திரட்டப்பட்ட தொகை என்பது கிட்டதட்ட 15 லட்சம் கோடியை நெருங்கியது. அதாவது இந்தியாவின் மொத்த புழக்கத்தில் இருக்கும் பணம் என்பது வங்கிக்கு கொண்டு சேர்க்கப்பட்டது. இவ்வங்கியில் இருந்து உடனடியாக பணம் எடுப்பது தவிர்க்கப்படும் நிலையை, கட்டுப்பாடுகளை அரசு விதித்தது. இவ்வாறு கொண்டு சேர்க்கப்பட்ட பணம் பெரும் மூலதனமாக பெரிய கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு வாரி வழங்கப்பட்டன. குறிப்பாக பனியா மார்வாடி வணிகர்கள், நிறுவனங்கள் இதில் தங்குதடையின்றி பயனடைந்தன.


**இன்று நாம் காணும் வங்கிகளுக்கான நெருக்கடிகள் என்பது கார்ப்பரேட் பெருநிறுவனங்களின் நிதி ஏமாற்றுத் திட்டங்களினால் முடக்கப்படும் நிலைக்கு தள்ளப்பட்டவை.**



**உலக நாடுகளின் மொத்த கடன் தொகை என்பது 253 ட்ரில்லியன் டாலர் என மதிப்பிடப்பட்டிருக்கிறது. (ஒரு ட்ரில்லியன் என்பது 6,30,000 கோடி ரூபாய்) இது 2019ஆம் ஆண்டு கடன் நிலை. இது கடந்த மூன்று ஆண்டுகளில் உலகின் மொத்த உற்பத்தியை விட மிக அதிகமாக சென்றிருக்கிறது. அதாவது உற்பத்தியை விட 322% அதிகமாகி இருக்கிறது. (எளிய வழியில் சொல்வதெனில், ஒரு குடும்பத்தின் வருவாயை விட 322 சதவீதம் அக்குடும்பத்தின் கடன் தொகை அதிகரித்திருக்கிறது எனும் அளவிலானது)**



இந்தவகையில் சர்வதேச கார்ப்பரேட் நிறுவனங்கள் மற்றும் தேசங்களின் கடன் தொகையின் அளவும், ஒட்டுமொத்த தேசங்களின் உற்பத்தியின் அளவும் எவ்வாறு இருக்கிறது என்பதை பார்ப்போம். அதாவது கடனின் மொத்த மதிப்பு எவ்வளவு, ஒட்டுமொத்தமான உற்பத்தியின் அளவு எவ்வளவு என இரண்டையும் தொகுத்துப் பார்க்க வேண்டும். கடனுக்கும், அதை எதிர்கொள்ளும் அளவிலான உற்பத்தியைச் செய்திருக்கோமா என்பதைப் பொறுத்திப் பார்க்கும் போதே உலக பொருளாதாரத்தின் ஆரோக்கியத்தைக் கணிக்க இயலும். இந்த வகையில் உலக நாடுகளின் ஒட்டு மொத்த உற்பத்தியின் அளவை விட மொத்த கடன் தொகை என்பது மிக மிக அதிகமாக இருக்கிறது எனும் பேருண்மையை நாம் கவனிக்க வேண்டும். இந்த இடத்தில் இருந்தே இப்பொழுது நிகழும் கொரோனாவினை எதிர்கொள்ளும் அரசின் திட்டங்களைப் புரிந்து கொள்ள வாய்ப்புண்டு. அதாவது உலக நாடுகளின் மொத்த கடன் தொகை என்பது 253 ட்ரில்லியன் டாலர் என மதிப்பிடப்பட்டிருக்கிறது. (ஒரு ட்ரில்லியன் என்பது 6,30,000 கோடி ரூபாய்) இது 2019ஆம் ஆண்டு கடன் நிலை. இது கடந்த மூன்று ஆண்டுகளில் உலகின் மொத்த உற்பத்தியை விட மிக அதிகமாக சென்றிருக்கிறது. அதாவது உற்பத்தியை விட 322% அதிகமாகி இருக்கிறது. (எளிய வழியில் சொல்வதெனில், ஒரு குடும்பத்தின் வருவாயை விட 322 சதவீதம் அக்குடும்பத்தின் கடன் தொகை அதிகரித்திருக்கிறது எனும் அளவிலானது)

கடந்த பத்தாண்டுகளில் இந்த கடன் தொகைக்கும், உற்பத்தியின் அளவிற்குமான இடைவெளி குறைந்து கொண்டே வந்து, தற்போது கடன் என்பது மிக அதிக அளவிலான சுமையாக வந்திருக்கிறது. இதற்கு மேலும் கடனை அதிகரிக்க இயலாது எனும் நிலை முதலாளித்துவத்திற்கு வந்திருக்கிறது. இதில் அமெரிக்காவில் நடக்கும் நிலையைக் கவனத்தில் எடுத்துப் பார்ப்போமானால் இப்பிரச்சனையை இன்னும் எளிமையாக விளங்கிக் கொள்ளலாம். அமெரிக்காவில் கடந்த வருடம் கார்ப்பரேட் நிறுவனங்களின் கடன் மட்டும் கிட்டதட்ட 6.7 ட்ரில்லியனாக அதிகரித்திருக்கிறது. இந்த அளவிலான உயர்வு என்பது புதிய மின்னனு/சாஃப்ட்வேர்/மென்பொருள் நிறுவனங்களின் கடனை விட பழைய தொழிற்சாலை முறைகளில் இயங்கும் தொழிற்துறைகளிலேயே கடன் அதிகரித்திருக்கிறது. இப்போது கொரோனாவினால் உருவாகி இருக்கும் நெருக்கடி என்பதனால் பொருளாதார மந்தம் வலுப்பெருமானால் இந்த கார்ப்பரேட் நிறுவனங்களின் கடன் சுமை மேலும் அதிகரிக்கும் என்கிறார்கள் பொருளாதார வல்லுனர்கள். அதாவது இந்த கார்ப்பரேட் கம்பெனிகளில் கிட்டதட்ட 19 ட்ரில்லியன் கடன் தொகையை வைத்திருக்கும் நிறுவனங்களால், இக்கடனைக் கட்டக்கூடிய லாபம் என்பதே ஈட்டமுடியாத நிலைக்கு தள்ளப்படும். அப்படியெனில் கடன் சுமை என்பது மேலுமதிகரிக்கும் என்பதே கொரோனா தாக்கம் சுட்டும் நிலை. இப்படியான மோசமான நிலையில் அரசுகள் எப்படி எதிர்கொள்ள ஆரம்பித்திருக்கின்றன என்பதை நாம் கவனிக்க வேண்டும்.


இச்சமயத்தில் அமெரிக்காவின் வலதுசாரி அரசு மற்றும் அதன் அரசியல்வாதிகள் கார்ப்பரேட்டுகளுக்கு

ஆதரவாகவே முடிவெடுப்பதை காணமுடிகிறது. அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் ஜோ-பிடேன் ‘ அரசு தனது செலவினங்களை குறிப்பாக சமூகப்பாதுகாப்பிற்காக செலவிடும் தொகையினை, மருத்துவ செலவினத்தை நிறுத்தியாக வேண்டும்’ என்கிறார். அதிபர் டொனால் ட்ரம்ப், “விமான நிறுவனங்கள், சொகுசு கப்பல் நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு உதவவேண்டும், ஆயுள்காப்பீடு நிறுவனங்கள் ஆகியவற்றின் தலைவர்களைச் சந்திப்பதாக சொல்கிறார். இதே போல வால்மார்ட், வால்ஸ்ட்ரீட் நிறுவனப் பொருப்பாளர்கள் அரசின் உதவி தேவை என்பதற்காக ஒன்றாக இணைந்து அறிக்கை வெளியிடுகிறார்கள். இதன் அடிப்படையிலேயே, அமெரிக்க அரசு கிட்டதட்ட 1.5 ட்ரில்லியன் டாலர் பணத்தினை நிதிச்சந்தையினுள் இறக்கியது. இவ்வாறு கார்ப்பரேட் நலன்களை மட்டும் மீட்டெடுக்கும் நடவடிக்கைகள் ஆரம்பித்திருக்கின்றன. அதே நேரம் தொழிலாளிகளுக்குரிய மருத்துவப் பாதுகாப்போ, வேலைப் பாதுகாப்போ, உணவுப் பாதுகாப்போ, நிதி உதவியோ கிடைக்கப் போவதில்லை என்பதும் வெளிப்படையாகிறது. எனவே உழைக்கும் சமூகம் தன்னுடைய தேவைகளுக்கு உழைப்பை நாடவேண்டி இருக்கும், நோயை தனித்து சந்திக்கவேண்டி வரும். இது அவர்களது நோய்பரவலை அதிகரிக்கும், ஆரோக்கியம் சீரழியும் பொழுது , பொருள் ஈட்டும் வலிமைஇல்லாது போகும், இது அவர்களை மேலும் வறுமைக்குள் தள்ளும். இப்படியான சூழலில் அமெரிக்காவில் எவ்வாறு கார்ப்பரேட்டுகளை காப்பாற்ற முனைப்பு காட்டுகிறார்களோ அதே போன்று மோடி அரசும் தனது பணியை துவக்கி இருக்கிறது. கொரோனா தொற்று உலகெங்கும் அதிகரித்து இந்திய அளவில் அதிகரிப்பதற்கு ஒரு மாதத்திற்கு பட்ஜெட்டில் தனியார் நிறுவனங்களுப் பல்வேறு சலுகைகள் அறிவிக்கப்பட்டன ( காண்க மே17 இயக்கக் குரல் பிப்-2020). இந்த சலுகைகளின் தொடர்ச்சியாக மார்ச்24ம் தேதி நிர்மலா சீதாராமன் அறிவித்த பொருளாதார உதவி என்பது வெகுமக்களுக்கானதாக இல்லாமல் முழுவதும் கார்ப்பரேட் நிறுவனங்களின் தேவைக்கு ஏற்பவே அமைந்தது. வரி கட்டுவதில் இருந்து மூன்று மாதங்கள் விலக்கு என பலவேறு அறிவிப்புகள் நடந்தாலும் சாமானியர்களுக்கென்று எந்த அறிவிப்பையும் இந்த அரசு தெரிவிக்கவில்லை. மிக சொற்பமான உணவு தானியத்தையும், கையிறுப்பிற்கான மிகக்குறைந்த பணத்தையும் ஏழை தொழிலாளர்களுக்கு அறிவித்துவிட்டு நிவாரண நிதி குறித்து ஏதும் அறிவிக்காமல் நிற்கிறது மோடி அரசு.


**மார்ச்24ம் தேதி நிர்மலா சீதாராமன் அறிவித்த பொருளாதார உதவி என்பது வெகுமக்களுக்கானதாக இல்லாமல் முழுவதும் கார்ப்பரேட் நிறுவனங்களின் தேவைக்கு ஏற்பவே அமைந்தது. வரி கட்டுவதில் இருந்து மூன்று மாதங்கள் விலக்கு என பலவேறு அறிவிப்புகள் நடந்தாலும் சாமானியர்களுக்கென்று எந்த அறிவிப்பையும் இந்த அரசு தெரிவிக்கவில்லை**



அமெரிக்காவின் சர்வீஸ் துறை செயல்பாடு தொடர்ந்து ஆறு ஆண்டுகளாக சரிவை நோக்கியே செல்வதை விளக்கும் வரைபடம்.




**உலகக் கடன் நெருக்கடி:** உலகத்தின் மொத்த உற்பத்தி (கோடு) என்பதும், உலகக் கடன் என்பதன் (பட்டை) விகிதத்தில் உற்பத்தியை விட கடன் தொகையானது 2016க்கு பின்பு அதிகமாக ஆரம்பித்ததைக் காட்டுகிறது. 2019ம் வாக்கில் உலகக் கடன் தொகை மிக அதிகமான அளவில் உயர்ந்து இருப்பதை உணர்த்துகிறது. பொருள் ஈட்டுதலைக் காட்டிலும் கடன் அதிகரித்திருப்பது என்பது ஒட்டு உலக முதலாளியப் பொருளாதாரம் மூழ்கிக்கொண்டிருப்பதைக் காட்டுகிறது.




அமெரிக்காவின் கார்ப்பரேட் நிறுவனங்களின் கடன் 1960களில் இருந்து தொடர்ந்து வளர்ந்து கொண்டே வருவதும் சமீப ஆண்டுகளில் அது உச்சத்தை தொட்டிருப்பதையும் காட்டுகிறது.

ஒரு பனியா மார்வாரி தனது வட்டி வணிகத்தில் கடைபிடிக்கப்படும் ஈவு இரக்கமற்ற நிலையையே மோடி அரசின் நிதி உதவி குறித்த அறிவிப்பில் நாம் காணமுடிகிறது. முழுவதும் மக்கள் விரோத வணிக மனநிலையில் இந்த அரசு இயங்கி வருவதை நாம் கண்கூடாக காணமுடிகிறது. பெரிய கார்ப்பரேட் நிறுவனங்கள் மோடி அரசு தனக்கு உதவி செய்யக்கூடும் என காத்திருக்கின்றன. பெட்ரோல்-டீசல் விலை ஏற்றத்திற்கான வாய்ப்புகளை செய்து கொடுத்தது மோடி அரசு. இதன் மூலம் முடங்கிப் போய் இருக்கும் பெட்ரோலிய நிறுவனங்களுக்கான லாபவிகிதத்தை மேம்படுத்த நடக்கும் முயற்சி என பார்க்கமுடிகிறது.

இந்த நெருக்கடியை பயன்படுத்தி மோடி அரசு மார்வாடி-பனியாக்களின் நிதிமூலதனைத்தை (முதலீட்டு பணத்தை) மீட்டெடுக்க உதவவே செய்யும். இந்தியாவின் பெரும் நிதிமூலதன கும்பலாக உள்ள ஒரே சமூகம் இந்த பனியாக்களே இருந்திருக்கிறார்கள். காலனியாதிக்க காலத்தில் இருந்தே அரசுடன் சார்ந்து நின்று தமது பொருளாதார வலிமையை பெருக்கிக்கொண்டது இக்கூட்டம். தற்போது அரசை விட வலிமையான நிதிமூலதன கூட்டமாக உருவெடுத்திருக்கிறது. அரசை கட்டுப்படுத்தும் நிதி மாபியாவாக வளர்ந்து நிற்கும் இக்கூட்டத்தின் நலனைத் தாண்டி மக்களுக்கான நலனை மோடி அரசு செய்துவிடப் போவதில்லை.

இவ்வாறு மோடி அரசு கார்ப்பரேட்டுகளை மீட்டெடுக்கும் முயற்சிகளை அம்பலப்படுத்தும் குரல்களை எதிர்க்கட்சியிலும் நாம் பார்க்க முடிவதில்லை. இது குறித்து வேலை திட்டத்தை இடதுசாரி கட்சிகளாவது முன்வைக்க வரவேண்டும். இந்திய அளவிலான பெரும்மக்கள்திரட்சிக்கான களத்தினை யார் ஏற்படுத்தப் போகிறார்கள் என்பதைக் காலம் கவனித்துக் கொண்டிருக்கிறது. இந்த முயற்சிகளை மக்களிடமிருந்து மறைக்கும் விதமாக பல்வேறு நாடகங்களை மோடி அரசு மக்களிடம் நடத்திக் கொண்டிருக்கிறது. சாலையில் சொந்த ஊர்களுக்கு திரும்பிக்கொண்டிருக்கும் ஏழைத் தொழிலாளர்களின் சோர்ந்த கால்களும், நம்பிக்கையிழந்த மனமும் இன்றய தேசத்தின் முகமாக மாறி நிற்கிறது. முழு பாசிச அரசின் அரக்கத்தனமான ஆட்சிமுறையினை எதிர்கொள்ளும் மாபெரும் பொறுப்பினை முற்போக்கு ஆற்றல்கள் மேற்கொள்ளும் காலம் இதுவே. வரலாற்றை எழுதும் வாய்ப்பினை நமக்கு காலம் வழங்கி இருக்கிறது என்பதை முற்போக்கு ஆற்றல்கள் உணரவேண்டிய காலம் இது.

**வரலாற்றை எழுதும் வாய்ப்பினை நமக்கு காலம் வழங்கி இருக்கிறது என்பதை முற்போக்கு ஆற்றல்கள் உணரவேண்டிய காலம் இது**

கட்டுரை குறித்த கருத்துக்களை தெரிவிக்க
may17voice@gmail.com

# புதுச்சேரி பல்கலைக்கழத்தில் உயர்கல்வி கட்டணங்களை உயர்த்தியதை கண்டித்து மாணவர்கள் போராட்டம்

## கட்டண உயர்வுக்கு எதிரான மாணவர்களின் போராட்டம் நியாயமானதே! மாணவர்களின் கோரிக்கையை நிறைவேற்ற மே பதினேழு இயக்கம் வலியுறுத்தல் – 12 மார்ச் 2020

புதுச்சேரி பல்கலைக்கழத்தில் உயர்கல்வி கட்டணங்கள் 200 லிருந்து 300 சதவீதம் வரை உயர்த்தப்பட்டிருக்கின்றன. மற்ற மத்திய பல்கலைக்கழகங்களுடன் ஒப்பிடுகையில் புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் பல மடங்கு அதிகமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. MA, M.Com, M.Sc, LLM போன்ற படிப்புகளுக்கு மிக அதிக அளவில் கட்டண உயர்வு நடந்திருக்கிறது. குறிப்பாக Computer science மாணவர்களுக்கான மொத்த கட்ணம் 44,000 ரூபாயிலிருந்து 1,45,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. மத்திய அரசு பல்கலைக்கழகம் என சொல்லிக் கொண்டு சுயநிதி தனியார் பல்கலைக்கழகத்தைப் போல் கட்டண உயர்வை செய்து, ஏழை மாணவர்களின் கல்விக் கனவை காசாக்கும் இக்கட்டண உயர்வை எதிர்த்து பிப்ரவரி 6ம் தேதியிலிருந்து மாணவர்கள் தொடர்ச்சியாக போராடி வருகிறார்கள். பல்வேறு பேச்சுவார்த்தைகள் நடந்தும் கல்விக்கட்டணத்தை குறைப்பதற்கு பல்கலைக்கழக நிர்வாகம் தயாராக இல்லை.




மேலும் கடந்த 20 ஆண்டுகளாக மாணவர்களுக்கு அளிக்கப்பட்டு வந்த இலவச பேருந்து வசதியும் நிறுத்தப்பட்டிருக்கிறது. புதுச்சேரியின் உள்ளூர் மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த ஒதுக்கீடும் நீக்கப்பட்டுள்ளது.கல்விக்கட்டண உயர்வைத் திரும்பப் பெற வேண்டும், இலவச பேருந்தை ரத்து செய்யக் கூடாது, உள்ளூர் மாணவர்களுக்கான ஒதுக்கீடு போன்ற மாணவர்களின் கோரிக்கைகள் அனைத்தும் நியாயமானவையே. கல்வியை மக்களுக்கு அளிப்பது அரசின் கடமை. அதிலிருந்து பணம் சம்பாதிக்க அரசு முயலக் கூடாது. ஏற்கனவே புதுதில்லியின் ஜே.என்.யூ பல்கலைக்கழகத்திலும் மாணவர்கள் கல்விக்கட்டணத்தை எதிர்த்து போராடி வருகிறார்கள். எனவே மாணவர்களின் போராட்டத்திற்கு மே பதினேழு இயக்கம் தனது ஆதரவைத் தெரிவித்துக் கொள்கிறது. மாணவர்களின் நியாயமான கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றி, கல்வி அனைவருக்குமானது என்பதை நிறுவ வேண்டும் என்று புதுச்சேரி பல்கலைக்கழக நிர்வாகத்தை மே பதினேழு இயக்கம் வலியுறுத்துகிறது. மாணவர்களின் கோரிக்கைக்கு ஆதரவாக அனைத்து ஜனநாயக சக்திகளும் நிற்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறோம். புதிய கல்விக் கொள்கையின் ஒரு பகுதியாக இத்தகைய கட்டண உயர்வு நடவடிக்கையை மத்திய அரசு கல்வி நிறுவனங்கள் அனைத்திலும் மேற்கொண்டு வருகிறது. புதிய கல்விக் கொள்கையை உடனடியாக திரும்பப் பெற வேண்டும். கல்வியை வியாபாரமாக்கி தனியார்மயமாக்கும் முயற்சியை இந்திய ஒன்றிய அரசு உடனடியாக கைவிட வேண்டும் என்றும் வலியுறுத்துகிறோம்.



### கொரோனாவும், தேசிய இன உரிமையும்

# இந்திய முதலாளிய நெருக்கடியால் முடங்கும் தமிழ்த்தேசிய இனம்

**1940களில் பணத்தோட்டத்தில் அறிஞர் அண்ணா எழுப்பிய எச்சரிக்கை ஒலியை மீண்டும் ஒரு முறை கவனிக்க வேண்டியது தமிழ்த்தேசிய இனத்தின் இன்றைய உடனடித் தேவை**

இந்திய அரசின் பொருளாதாரக் கொள்கை வெள்ளையர் காலத்தில் பொருளாதார ஆதிக்க சக்தியாக வளர்ந்த பனியாக்களின் சார்பாகவே இருந்திருக்கிறது. இந்த பனியா ஆற்றல்கள் புதிய பொருளாதாரக் கொள்கை நடைமுறைக்கு வந்த பின்னர் கட்டற்ற மூலதன சேகரிப்பினைச் செய்திருக்கின்றன. மூலதனப் பெருக்கத்தைச் சாதிக்க முடிந்த இந்த ஆரிய கூட்டம், தேசிய இனங்களைத் தனது சந்தையாக்கும் முயற்சியில் ஈடுபட்டு அதில் பெருவெற்றியும் ஈட்டி இருக்கிறது. இந்த வகையில் தமிழகத்தின் பெரு முதலாளிகளாக இந்த இந்தியத் தேசிய அல்லது ஆரிய முதலாளிகளாக தான் இருக்கிறார்கள். மூலதனத்தை வளர்த்தெடுத்துக் கொள்ளும் துறைகளில் இந்தியாவின் விடுதலைக்கு முன்பிருந்தே தம்மை வளர்த்துக் கொண்ட இச்சமூகம், சுதந்திர இந்தியாவின் பார்ப்பனிய அரசாட்சியில் தம்மை முடிசூடா மன்னனாக வணிகத்தில் இறுத்திக் கொண்டது. மூல வளங்களாக இருக்கும் தாதுப் பொருட்கள், பெட்ரோலியம் உள்ளிட்ட துறைகளில் இருந்து உற்பத்தி தொழிற்சாலைகள் வரை இவர்களது ஆதிக்கம் விரிவடைந்தது. இந்தியா முழுவதுமான தொழிற்சாலைகள் இந்த பனியா–மார்வாடி–குஜராத்தி/ராஜஸ்தானி முதலாளிகளால் துவக்கப்பட முடிந்தது. இவர்களுக்கான அரசு கொள்கை மாற்றங்களும், நிதி ஒதுக்கீடுகளும் அரசினால் கொண்டு வரப்பட்டன. இம்முதலாளிகள் வளருவதற்கு ஏற்ப தாராளமயவாதம் திறந்துவிடப்பட்டது. வெளிநாட்டில் வரும் மூலதனங்களோடு தம்மைப் பிணைத்துக் கொள்ளும் வாய்ப்பு இந்த கும்பல்களுக்கே வாய்த்தது. இந்தியாவின் முக்கிய வணிகக் கேந்திரங்கள் இவர்களது கைகளுக்கு வந்து சேர்ந்தன. துறைமுகங்கள், சந்தைகள் ஆகியன இவர்களது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டன. பிற தேசிய இனத்தைச் சார்ந்த முதலாளிகள், குறிப்பாக தமிழ்த்தேசிய முதலாளிகளின் தொழில் வளர்ச்சி என்பது இந்த பனியா முதலாளிகளுக்குச் சேவை செய்யும் முதலாளிகளாகவே மாற்றப்பட்டனர். காங்கிரஸ் கட்சி விடுதலைக்கு முன்பிருந்தே இந்த சமூகத்திற்கான கட்சியாகவ வளர்த்தெடுக்கப்பட்டது. இந்தியா முழுவதும் இவர்கள் தம்மை விரிவுபடுத்திக் கொள்ளும் வாய்ப்பு இவர்களுக்கே வழங்கப்பட்டது. பிற தேசிய இனங்கள் விடுதலைப் போராட்டங்களில் ஈடுபட்ட காலத்தில் வெள்ளையருடன் சேர்ந்து தமது முதலீடுகளை, உற்பத்தியினைப் பெருக்கிக் கொண்டனர். இந்த உறவானது பாஜகவினால் மேலும் உறுதி செய்யப்பட்டிருக்கிறது. பாஜகவின் தலைமை குஜராத்திகளின் கீழ வந்ததும், அவர்கள் இந்தியாவின் உயர் அதிகாரத்திற்கு சென்ற பின்னர், பனியா கூட்டம் பெரும் வேகத்துடன் மூலதனத்தைச் சேகரிக்கக் துவங்கியது.

வங்கிகள் பெருமளவில் மக்கள் பணத்தை இச்சிறு கூட்டத்திற்கு வாரி வழங்க ஆரம்பித்தன. இவர்களால் பல நிறுவனங்கள் துவங்கப்பட்டு, மக்கள் பணம் சுரண்டப்பட்டது. இதில் முறைகேட்டினை அனுமதித்த மோடி அரசு, இந்த சுரண்டல்வாதிகளைப் பாதுகாத்தது. முகில் சோக்ஸி, நீரவ் மோடி என பல மார்வாடி முதலாளிகள் பாதுகாக்கப்பட்டதை நாம் கண் முன்னால் கண்டோம். வங்கிகள் இம்முதலாளிகளுக்கே சேவை செய்ய ஆரம்பித்தன. இவர்களுக்கே பெரும் கடன்களைக் கொடுத்தன. இக்கடன்களைத் திரும்பப் பெரும் முயற்சியற்று திவாலாகும் நிலை வங்கிகளுக்கு ஏற்பட்டன. இவை அனைத்தும் நம் கால வரலாறுகள். இந்தியாவின் முதலாளியம் என்பது அனைத்து தேசிய இனங்களுக்கும் பொதுவானதாக உருவாகவில்லை. தேசிய இன மக்களைச் சந்தைகளாக மாற்றினார்கள். தேசிய இன மக்களின் வளங்களான கனிம வளங்கள், மலை வளங்கள், கடல் வளங்கள், உள்ளிட்டவை பனியா மார்வாடி நிறுவனங்களுக்கு தாரை வார்க்கப்பட்டன. இதற்கு ஹைட்ரோகார்பன் திட்டங்களுக்கு கொடுக்கப்பட்ட அனுமதியே பெரும் உதாரணம்.

இந்த வளங்களைத் தம் வசமாக்கும் முயற்சிக்கு வரும் எதிர்ப்புகளை முறியடிக்கும் விதமாகவும், அதை சட்டவிரோதமாக்கவும், இந்நிலவள அபகரிப்பிற்கு ஏற்ப சட்டங்களைப் பாஜக அரசு கொண்டு வந்தது. இதே போன்று ரியல் எஸ்டேட், சில்லரை விற்பனை துறை, பிற உற்பத்தி துறை ஆகியனவற்றில் இந்த மார்வாடி கூட்டத்திற்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டது. மேலும் சேவைத் துறை எனப்படும் வங்கிகள்,




நிதி நிறுவனங்கள் ஆகியவையும் இந்த கூட்டத்தினரின் கட்டுப்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. இப்படியாக இந்தியாவின் முதலாளியத்தின் பெரும் ஆதிக்க ஆற்றலாக வளர்ந்து நிற்கும் இந்த வலைப்பின்னலை மேலும் கவனமாக நாம் ஆய்வு செய்ய வேண்டிய அவசியம் உண்டு. சிறு–குறு தொழில்களிலேயே தமிழர்கள் தம்மை வளர்த்துக் கொள்ளவேண்டிய சூழலில் இந்திய அரசின் பொருளாதாரக் கொள்கை இத்துறைகளுக்கு எதிராகவே அமைந்திருக்கிறது. இது குறித்து மே17 இயக்கம் தொடர்ந்து எழுதியும், பேசியும் வந்திருக்கிறது. தமிழினம் தற்சார்பு பொருளாதாரம் நோக்கி நகர்வதற்குரிய வாய்ப்புகள் மறுக்கப்பட்டிருக்கின்றன. இந்த பொருளாதார வளர்ச்சியைத் தகர்க்கும் வண்ணம் மாநில வரிவசூல் உரிமைகள், மூலவளத்தின் மீதான உரிமைகள் என பலவற்றைத் தமிழ்த்தேசிய இனம் இழந்திருக்கிறது. ஒரு மாவட்ட அளவிலான அதிகாரத்தை மட்டுமே வைத்துக் கொள்ளுமளவு தமிழ்நாட்டின் அதிகாரம் சுருக்கப்பட்டிருக்கிறது. ஆக தமிழ்த்தேசிய இனத்தின் உரிமை என்பது இந்திய அரசாலும், அதனால் வளர்க்கப்பட்ட மார்வாடி–பனியா முதலாளிகளின் சுரண்டல் தேவைகளாலும் மறுக்கப்பட்டு வருகிறது.

இந்த முதலாளிக்கூட்டத்தை ஆதரிக்கவும், வலுப்படுத்தவுமே அரசின் செயல்பாடுகள் 1947 ஆண்டு முதல் இருந்தது என்பதை நாம் கவனிக்கலாம். தமிழ்த்தேசிய இனமக்களின் செல்வத்தைச் சுரண்டியும், ஆக்கிரமித்தும், அடக்கியும் தம்மைப் பெருக்கி வரும் இந்த பனியாக் கூட்டத்தினைப் பாதுகாக்கவே மோடி அரசு இந்த கொரோனா தொற்று காலத்திலும் திட்டங்களைத் தீட்டிக்கொண்டிருக்கிறது. கடந்த பிப்ரவரி பட்ஜெட் அறிவிப்புகள், மற்றும் கொரோனா தொற்றுக்காக ஊரடங்கினை அறிவித்த பின்னராக மார்24, 2020 நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனால் வெளியிடப்பட்ட நிவாரணத் திட்டங்களும் இந்த பனியா–கார்ப்பரேட் முதலாளிகளின் நலனைப் பாதுகாப்பதாகவே இருந்தன. சிறுகுறு தொழில்கள் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டன. தமிழகத்திற்கு அளிக்கப்பட்டிருக்க வேண்டிய ஜி.எஸ்.டி நிலுவைப்பணம் கூட வழங்கப்படவில்லை. தமிழ்நாட்டில் தொழில்துறைகளைப் பாதுகாக்கும் வகையில் எவ்வகையான திட்டங்களையும் அறிவிக்க இயலாத நிலையே நமது நிலை. டில்லி அரசின் அனைத்து திட்டங்களும் இந்திய தேசிய முதலாளிகளாக உள்ள மார்வாரி கும்பலின் நலன்களைச் சார்ந்தே அமைந்திருக்கின்றன. உலக முதலாளியப் பொருளாதாரத்தோடு இந்தியப் பொருளாதாரம் பின்னிப் பிணைக்கப்பட்டிருக்கிறது. இந்தியப் பொருளாதாரத்தின் ஆக்கிரமிப்பில் சிக்கித் தவிக்கும் தமிழகப் பொருளாதாரமும், உற்பத்தியும், வணிகமும் உலக–இந்திய அளவிலான மாற்றங்களில் சீட்டுக்கட்டைப் போல சரிந்து விழும் நிலையிலேயே பாதுகாப்பற்று இருக்கிறது.

தமிழகத்தின் கட்டமைப்பு என்பது சமூகநீதி அடிப்படையிலான கல்வி வளர்ச்சியின் விளைவாக நாம் உருவாக்கியது. கடந்த 70 ஆண்டுகளாக கடுமையான உழைப்பினால் தமிழர்கள் உருவாக்கிய கட்டமைப்பு எவ்வித பாதுகாப்புமின்றி நிராதரவாக நிற்கிறது. சர்வதேச முதலாளிய நெருக்கடி, கடன் நெருக்கடி மற்றும் சந்தையின் 'தேவை' சார்ந்த நெருக்கடி, 'சப்ளை'நெருக்கடி என பல சவால்களை எதிர்கொள்ளுகிறது தமிழ்நாட்டின் உற்பத்தி, வணிகத் துறைகள். இதுமட்டுமல்லாமல் இந்திய அளவில் ஜி.எஸ்.டி வரி நெருக்கடிகள், வங்கிகளின் கடன் நெருக்கடிகள், வட்டி நெருக்கடிகள் என பலவற்றைத் தமிழர்கள் எதிர்கொள்கிறார்கள். முற்றும் முழுதாக சுரண்டப்படும் இனமாக தமிழர்கள் இந்த கொரோனா நெருக்கடியை எதிர்கொள்கிறார்கள். இச்சமயத்தில் அறிஞர் அண்ணாவின் கருத்துக்களை மீண்டுமொருமுறை திரும்பிப் பார்ப்பது நமக்கு இதன் மூலப்பிரச்சனையைப் புரிந்து கொள்ள உதவும். இந்த ஆதிக்கத்தின் ஆரம்ப நிலையை அறிஞர் அண்ணா 1940களிலேயே ஆய்வுப்பூர்வமாக தகவல்–புள்ளி விவரங்களோடு அம்பலப்படுத்தி இருக்கிறார். இந்த வடநாட்டு பனியாக்கூட்டம் நிதி மூலதனத்தைத் தமதாக்கிக் கொள்ளும்

முயற்சியை 1940களில் நடந்ததை அறிஞர் அண்ணா தனது பணத்தோட்டத்தில் அம்பலப்படுத்துகிறார்.


'.. (இரண்டாம் உலகப்) போரின் காரணமாக இங்கு பணப்பெருக்கம் ஏராளம். ஒன்றுக்குப் பத்தாக விலை கொடுத்து வாங்குகிறவர்களைக் காண்கிறோம். இந்தச் சமயத்திலே பணத்தை வைத்துக் கொண்டு என்ன செய்வதென்று தெரியாமலிருக்கும், 'ஆசாமிகளை'' வடநாடு மோப்பம் பிடித்து விட்டதுஞ். வடநாட்டார் பணநடமாட்டம் (இங்கு) ஏராளமாக இருப்பது கண்டு இந்தப் பெருக்கம், புதிய தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டுவிடும் என்பதை உணர்ந்து, அந்தச் சக்தியைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று திட்டம் தயாரித்து, பல புதிய பாங்குகளை (வங்கிகளை) ஏற்படுத்திவிட்டனர். அதாவது பொருளாதாரப் போருக்கு புதிய பாசறைகளை ஏற்படுத்திக் கொண்டனர். இந்தப் போர் ஆரம்பிப்பதற்கு முன்பு வரை ஜப்பானுக்குப் பழைய இரும்புவிற்று வந்தோம். பிறகு நமது இரும்பு நமக்கே குண்டாகி, நம்மவரை நாசம் செய்தது. இப்போது வடநாட்டார் அமைக்கும் பொருளாதாரப் பாசறைகும் நாமே பொருளும் தருகிறோம். டிபாசிட்டுகள், சேமிப்புகள் என்ற பெயரால் எவ்வளவோ பணம் பாங்குகளிலே சென்று தங்குகின்றன. இந்தப் பணமே பிறகு இந்நாட்டு (தமிழ்நாட்டு) தொழில் வளர்ச்சிக்கோ ஊறு தேட உதவக்கூடும்ஞ்' இவ்வாறு இந்த பனியா நிதித்திரட்டல் தமிழர்களுக்கு எதிராகச் செல்லும் என்றும் 1940களிலேயே தமது 'பணத்தோட்டம்' கட்டுரையில் எச்சரிக்கிறார் அறிஞர்.அண்ணா.

அவர் மேலும் குறிப்பாகச் சொல்லும் போது, '1941–44இல் பணம் மலிவாகியக் காலம். அந்தச் சமயமாகப் பார்த்து பாங்குகளைத் துவக்கினர் (பனியாக்கூட்டத்தார்) அதாவது மழை சமயமாகப் பார்த்து பாங்குகளைத் துவக்கினர். அதாவது மழை பெய்து ஆறு நிரம்பும் நாட்களை அறிந்து, அதை அணைக்கட்டி தண்ணீர் தேக்கங்களை ஏற்படுத்திக் கொண்டனர். இனி அந்தத் தேக்கங்களின் மூலம் வறண்ட பூமியையும் வளமாக்கமுடியும். மேட்டூர் தண்ணீர் தேக்கம், ஒரு தனி ஆளின் சொத்தாக இருந்தால், அந்த நீரைப் பாய்ச்சலுக்கு எதிர்பார்த்துள்ள நிலத்துச் சொந்தக்காரரின் நிலைமை என்ன ஆகும்! மேட்டூர் மிட்டாதார், வைத்தது தானே சட்டம். 1941–44இல் பணவெள்ளம் இதனைச் சரியானபடி 'தேக்கி' வைத்துக் கொண்டனர் பனியாக்கள். நாட்டு நிலையை நிர்ணயிக்கக் கூடிய பெரிய பாங்குகள் இந்தப் பணப்பெருக்கத்தின் போது வடநாட்டில் வடநாட்டுப் பாங்குகளில் அதிகாரம் பெற்ற மூலதனம் 43 கோடி ரூபாய்க்கு மேலாகவே இருக்கிறது என்றால் பொருளாதாரப்பிடி, வடநாட்டினிடம் எவ்வளவு பலமாகச் சிக்கி இருக்கிறது என்பதை விவரிக்கத் தேவை இல்லை. ஞ் இந்த வகையிலே 1941–44க்ள் துவக்கப்பட்ட 14 வட இந்திய பாங்குகளிலே எவ்வளவு டிபாசிட்டாகச் சேர்ந்திருந்தது? 1943ம் ஆண்டுக்கு மட்டும் உள்ள கணக்கின்படி டிபாசிட்டாக குவிந்த தொகை 42,10,64,328.00 ரூபாய் (42 கோடி ரூபாய்)... இங்கோ தாயின் மணிகொடி பாரீர்! என்ற கீதத்தோடு திருப்தி அடைந்து விடுகிறோம். இது சரியா? முறையா? (இந்தியத்)தேசியம் பேசுபவர் அங்கு பண அரசு அமைக்கிறார்கள். இங்கு இன அரசு கேட்கும் நம்மை ஏளனம் செய்கிறார்கள்...'' என்று தமிழ்த்தேசிய இன உரிமையை அறிவியல் பூர்வமாக முன்வைக்கிறார் அறிஞர் அண்ணா.

தென்னாட்டில் தனது ஆக்கிரமிப்புகளை விரிவு செய்யும் இந்த வடஇந்திய பனியா நிதி கட்டமைப்புகளைப் பற்றி 'அண்ணா' சொல்லும் போது, பாரத் பாங்குகள் மட்டும் 216 கிளை ஸ்தாபனங்கள், சென்னை மாகாணமெங்கும் அமைத்திருக்கிறது. இதன் பொருள் என்ன? இவ்வளவு இடங்களிலும் எந்தச் சமயத்திலே தொழில் நடத்தவும், தாராளமான வசதியைக் 'கரம்சந்த்' பெற முடியும், கருப்பண்ணனால் முடியாது என்று மிக எளிமையாக் இந்த பனியா ஏகாதிபத்தியத்தை தோலுரிக்கிறார். இந்தக் கட்டமைப்பு இந்தியாவின் 'வால்ஸ்ட்ரீட்டாக' மாறி இருக்கிறது. அதாவது பொருளாதார ரவுடிக் கூட்டமாக மாறி இருக்கிறது. தமது நலனுக்காக எதையும் உருவாக்கவோ, நிர்மூலமாக்கவோ முடியக்கூடிய வகையில் வளர்ந்து நிற்கிறது. 'கெய்னீசிய' பொருளாதார முதலாளித்துவ முறையில் இந்திய அரசு இந்தக் கட்டமைப்பிற்கு சாதகமாக செயல்பட்டு வருவது சவகர்லால் நேரு காலத்திலேயே உருவாகி இருக்கிறது. அதாவது முதலாளித்துவ உற்பத்தியை வளர்த்தெடுக்க அல்லது ஆதரிக்க அல்லது உதவ அரசின் பங்கேற்பு பற்றி பேசிய இந்த கெய்னீசிய முறை இந்த பனியாக் கும்பலை மிருகத்தனமாக வளர்த்தெடுத்திருக்கிறது. இதன் துவக்கத்தையும், இந்த முதலாளிய உற்பத்தி முறை அழிவை நோக்கியே செல்லுமெனவும் அறிஞர்.அண்ணா தனது 'பண்டித நேருவின் கண்முன்' எனும் கட்டுரையில் விவரிக்கிறார்.

இந்தியாவின் அதிகாரம் காங்கிரசின் கைகளுக்கு வந்த பின்னர் அவர்களது ஆட்சிமுறையைப் பற்றி பின்வருமாறு சொல்கிறார் அண்ணா. இந்திய அரசு முதலாளித்துவ அரசாகவே வடிவமைக்கப்பட்டு செயல்பட்டது என்பதை இதைவிட எளிமையாக விளக்கிவிட இயலாது. "பசித்த மக்களுக்கு உணவளிக்கும் முறையிலேயோ, வேலையற்றுக் கிடப்போர்களுக்கு வேலை தரும் வகையிலேயோ, ஆளவந்தார்களின் போக்கு இருக்கவில்லை. முதலாளிகளின் மிடுக்கு தளராமல் எப்படிப் பார்த்துக் கொள்வது–அவர்களுடைய இலாப பெருக்கத்திற்கு எவ்வாறு ஆக்கந் தேடுவது– மத்திய கிழக்கிலும், கீழ்க் கோடியிலும் உள்ள சிறு சிறு நாடுகளின் சந்தையை எவ்வாறு பிடிப்பது– அங்கு இத்துறையில் ஏற்படும் போட்டியை எவ்வாறு சமாளிப்பது– ஆசியா கண்டத்திற்குத் தலைமை தாங்கி நடத்த வேண்டும்– அதற்கான முறையில் இராணுவம் அமைக்க வேண்டும்– தேச கவுரவம் காக்கப்பட வேண்டும் என்பன போன்ற பிரச்சனைகளில் தான் ஆளவந்தார்களின் செயலும், கருத்தும் செல்கிறது." என்று இந்திய அரசு முதலாளிய நலனுக்காகவே திட்டமிட்டு செயல்படுகிறது, தேசிய திட்டங்களை வடிவமைக்கிறது. வெளியுறவு–நிதி கொள்கைகளை வகுக்கிறது என்பதை இந்த வரிகளிலேயே எளிமையாக்கி விளக்குகிறார். இதை ஆதாரத்துடன் விளக்குகிறார் அறிஞர் அண்ணா.

மூலத்தொழிற்சாலைகளுக்குப் பண உதவி செய்வதற்காக 'இண்டஸ்ட்ரீயல் பைனான்ஸ் கார்ப்பரேசன் எனும் ஒரு நிதி அமைப்பை ஏற்படுத்துவதற்காக ஒரு மசோதாவை நேரு அரசில் நிதி அமைச்சர் சண்முகம் கொண்டு வருவதைப் பற்றி கேள்வி எழுப்புகிறார் அறிஞர் அண்ணா. 'இந்த நிதி அமைப்பின் தன்மை என்ன? இதன் போக்கு எவ்வாறு




இருக்கும்? இதனால் இலாபம் பெறுகிறவர்கள் முதலாளிகளா அல்லது மக்களா? இதற்கு அவசியமென்ன? என்பன போன்ற விசயங்களை நாம் அலசிப் பார்க்க வேண்டும். இந்த அமைப்பைப் பற்றி விரிவாக பேசுகிறார். இந்த கார்ப்பரேசனை 11 பேர் நிர்வாகிக்கிறார்கள். அரசு சார்பில் இருவரும், தொழில் அரசர்களையே நிர்வாகிகளாகக் கொண்ட ரிசர்வ் வங்கியின் சார்பில் மூவர், முதலாளிகள் ஆதிக்கத்தில் உள்ள வங்கிகள், இன்சூரன்ஸ் கம்பெனிகளின் சார்பில் ஐந்து பேர் இதன் நிர்வாக அங்கத்தவர். இதன் மானேஜிங் டைரக்டர், இந்திய அரசாங்கத்தினரால், நியமிக்கப்பட்ட போதிலும் இவர் ரிசர்வ் வங்கி நிர்வாகிகளைக் கலந்து கொண்ட பின்னரே நியமிக்கப்படுவர் என்பதை விவரிக்கும் அண்ணா தனது கேள்விகளை மேலும் கூர்மையாக்குகிறார். 'மூலதனம் வரும் வகையையும் (எந்த நாட்டவராயினும் இந்த அமைப்பில் பணத்தை சேமிக்கலாம், இதுமட்டுமல்ல மத்திய அரசாங்கத்தின் அனுமதியின் பேரில் வெளிநாடுகளில் கடன் வாங்க உரிமை இருக்கிறது. இதன் பங்குகளான 2000 பங்குகளில் இந்திய அரசின் 400 பங்குகளைத் தவிர்த்து அனைத்தும் தனியார் முதலாளிகளின் ஆதிக்கத்திலேயே இருக்கும்), நிர்வாகிகள் நியமிக்கப்படும் முறையையும் பார்க்கும் பொழுது இந்த இண்டஸ்டிரியல் பைனான்ஸ் கார்ப்பரேசன் ஒரு முதல் தரமான முதலாளிகள் ஆதிக்கம் மிகுந்த நிறுவனமாகத் தான் இருக்க முடியும் என்பது விளங்கவில்லையா என்கிறார்.

முதலாளிகள் எனில் அது பனியாக்களாகவே இருக்க இயலும் என்பதை அவர் பல கட்டுரைகளில் ஆதாரப்பூர்வமாக பணத்தோட்டம் முதலே விளக்குகிறார். இதில் அரசாங்கத்தின் நிலையைப் பற்றி சொல்லும் பொழுது 'அரசாங்கத்தின் மேற்பார்வை, கட்டுப்பாடு என்பனவெல்லாம் வெறும் அலங்காரச் சொற்களேயன்றி வேறன்று' என்கிறார். அதாவது இந்திய அரசு என்பது இம்முதலாளிகள் வளர்வதற்குரிய கட்டமைப்பாகவே இருக்கிறது. மார்க்சின் வரிகளில் சொல்வதெனில் இந்த அரசின் பங்கேற்போடு இந்திய முதலாளிவர்க்கத்தின் சுரண்டல் கட்டமைப்பு முழுமையடைகிறது. இந்த முதலாளித்துவ முயற்சி குறித்து அண்ணா தொடர்ந்து எழுதும் பொழுது, "தனிநபர்களால் தொடங்கப்பெறும் தொழில்களுக்கு உதவி செய்வதையே குறியாகக் கொண்டு இக்கார்ப்பரேசன் ஆரம்பிக்கப்படுகிறது' என நிதி அமைச்சர் சண்முகம் குறிப்பிடுவதை எடுத்துக்காட்டி தனது வாதத்தைக் கூர்மையாக்குகிறார்.

''உலகத்தின் முதலாளித்துவ முறைக்கே இன்று பெரியதோர் நெருக்கடி காத்துக் கொண்டிருக்கிறது. இதனை முதலாளித்துவ நாடுகள் நன்கு தெரிந்து கொண்டு தான் இருக்கின்றன. அந்நாட்டு முதலாளிகளும் இதனை உணராமல் இல்லை. முதலாளிகளில் ஒருவரான நிதி அமைச்சர் சண்முகம், வரவிருக்கும் ஆபத்தை அறிந்துள்ளதன் விளைவாகத்தான், தன் வர்க்கத்தைக் காக்கும் பெரும் பணியில் முனைந்துள்ளார்", அமைச்சரின் வார்த்தையே இதைச் சொல்லுகிறது என்று எடுத்துக்காட்டுகிறார் அண்ணா. அமைச்சரின் கூற்றாக," தனிநபர் தொழில் ஸ்தாபனத்தின் பணபலம் எவ்வாறு இருந்தபோதிலும், குறிப்பிடத் தகுந்த அளவு உதவத் தேவைப்படும் நிலை ஏற்பட்டு தீரும். அந்நிலையில் வேண்டும் தொகையைப் பொதுமக்களிடமிருந்து சாதாரணமாகப் பெற முடியாது. குறித்த தொழிலின் அழிவும், வளர்ச்சியும் அவ்வாறு பெறப்படும் உதவியைப் பொறுத்த விசயமாகும். இது போன்ற நெருக்கடியான நிலைமையிலிருந்து சம்பந்தப்பட்ட தொழில்களைக் காப்பாற்றவே இக்கார்ப்பரேசன் துவக்கப்படுகிறது" என்று அமைச்சரின் வார்த்தையே இம்முதலாளித்துவத்தின் நிலையற்ற தன்மை பற்றியும், அதை பாதுகாக்கும் அரணாக அரசு இயங்கும் நிலையையும் குறிப்பிடுகிறார்.

அண்ணா எழுதிய பின்வரும் வார்த்தைகளை இன்றைய கொரோனா தடை நிலைக்குப் பொருத்திப் பார்த்தால் இந்த முதலாளித்துவத் தோல்வியை எளிதில் புரிந்து கொள்ள இயலும். "முதலாளித்துவ முறைக்கு எதிர்காலம் இல்லை என்பதையும், நெருக்கடி விரைவில் வரவிருக்கிறது என்பதையும் தனி முதலாளிகளால் சுயேட்சையாகத் தீர்த்துக் கொள்ள முடியாதென்பதையும், அரசாங்கமே அச்சமயத்தில் துணை செய்ய வேண்டும் என்பதையும் தீர்க்கமாகத் தெரிந்துள்ள சண்முகம், தனது பங்காளிகளைக் காப்பாற்ற, இந்தப் புனிதப் பணியில் இறங்கியுள்ளார்ஞ் முதலாளித்துவ முறை பயனற்றது என்று கண்டபின்னரும், அதனைத் தொலைத்துத் தலைமுழுக முதலாளிகள், தாமாக முன்வர மாட்டார்கள். அதன் அழிவைத் துரிதப்படுத்த, அது அழிந்த இடத்தில் வேறோர் நல்ல முறையை நிர்மாணிக்க, சமதர்மமே பிணி தீர்க்கும் மருந்துஞ்", என்பதை உணர்த்தும் அறிஞர் அண்ணாவின் வார்த்தைகளை நினைவில் கொள்வது காலத்திற்கேற்ற கருத்தாகும். சோசலிசம் பேசிய நேருவின் முன்னிலையில் தான் முதலாளித்துவத்தை உயிர்ப்பிக்கும் ஆர்வம் காட்டப்படுகிறது என இந்திய அரசின் உண்மை முகத்தைத் தோலுரித்துக் காட்டுகிறார் அண்ணா.

தமிழ்த்தேசிய எழுச்சி என்பது இத்தகைய வேலிகளை எதிர்கொண்டே வளரும் பொக்காகும். பொருளியல் ரீதியாக முடக்கப்பட்ட, சுதந்திரம் இழந்த நிலையில் இருக்கும் ஒரு இனம் தமது விலங்குகளின் மூலகாரணிகளை அறிந்து கொள்வது அவசியம். கொரோனா நெருக்கடியினால் உருவாகும் அசாதாரணமான பொருளாதார நெருக்கடியில் இந்திய அரசானது இந்த பனியா பணக்கார மாபியாக்களை, ஏகாதிபத்திய குழுக்களைப் பாதுகாக்கவே முனைகிறது. உலகெங்கும் எழுந்துள்ள கடன் நெருக்கடியில் இந்திய முதலாளியமும் சிக்கி இருக்கிறது. நிதி மூலதன நெருக்கடியில் இந்தியாவின் வங்கிகளும் சிக்கி உள்ளது. உலக முதலாளியத்தின் உற்பத்தியோடு பின்னிப்பிணைந்திருக்கும் இந்திய உற்பத்தி முறையை இந்திய அரசு பாதுகாக்கவே தனது திட்டங்களை அறிவித்துக் கொண்டிருக்கிறது. இதில் வங்கிகளைப் பாதுகாக்கவும், தனது கொடுமையான ஜி.எஸ்.டி வரியை சுமத்தவும் செய்கிறது. உலக அளவிலான உற்பத்தி–சப்ளை–சந்தை–கடன் நெருக்கடியோடு இந்திய பனியாக் கட்டமைப்பின் பின்னணியை இணைத்துப் பார்த்தால் தமிழர்கள் எதிர்கொள்ளும் நெருக்கடி உள்ளங்கை நெல்லிக்கனி. பொருளாதார இறையாண்மையற்ற எந்த இனமும் சுயமரியாதையோடு வாழ இயலாது.

இது பற்றிய விழிப்புணர்வு இல்லையெனில் நம்மால் நமது நிகழ்கால–எதிர்கால பொருளாதார–அரசியல்–சமூக உரிமைகளைப் பாதுகாத்துவிட இயலாது. தகர்ந்து வீழும் நிலையில் இருக்கும் ஒரு பொருளாதாரக் கட்டமைப்பில் சிக்கி இருக்கும் இந்திய முதலாளியத்தின் அழிவில் தமிழ்த்தேசிய இனம் கற்றுக்கொள்ளவும், தம்மை மீட்டுக்கொள்ளவும் தேவையான சிந்தனையை அண்ணாவின் எழுத்துக்கள் நமக்கு எளிமையாக போதிக்கின்றன.




## கொரோனா தொற்று

# காலனியமும் தொற்று நோய்களும்

**காலனிய காலம் தொட்டு தொற்றுநோய் என்பது காலனியவாதிகளுடன் பயணித்திருக்கிறது. அடிமைகளைக் கொண்டு சென்றது போல, நோய்க்கிருமிகளையும் ஏற்றுமதி இறக்குமதி செய்தார்கள் ஐரோப்பிய காலனியவாதிகள்**

ஐரோப்பியர்கள் உலகம் முழுவதும் புதிய நிலங்களைத் தேடிச் சென்றபோது அவர்களுடனே எடுத்துச் சென்றதில் முக்கியமான ஆயுதம், தொற்றுநோய்கள். இந்தியாவிற்கும், கிழக்கு ஆசியாவிற்குமான கடல்வழியைத் தேடிச் வந்த கடலோடிகள் அமெரிக்கக் கண்டங்கள், ஆப்பிரிக்காவின் உள்பகுதிகள், பசிபிக் கடலில் இருந்த தீவுகள், ஆஸ்திரேலியா மற்றும் இந்திய தீபகற்பம் ஆகிய இடங்களில் இருந்துவந்த வளர்ந்த ஆட்சியமைப்பிலிருந்து பழங்குடிச் சமூக அரசுகள் வரையிலான அரசாங்கங்களைக் கைப்பற்றி அழித்து காலனிய ஆட்சி முறையை உருவாக்கினார்கள். இந்த போரில் இவர்களால் கொண்டு செல்லப்பட்ட தொற்று நோய்களும் ஒரு யுத்த ஆயுதமாகவே மாறிப்போனது. பல பழங்குடிகள் இந்த நோய்த் தொற்றினால் முற்றிலும் அழிந்து போன வரலாறும் உண்டு. தொற்று நோய்களை உலகமயமாக்கியது காலனிய ஆட்சிமுறை தான்.

வட அமெரிக்கா, தென்னமெரிக்கா என்று அழைக்கப்படுகின்ற அமெரிக்காவிற்கு ஐரோப்பியக் காலனியக் கொள்ளையர்கள் கொண்டு சேர்த்த தொற்று நோய்கள்



ஏஸ்டெக் பழங்குடி மக்களது தலைநகரான டெனோச்சிட்டிலானை நிர்மூலமாக்கியப் பின்னர் அம்மக்களை அடிமைகளாக்கிய ஸ்பானியர்கள். அம்மக்களை அடிமைக்கூலிகளாக பயன்படுத்தும் காட்சி.

ஏராளம். இதில் முக்கியமானது சின்னம்மை, தட்டம்மை, ப்ளேக், காலரா, சளி, டிப்த்தீரியா, இன்புளுயன்ஸா, மலேரியா, மீசல்ஸ், ஸ்கார்லெட் காய்ச்சல், பாலியல் நோய்கள், டைபாய்டு, டைப்பஸ், டி.பி எனும் நெஞ்சகக் காசநோய், பெர்ட்டுசிஸ் எனும் சளி நோய் இவ்வாறான நோய்கள் பழங்குடிகளிடம் வேகமாக பரவின. இந்த நோய்கள் இம்மக்களுக்கு முற்றிலும் புதியன. எனவே இவர்கள் தனிப்பட்டரீதியிலோ, சமூகமாகவோ இந்த நோய் எதிர்ப்பு ஆற்றல் கொண்டவர்களாகவோ, நோய் எதிர்ப்பு வழிமுறை அறிந்தவர்களாகவோ இல்லை.

மேலும் கைப்பற்றப்பட்ட பழங்குடிகள் அடிமைகளாக கொண்டு செல்லப்பட்ட இடங்களில் இந்த நோய் தொற்றும் கொண்டு செல்லப்பட்டன.

### நோய் தொற்றும், யுத்தத் தந்திரங்களும்

நோய் தொற்று போரின் ஒரு அங்கமாக பலகாலமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. நோயுற்ற இறந்தவர் உடல்களை, அல்லது விலங்குகளின் உடல்களை எதிரி நாட்டுப்படைகள் மீது அல்லது மக்கள் மீது எறிந்து அவர்களுக்கும் நோய் தொற்றை ஏற்படுத்திய நிகழ்வுகள் வரலாற்றில் நிகழ்ந்திருக்கின்றன. 17ஆம் நூற்றாண்டில் ஸ்வீடன் மீது படையெடுத்த ரசியாவின் படைகள் 'ப்ளேக்'கினால் பாதிக்கப்பட்டு இறந்தவர்கள் உடலை தால்லிஸ் எனும் நகரின் (தற்போது எஸ்தோனியாவின் தலைநகர்) சுவர்களின் மீது எறிந்திருக்கிறார்கள். இதே போன்று துனிசியன் படைகள், அல்ஜீரிய நகரத்தின் மீதான போரில் பயன்படுத்திய வரலாறும் உண்டு. மங்கோலிய அரசப் படைகளான செங்கிஸ்கான் படைகள் இது போன்ற யுக்திகளைக் க்ரீமியா படையெடுப்பில் கடைப்பிடித்திருக்கின்றன. 1762-63இல் வட அமெரிக்காவில் ஆங்கிலேய ஆதிக்கத்திற்கு எதிரான பெரும் யுத்தத்தை செவ்விந்தியக் குழுக்கள் நடத்தின. பல செவ்விந்திய இனக்குழுக்களை ஒன்றிணைத்து 'போண்ட்டியாக்' எனும் தீரமிக்க தலைவர் ஒரு பெரும் யுத்தத்தை வழி நடத்தினார்.

பல்வேறு செவ்விந்திய இனக்குழுக்கள் வட அமெரிக்காவின் டெட்ராய்ட் நகரம் துவங்கி பல இடங்களில் இருந்த கோட்டைகளை முற்றுகையிட்டனர். ஒட்டாவா இனக்குழுவின் தலைவரான போண்ட்டியாக்கிற்கு துணையாக வையண்டாட்ஸ், ஓஜிப்வாஸ், பொட்டாவாட்டமிஸ் எனும் பல செவ்விந்திய இனக்குழுக்கள் படைகளை ஒன்றிணைத்து எழுந்தன. பல கோட்டைகள் செவ்விந்தியர்களிடம் வீழ்ந்தன. கிட்டதட்ட இரண்டாண்டுகள் இம்முற்றுகை வெற்றிகரமாக தொடர்ந்தது. இம்முற்றுகையை வீழ்த்த முயன்ற இங்கிலாந்தின் முயற்சிகள் தோற்கடிக்கப்பட்டன. இப்படியாக நடந்த யுத்தத்தில் மேற்கு பென்சில்வேனியாவில் இருந்த பிட் எனும் கோட்டையை லெனாப்பே எனும் செவ்விந்திய இனக்குழு போர்வீரர்கள் முற்றுகையிட்டனர். இந்நிலையில் கோட்டைக்குள் ப்ளேக் நோய் பரவி இருந்தது. அப்போது 1763 ஜூன் 24ம் தேதியன்று கோட்டை முற்றுகைக்குள் இருந்த சைமேன் ஈக்குயேர் (Captain Simeon Ecuyer) எனும் 22வயது கேப்டன் முற்றுகையிட்ட லெனெப்பே போர்வீரர்களுக்கு இரண்டு போர்வைகளையும், கைக்குட்டையையும்



நோயினால் பாதிக்கப்பட்டவர்களைப் பற்றி ஏஸ்டெக் பழங்குடிகள் வரைந்த ஓவியங்கள்

பரிசாக கொடுத்தார். இவை சின்னம்மையால் பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து மருத்துவமனையில் பெறப்பட்டவை. இதைப்பற்றி வெள்ளையரின் படையணி கேப்டன் வில்லியன் ட்ரெண்ட் (William

**17ஆம் நூற்றாண்டில் ஸ்வீடன் மீது படையெடுத்த ரசியாவின் படைகள் 'ப்ளேக்'கினால் பாதிக்கப்பட்டு இறந்தவர்கள் உடலை தால்லிஸ் எனும் நகரின் (தற்போது எஸ்தோனியாவின் தலைநகர்) சுவர்களின் மீது எறிந்திருக்கிறார்கள். இதே போன்று துனிசியன் படைகள், அல்ஜீரிய நகரத்தின் மீதான போரில் பயன்படுத்திய வரலாறும் உண்டு.**

**அமெரிக்க போர்படைத் தளபதி, ஜெஃப்ரி அம்ஹெர்ஸ்ட் செவ்விந்தியர்களைப் பற்றி பேசும் போது..." இந்த சகிக்கமுடியாத இனங்களை இந்தப் போர்வைகள் வழியாகவோ அல்லது வேறு எவ்வழியிலாவது மொத்தமாக இடம் தெரியாமல் அழித்துவிடும் அனைத்து யுக்திகளையும் பயன்படுத்துங்கள்" என்கிறார்**

Trent) எழுதும் போது 'இந்த பரிசளிப்பு நாம் எதிர்பார்க்கிற விளைவுகளைக் கொடுக்கும்' என்ற குறிப்புடனேயே தனது தலைமையகத்திற்கு செய்தி அனுப்புகிறார். இதை ஒரு போர் யுக்தியாக ஆங்கிலேயப் படைத் தளபதி ஜெஃப்ரி அம்ஹெர்ஸ்ட், கர்னல் ஹென்றி பொக்கெட்டிக்கு 1793 ஜூன் 29, ஜூலை 13, ஜூலை 16, ஜூலை 26இல் அனுப்பிய கடிதங்களில் விவாதிக்கிறார். ஜெஃப்ரி ஒரு இடத்தில், "இந்த சகிக்கமுடியாத இனங்களை இந்தப் போர்வைகள் வழியாகவோ அல்லது வேறு எவ்வழியிலோ மொத்தமாக இடம் தெரியாமல் அழித்துவிடும் அனைத்து யுக்திகளையும் பயன்படுத்துங்கள்"

"பூச்சிகளைப் போல கூட்டம் கூட்டமாக மக்கள் இறந்தனர். ஒட்டுமொத்த குடும்பங்கள் இறந்த நிலையில் அவர்களது வீடுகளிலேயே அவர்கள் புதைக்கபட்டனர். அவர்கள் வீடுகளே கல்லறைகளாகின' என்று கோர்ட்டேஸுடன் வந்திருந்த சாமியார் எழுதினார்.



போண்ட்டியாக் யுத்தக் களத்தைத் திட்டமிடும் செவ்விந்தியத் தளபதிகள்.




1763 போண்ட்டியாக் யுத்தத்தின் கள நிலவரம்




அமெரிக்காவின் பென்சில்வேனியாவின் 'பிட்' எனும் கோட்டையை வெற்றிகரமாக முற்றுகையிட்டிருந்த லெனாப்பே பழங்குடி போர்வீரர்களை முறியடிக்க தொற்று நோயாளிகள் பயன்படுத்திய போர்வைகள் அவ்வீரர்களிடத்தில் பரிசாக வெள்ளைய ராணுவ அதிகாரிகள் கொடுத்தனுப்பினார்கள்.



இரண்டாம் ஓப்பியம் யுத்தம் எனும் போர் சீனாவின் அரசிற்கும், காலனிய நாடுகளுக்கும் இடையே 1856-60களில் நிகழ்ந்தது. இதே காலகட்டத்தில் தொற்று நோய் வூகான் மாநிலத்திலிருந்து பிற பகுதிகளுக்கு சீனாவில் பரவியது. இந்த ஓப்பிய யுத்தம் ஆசியாவின் மொத்த நிலப்பரப்பிற்கும் காலனியவாதிகளின் ஆக்கிரமிப்பை விரிவுசெய்ய உதவியாய் அமைந்தது.



இந்தியத் துணைக்கண்டத்திற்குள் ஆக்கிரமித்த இங்கிலாந்து காலனியாதிக்கத்தின் பொழுது உலகின் பிறபகுதி தொற்று நோய்கள் இங்கு பரவி கோடிக்கணக்கான மக்களைக் கொன்று அழித்தது. இது வெள்ளையர் கொள்ளையிடுதலுக்கு ஒருவகையில் உதவியாகவும் அமைந்தது.



ஆப்பிரிக்காவின் பூர்வகுடிகளை அடிமை வணிகத்திற்காக கொண்டு செல்லும் ஐரோப்பிய காலனியக் கொள்ளையர்கள். வணிக நலனுக்காக உலகெங்கும் அடிமைகளும், நோய்களும், காலனியாதிக்கத்திற்கு உறுதுணை செய்யும் மதக்கருத்தியல்களும்

போர் ஆயுதங்களை விட இந்த கிருமிகளே பெருமளவில் வெற்றியைக் காலனிய ஆதிக்கத்திற்கு துணை செய்திருக்கின்றன. ஒரு இனத்தை வெற்றி கொள்ள, அடிமைப்படுத்த அம்மக்களிடமிருந்து எழும் போராட்டக்காரர்களை மட்டுமல்லாது அம்மக்கள் ஒட்டுமொத்தமாக பாதிப்பிற்குள்ளாக்கி அழிப்பது ஒரு யுக்தியாகவே இருந்திருக்கிறது.நோய் தொற்று இந்தப் பணியை அதாவது இனப்படுகொலையை மிக எளிமையாக செய்து முடித்தது.

என்கிறார். இவ்வாறு அனுப்பிய போர்வைகள் செவ்விந்திய போர்வீரர்களிடையே நோயைப் பரப்பவும் செய்தது. இந்த நோய் தொற்று பல செவ்விந்தியக் குழுக்களை முற்றிலுமாக நிலைகுலைய வைத்தது. இவ்வாறாக ஆங்கிலேயர்கள் நோய் தொற்று மூலம் செவ்விந்தியர்களின் எழுச்சியைக் கிட்டதட்ட முடிவுக்கு கொண்டுவந்தனர்.

## அமெரிக்கப் பழங்குடிகளின் வீழ்ச்சியும், நோய் தொற்றும்

இந்நிகழ்விற்கு 250 வருடங்களுக்கு முன்பு, கி.பி. 1519 இன்றைய மெக்சிக்கோவிற்கு வந்திறங்கிய ஸ்பேனிய நாட்டின் ஹெர்னான் கோர்ட்டீஸ், மெக்சிக்கோவின் பூர்வகுடி பேரரசான ஏஸ்டெக் அரசை இவ்வாறான தொற்று நோயினைக் கொண்டு வீழ்த்திய வரலாற்றைக் காலனியாக்கத்தில் நோய்க்கிருமியின் முதல் பயன்பாடு எனச் சொல்லலாம். கோர்ட்டேஸ் அங்கே இறங்கியபோது அவனுடன் இருந்தவர் கிட்டதட்ட 500 வீரர்கள் மட்டுமே. அப்போது ஏஸ்டெக் பேரரசில் கிட்டதட்ட ஒன்றரைக் கோடி பூர்வகுடிகள் வாழ்ந்து வந்தனர். இவர்களுக்கென்று சிறப்பான நகரமாக டெனோச்சிட்லான் இருந்தது. கோர்ட்டேஸுக்கு மிகப்பெரும் மரியாதை கொடுத்து ஏஸ்ட்டெக் பேரரசின் அரசர் மோண்ட்டிஜுமா வரவேற்றார். ஆனால் உடனே அந்த அரசரைக் கைது செய்து அப்பேரரசை நிர்மூலமாக்கினார் கோர்ட்டேஸ். தனது 500 படைவீரர்களையும், சில பழங்குடி அரசுகளையும் துணைக்கு வைத்துக் கொண்டு இப்பேரரசை வீழ்த்தினார். அந்த யுத்தத்திலும் தொற்று நோய் ஒரு முக்கிய காரணியாக விளங்கியது. சின்னம்மை இந்த பூர்வகுடிகளிடம் ஸ்பானியர்களிடமிருந்து பரவியது.

ஒரு வருட காலத்திற்குள் இந்த பழங்குடிகளின் மக்கள் தொகையில் கிட்டதட்ட 60% இறந்து போயினர். அதாவது 80 லட்சத்திற்கும் அதிகமானோர் இறந்தனர். அப்படிப்பட்ட சூழ்நிலையினை உருவாக்கியே கோர்ட்டேஸால் 2 லட்சம் ஏஸ்டெக் வீரர்களை வெற்றிக் கொள்ள முடிந்தது. "பூச்சிகளைப் போல கூட்டம் கூட்டமாக மக்கள் இறந்தனர். ஒட்டுமொத்த குடும்பங்கள் இறந்த நிலையில் அவர்களது வீடுகளிலேயே அவர்கள் புதைக்கபட்டனர். அவர்கள் வீடுகளே கல்லறைகளாகின' என்று கோர்ட்டேஸுடன் வந்திருந்த சாமியார் எழுதினார். இந்த நோயினால் குழந்தைகள் பெருமளவில் இறந்தனர். இதனால் பாதிக்கப்பட்ட இளைஞர்களால் ஸ்பானிய படைவீரர்களை எதிர்த்து யுத்தம் நடத்த முடியவில்லை. இவ்வாறு மக்கள் தொகை சீரழிந்ததால் விவசாயம் பாதிக்கப்பட்டு பஞ்சம் தலைவிரித்தாடியது. உணவில்லாமல் பெருமளவில் மக்கள் தங்களது பலத்தை இழந்தனர். இது மேலும் இவர்களைப் பலவீனப்படுத்தியது. கிட்டதட்ட 70 நாட்களுக்குள் பெருமளவில் அழிவு நடந்து முடிந்தது. இவ்வாறு தான் இந்த ஏஸ்டெக் பேரரசும், பழங்குடி மக்களும் அழிந்து ஸ்பானிய காலனியாக மெக்சிகோவும் மத்திய அமெரிக்காவும் உருவானது.

இதே போன்று இன்கா எனும் பழங்குடி பேரரசும், மாயன் பேரரசும் இந்த சின்னம்மையால் முற்றிலுமாக துடைத்தெறியப்பட்டன. தொற்று நோய்களால் கிட்டதட்ட 90 சதவீதமான பழங்குடி அமெரிக்கா மக்கள் அழிந்து போனார்கள். சின்னம்மையை ஒரு போர் ஆயுதமாக மேற்கத்திய நாடுகள் கிட்டதட்ட இரண்டாம் உலகப் போர்வரை முயற்சித்தன. 20ஆம் நூற்றாண்டில் இதற்கான தடுப்பூசி கண்டுபிடிக்கும்வரை இது தொடர்ந்தது.

## வணிக விரிவாக்கம்: ஆசியா, ஆப்பிரிக்காவிற்கு கொண்டு வந்த நோய்த் தொற்று

தொற்று நோயை ஆயுதமாக பயன்படுத்திய வழிமுறைகள் ஆஸ்திரேலியா, பசிபிக் பழங்குடிகள், இந்தியத் துணைக்கண்டம் என பல இடங்களில் காலனிய அரசுகளால் நடைமுறைப்படுத்தப்பட்டன. மருத்துவ அறிவு வளராத சமூகங்கள் இந்நோய்களுக்கு வகைதொகையின்றி பலியாகின. போர் ஆயுதங்களை விட இந்த கிருமிகளே பெருமளவில் வெற்றியைக் காலனிய ஆதிக்கத்திற்கு துணை செய்திருக்கின்றன. ஒரு இனத்தை வெற்றி கொள்ள, அடிமைப்படுத்த அம்மக்களிடமிருந்து எழும் போராட்டக்காரர்களை மட்டுமல்லாது அம்மக்கள் ஒட்டுமொத்தமாக பாதிப்பிற்குள்ளாக்கி அழிப்பது ஒரு யுக்தியாகவே இருந்திருக்கிறது.நோய் தொற்று இந்தப் பணியை அதாவது இனப்படுகொலையை மிக எளிமையாக செய்து முடித்தது. மக்களின் வலிமை குன்றும் போது அம்மக்களின் பொருளாதார நடவடிக்கைகள் குறைகின்றன. இது உற்பத்தியைப் பெருமளவில் பாதிப்புக்கு உள்ளாக்குகிறது.

இந்த உற்பத்தி முடக்கம் பஞ்சத்தை மேலும் கூர்மையாக்கி ஒட்டுமொத்த இனத்தையும் ஊனமுற்றதாக்குகிறது. இவ்வாறு தான் காலனியாக்கங்கள் காலம் காலமாக ஏகாதிபத்தியங்களால் ஏற்படுத்தப்பட்டிருகின்றன. ஏகாதிபத்திய வணிகத்திற்காக நிகழ்த்தப்பட்ட பயணங்கள், யுத்தங்கள் இந்த நோய்க்கிருமிகளை உலகலாவிய அளவில் கொண்டு சென்றன. சீனாவின் யூனான் பிரதேசத்தில் 1850இல் ஆரம்பித்த ப்ளேக் நோய் சீனாவின் மையப்பகுதியில் பெரும் தாக்கத்தைக் கொண்டுவந்தது. இந்த நோய் ஆசியக்கண்டத்தில் பரவுவதற்கு முக்கியக் காரணமாக அமைந்தது அதன் வணிகச் செயல்பாடுகளே. வெள்ளையரின் 'ஓப்பியம்' வணிகப் போக்குவரத்து இந்த நோயைப் பல இடங்களுக்குப் பரப்பியது. இந்த நோய் ஹாங்காங்கிலிருந்து இந்தியத் துணைக்கண்டத்திற்குக் கொண்டுவரப்பட்டது. இதில் கிட்டதட்ட 1.25 கோடி இந்தியர்கள் பலியானர்கள். பெருமளவில் இந்த தொற்று நோய்கள் துறைமுக நகரங்கள், வணிக நகரங்கள் வழியாகவே ஆசியக் கண்டங்களில் பற்றிப்பரவின.

உடல்மீது நிகழ்த்தப்பட்ட கிருமித் தாக்குதல் என்பது போரில் ஈடுபடாத, காலனிய எதிர்ப்பில் நேரடியாக பங்கேற்காத மக்கள் மீதும் யுத்தம் தொடுத்தது. இந்த வகையான தாக்குதல் என்பது காலனியத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட மக்கள் உடல்ரீதியான காலனியாக்கத்திற்கும் உள்ளாக்கப்பட்டார்கள். இந்த நோய் தொற்று என்பது ஒரு யுத்தக் கருவியாக தமிழீழ மக்கள் மீது நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலையின் போதும், அதற்கு பிந்தைய காலம் வரையிலும் தொடர்கிறது. பொருளாதார ஆக்கிரமிப்பு என்பது மட்டுமே அடிமைப்படுத்தல் அல்லது காலனியத்தின் முற்றுமுழுதான வடிவமாக அமையவில்லை என்பதை இன்று வரை உலகம் விவாதித்துக் கொண்டிருக்கிறது. ●

கட்டுரை குறித்த கருத்துக்களை தெரிவிக்க
may17voice@gmail.com



## கொரோனா நெருக்கடியில் கொல்லப்படும் தொழிலாளர் உரிமைகள்

# வாழ்வின் விளிம்பில் முறைசாரா தொழிலாளர்கள்

**இந்தியாவின் பெரும்பான்மை முறைசாராத் தொழிலாளர்களைப் பற்றி கருதாமல், அவர்களைக் கைவிட்டுவிட்டு அறிவிக்கப்பட்ட 21நாள் ஊரடங்கு அவர்களது வாழ்வை விளிம்பிற்குத் தள்ளியிருக்கிறது.**

இந்தியா என்ற நிலப்பரப்பைப் பொருளாதாரக் கட்டமைப்புரீதியாக பார்த்தால், அது பலதரப்பட்ட பொருளாதார நிலையில் வாழும் மக்களைக் கொண்ட ஒரு துணைக்கண்டம் ஆகும். இதில் பெரும்பான்மையான மக்கள் தொகை பொருளாதாரரீதியாக ஏழ்மையிலும் (poor), கீழ் நடுத்தர வர்க்கத்திலும் (lower middle class) இருக்கக்கூடிய மக்கள். இப்படிப்பட்ட நிலப்பரப்பில் அரசாங்கம் ஒரு திட்டத்தைக் கொண்டு வரும் போதோ அல்லது நாடு முழுக்க ஊரடங்கு நிலையை நடைமுறைப்படுத்தும்போதோ அனைத்து மக்களுடைய நலனைக் கருத்தில் கொண்டு பாதுகாத்து செயல்பட வேண்டும். அனைத்து தரப்பட்ட மக்களுக்காகவும் தான் அரசு இருக்கிறதேஒழிய பெரும் பணக்காரர்களுக்காவும் மேல் நடுத்தர வார்க்கத்துக்காரர்களுக்காவும் மட்டுமேயல்ல; அவர்களின் நலனை மாத்திரமே அக்கறை கொண்டு சட்டத்தை அமல்படுத்துவது என்பது பாசிசத்தின் ஒரு கூறு

இன்றுவரை உலகம்முழுவதும் (ஏப்ரல் 6 2020) கொரோனா நோய்தொற்றால் கிட்டத்தட்ட 1245732 பேர் பாதிக்கப்படும் 67927 பேர் உயிரிழந்தும் உள்ளனர். இந்தியாவைப் பொறுத்தவரை 4582 பேரும் தமிழ்நாட்டில் 571 பேரும் இந்தநோயால் பாதிக்கப்பட்டு, இந்தியா முழுவதும் 118 பேரும் தமிழ்நாட்டில் 5 பேரும் இந்த நோயினால் உயிரிழந்திருக்கின்றனர். மார்ச் மாத தொடக்கம் முதலே இந்த நோய்த்தொற்றின் வேகம் அதிகரிக்க, இந்தியஅரசானது 21 நாள்ஊரடங்குஉத்தரவை மார்ச் 24 ஆம் தேதி அறிவித்து அது மார்ச் 25-லிருந்து அமலுக்கு வந்தது. மனிதர்களைத் தனித்திருக்கச் செய்வது மூலமே நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்த முடியும் என்ற முடிவும் மத்திய அரசு இதை அமல் செய்ததையும் நாம் வரவேற்கிறோம். ஆனால் இந்தியா மாதிரியான உலகில் ஏழைகள் மற்றும் தொழிலாளர்கள் (அமைப்பு சார்ந்த மற்றும் அமைப்புசாரா தொழிலாளர்கள்) அதிகம் வாழும் நாட்டில் அரசாங்கம் சரியான திட்டமிடல் மூலமும் சரியான அணுகுமுறையின் மூலமும் தான் இந்த சட்டத்தை அமல்படுத்தியிருக்க வேண்டும். ஆனால், ஆட்சியாளர்கள் எப்போதுமே தாங்கள் சார்ந்திருக்கும் வர்த்தகத்தை மட்டுமே நினைவில் கொண்டு அத்தனை முடிவுகளையும் எடுக்கின்றனர் என்பதற்கான சாட்சியாக இந்த திட்டமிடாத அவசர முடிவு மாறியிருக்கிறது.

**சோவியத் நவம்பர் புரட்சிக்குப்பின் 1926இல்தான் இந்தியாவில் தொழிற்சங்கச் சட்டம் வருகிறது. அதில் சங்கம் வைத்துக்கொள்ளவும் உரிமைக்காக போராடுவும் தொழிலாளர் நலனுக்காக மக்களை அணிதிரட்டவும் உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன**

நம்மில் பலர் வசதியாக வீட்டில் பாதுகாப்பு உணர்வோடு மூன்று வேளை நல்ல உணவை சாப்பிட்டுக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில்தான் காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை பல லட்ச கூலித் தொழிலாளர்கள் வேலையிழந்து ஆயிரம் கிலோமீட்டருக்கு மேல் தங்கள் சொந்த கிராமத்திற்கு கால்நடையாக நடந்து கொண்டு இருக்கிறார்கள். இப்போதுதான் அமைப்புசாரா தொழிலாளர்களைப் பாதுகாக்க சட்டம் ஏதும் இல்லையா? என்ற கேள்வி எழுகிறது.



சோவியத் நவம்பர் புரட்சிக்குப்பின் 1926இல்தான் இந்தியாவில் தொழிற்சங்கச் சட்டம் வருகிறது. அதில் சங்கம் வைத்துக்கொள்ளவும் உரிமைக்காக போராடுவும் தொழிலாளர் நலனுக்காக மக்களை அணிதிரட்டவும் உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்திய விடுதலைக்குப்பின் தொழிலாளர்களுக்காக 44 சட்டங்கள் இயற்றப்பட்டன. சட்டப்பாதுகாப்பு, சமூகப்பாதுகாப்பு, குடியுரிமை, பணிப்பாதுகாப்பு, L.T.C., E.S.I., P.F., தொழில் தகராறுச் சட்டங்கள், தொழிலாளர்நல அமைச்சகம், தொழிலாளர் துறை என அனைத்தும் தொடங்கப்பட்டன. ஆரம்ப காலகட்டத்தில் தொழிலாளர்களின் உரிமை எப்படி இருந்தது என்பதற்கு சாட்சி அன்று நகராட்சியில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு E.S.I, குறைந்தபட்ச ஊதியம், P.F என அனைத்து சலுகைகளும் வழங்கப்பட்டன. அதேபோல் மத்திய தொழிற்சாலைகளில் H.A.L., B.H.E.L., தனியார் வங்கி, இன்சூரன்ஸ் கம்பெனிகள் போன்றவற்றிலும் கூட அனைத்து தொழிலாளர்களும் நிரந்தரத் தொழிலாளர்களாகவே இருந்திருக்கினர்.

**2002-இல்வாஜ்பாய் தலைமையிலான இந்திய அமைச்சரவை கூட்டம் நடந்தது. அதில் துப்புரவு, உணவகங்கள், நான்கு சக்கர வாகன ஓட்டுநர்கள் முதலிய தொழில்களில் பணிபுரியும் தொழிலாளர்களை நிரந்தரமாக்கத் தேவையில்லை என்று அந்த கூட்டத்தில் தீர்மானம் போடப்பட்டது**

1971-™ Contract Regulation And Abolition Act என்கிற ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டது. ஒப்பந்தத் தொழிலாளர்களை நிரந்தரத் தொழிலாளியாக ஆக்கக்கூடிய சட்டம் அது. துப்புரவு, உணவகங்கள், தோட்டப் பராமரிப்பு, பாதுகாப்பு பணி ஆகிய தொழில்களில் பணிபுரியும் தொழிலாளர்களை நிரந்தரமாக்கச் சொல்லும் அரசாணை 1976 இல் ஒன்றிய அரசால் பிறப்பிக்கப்பட்டது. இந்த சட்டத்தை அடிப்படையாக வைத்து நடந்த வழக்கில் தான் பல ஒப்பந்த தொழிலாளர்கள் நிரந்தரமாக்கப்பட்டனர். 1997-இல் நடந்த ஏர்இந்தியா வழக்கில் உச்சநீதிமன்றம் ஒப்பந்த தொழிலாளர்கள் 240 நாட்கள் வேலை செய்தால் அவர்களை நிரந்தர தொழிலாளர்களாக மாற்ற வேண்டும் என்று உத்தரவிட்டது. இந்த தீர்ப்பின் விளைவாக லட்சக்கணக்கான தொழிலாளர்கள் நிரந்தர தொழிலாளர்களானார்கள்.

2002-இல் வாஜ்பாய் தலைமையிலான இந்திய அமைச்சரவை கூட்டம்நடந்தது. அதில்துப்புரவு, உணவகங்கள், நான்கு சக்கர வாகன ஓட்டுநர்கள் முதலிய தொழில்களில் பணிபுரியும் தொழிலாளர்களை நிரந்தரமாக்கத் தேவையில்லை என்று அந்த கூட்டத்தில் தீர்மானம் போடப்பட்டது. 2001 இல் ஸ்டீல் அத்தாரிட்டி ஆஃப் இந்தியா வழக்கு தொடர்பான தீர்ப்பில் உச்சநீதிமன்றம் ஒப்பந்த தொழிலாளர்கள் வைத்துக்கொள்வதை அனுமதித்து தீர்ப்பு வழங்கியது. இத்தகைய நடவடிக்கைகள் மூலம் பலகோடி தொழிலாளர்கள் அமைப்புசாரா தொழிலாளர்களாக மாற்றப்பட்டார்கள். இதற்கான பின்னணியாக நாம் பார்க்கவேண்டியது தனியார்மயத்தைதான். 1991-க்குப்பிறகு இந்தியாவில் தாராளமயம் தனியார்மயம் உலகமயம் என்ற கொள்கையை ஒன்றிய அரசும், மாநில அரசுகளும் முழுவீச்சுடன் செயல்படுத்தத் தொடங்கின. அதன் பிறகுதான் பன்னாட்டு பெருநிறுவனங்களின்-முதலாளிகளின் மூலதனம் தங்கு தடையின்றி இந்தியாவுக்குள் நுழைந்தன. அதன் பிறகு இந்தியாவில் தொழிலாளர் சட்டங்கள் பெருங்கடலில் போட்ட உப்பைப் போல் மாறத் தொடங்கின. பெருமுதலாளி நிறுவனங்களின் நோக்கம் தங்களின் தேவைக்கு ஏற்ப வேலைகளை-ஆட்களை சேர்க்கவும் நீக்கவும் (hire and

fire) தங்கு தடையற்ற உரிமை வேண்டும்; தாங்கள் தருகின்ற கூலியை ஏதும் பேசாமல் வாங்கிக் கொள்ளும் ஆட்கள் வேண்டும் என்பது தான். இதை செயல்படுத்துவதற்காக தொழிற்சாலைகளில் ஒப்பந்த தொழிலாளர் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது. நிரந்தரத் தொழிலாளர்கள் தங்களுக்கான சுதந்திரமான தொழிற்சங்கம் அமைப்பதை ஆட்சியாளர்கள் துணையுடன் முதலாளிய நிறுவனங்கள் ஒடுக்கின.

இன்று இந்தியாவில் அமைப்பு சார்ந்த துறைகளில் பணிபுரியும் தொழிலாளர்களை விட அமைப்புசாரா தொழில்துறையில் பணிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கை பல மடங்கு அதிகம். 2012 நிலவரப்படி இந்தியாவில் கிட்டத்தட்ட 48.7 கோடி தொழிலாளர்கள் இருக்கிறார்கள். இதில் 94% பேர் அமைப்புசாரா தொழிலாளர்கள். 2016 நிலவரப்படி கிட்டத்தட்ட 10 கோடி பேர் இந்தியா முழுவதும் புலம்பெயர் தொழிலாளர்களாக இருக்கிறார்கள். இந்திய மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கு மக்கள் தொகை தங்கள் சொந்த ஊர்களில் இருந்து புலம்பெயர்ந்தவர்கள். இப்படிப்பட்ட சூழலில் தான் இந்த ஊரடங்கு உத்தரவிடபட்ட பிறகு பல லட்சம் தொழிலாளர்கள் (பலர் குடும்பத்துடன்) கால்நடையாக தங்கள் ஊர்களுக்கு நடந்து செல்லும் வலி நிறைந்த வேதனை மிக்க காட்சியை நாம் பார்த்திருப்போம். அவர்கள் இறந்து போனாலும் அவர்கள் குழந்தைகள் பசியால் நடுங்கினாலும் உணவிற்கும் பாதுகாப்பிற்கும் அவர்களைக் கேட்பாரற்ற கூட்டமாக மாற்றிய இந்த அரசாங்கத்தின்





கொள்கை முடிவு ஏழைகளுக்கு எதிரான மனநிலையையே காட்டுகிறது. ஊரடங்குக்கு உத்தரவிடும் போது ஒரு அரசு என்பது அதனுடைய அனைத்துத்தரப்பட்ட மக்களையும் சிந்தித்து முடிவெடுக்க வேண்டும். ஏற்கனவே மத்திய மோடி அரசனுடைய தவறுதலான பொருளாதாரக் கொள்கையினால் பொருளாதாரம் கடும்வீழ்ச்சியைச் சந்தித்துக் கொண்டிருக்கும் போது, இந்த 21 நாள் ஊரடங்கு ஆனது மேலும் கோடிக்கணக்கான வேலைவாய்ப்பை இழக்கும் சூழலை ஏற்படுத்தி இருக்கிறது. இவர்களுக்கு எந்தவித சமூகப் பாதுகாப்பும் அரசினுடைய சட்டப் பாதுகாப்பும் கிடையாது. ஒவ்வொரு நாளும் உடல் உழைப்பைத் தந்தால் தான் வீட்டில் அடுப்பு எரியும் என்பது தான் இவர்களுடைய வாழ்க்கைமுறை. ஆட்சியாளர்கள் பெருநிறுவனங்கள் மற்றும் பணக்காரர்களை மனதில் வைத்து திட்டமிடும்போது, 48 கோடிக்கும் அதிகமான தொழிலாளர்கள் பற்றி கவனத்தை எடுத்துக் கொள்ளாது என்பதே கார்ப்பரேட் அரசுகள் யாருக்காக இருக்கிறது என்பதைக் காட்டுகிறது. ஊரடங்கு அறிவிக்கப்பட்ட நாள் முதலே கிட்டத்தட்ட ஐம்பதுக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் உணவு கிடைக்காமல் பசியாலும், வெயில் கொடுமை தாங்காமல் தண்ணீரில்லாமல் மயக்கத்தினால் உயிர் இழந்திருக்கிறார்கள். இதில் 5 பேர் குழந்தைகள். உண்பதற்கு வழியில்லை என்ற நிலையில் 8 வயது சிறுவன் பசியில் மடிகிறான்.

இந்த சம்பவங்கள் அனைத்தும் அனைவரின் மனசாட்சியையும் உலுக்கியிருக்க வேண்டும். ஆனால் 21 நாள்கள் ஊரடங்கினை உத்தரவிட்ட போது இப்படி இந்தியாவில் சரி பாதிக்கு மேல் இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு, அவர்களுடைய உணவுத் தேவைபற்றியோ, அவர்களுக்கான நிதிப் பங்களிப்பை அளிப்பதைப் பற்றியோ மற்றும் அவர்களுக்குத் தேவைப்படும் மருத்துவ வசதி பற்றியோ இந்த அரசாங்கம் யோசித்ததா என்ற கேள்வியை நாம் எழுப்ப வேண்டும்.

தொலைக்காட்சி அல்லது முகநூல் வாயிலாக தொழிலாளர்களின் அவலநிலையைப் பார்க்கும் போது, திரையில் பார்த்த பாகிஸ்தான் பிரிவினை போது நிகழ்ந்த இடப்பெயர்வுக் காட்சிகள் நினைவுக்கு வருகின்றன. இந்த சூழலில் இந்திய அரசு அறிவித்திருக்கும் நிவாரணத்தைப் பாருங்கள்! வெறும் இரண்டு நாள் சம்பளம், 5 கிலோ தானியங்கள் கொண்டு ஊரடங்கில் வாழவேண்டும் என்றால் நம்மால் நினைத்துப் பார்க்க முடிகிறதா? இந்த கொரோனா நோய் தாக்கத்தினால் பொருளாதார நெருக்கடி நிலையை விட தற்போது உயிர்காத்தல் / தப்பித்தல் என்ற நெருக்கடியும் சேர்ந்து இணைந்துள்ளது. இந்த சூழலில் தான் உலக நாடுகள் பல தங்களுடைய குடிமக்களுடைய அடிப்படைத் தேவையைப் பூர்த்தி செய்து வருகிறது. குறிப்பாக அமெரிக்க அரசு சூழலை எதிர்கொள்ள 2 லட்சம் கோடி டாலர் நிவாரண நிதி அளித்துள்ளது. இது அந்நாட்டு மொத்த உற்பத்தியில் (ஜிடிபியில்) 10%. ஆண்டுக்கு 75 ஆயிரம் டாலருக்குக் குறைவான வருமானம் உள்ளவர்களுக்கு மாதம் குறைந்தபட்சம் 1000 டாலர் நிவாரணத் தொகையாக வழங்கி இருக்கிறது. அதுபோல் திருமணமானவர்களுக்கு 2400 டாலர் குழந்தைகள் இருப்பவர்களுக்கு 500 டாலர் என்ற அடிப்படையில் உதவித் தொகையினை அதிகரிக்கும் திட்டத்தினை அறிவித்திருக்கிறது. அதேபோல் டென்மார்க் மற்றும் நெதர்லாந்து அரசுகள் தங்கள் நாட்டில் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களை வேலை விட்டு நீக்கிவிடக்கூடாது என்பதற்காக, அவர்களுக்கான ஊதியத்தில் 75% முதல் 90% பணத்தை அரசே வழங்குவதாக உறுதியளித்து இருக்கிறது.

ஆனால், இந்தியாவில் ஊரடங்கு உத்தரவு அமலில் உள்ள சூழ்நிலையில் மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கூலியை 182-லிருந்து 202-ஆக உயர்த்தப்படும் என்று சொல்வது எவ்வளவு பெரியமோசடி? ஊரடங்கு காலகட்டத்தில் அவர்கள் எங்கே வேலைக்கு போக முடியும்? இதுகூட அடிப்படையாக ஒரு அரசுக்கு தெரியாமல் இருக்குமா? இதில் பல லட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கு கடந்த வருடம் பட்டுவாடா செய்யப்பட வேண்டிய பணமே இன்னும் நிலுவையில் இருப்பதாக மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் தொழிலாளர்களுக்கான சங்கம் அறிவித்துள்ளது. இப்படிப்பட்ட அன்றாடத் தொழிலாளர்கள் கோடான கோடி பேர் இந்த நாட்டுடைய பிரதமர் தங்கள் பசியைப் போக்க என்ன வழி சொல்வார் என்று ஆவலாக இருக்கும்பொழுது தொலைக்காட்சியில் பிரதமர் நரேந்திர மோடி தோன்றி 'கைதட்டுங்கள்', 'விளக்குஏற்றுங்கள்', நாம் அனைவரும் ஒன்று என்று நிரூபிப்போம் என்று சொல்கிறார். ஆனால், இந்திய மக்கள் அனைவருக்கும் தனித்தனியாக வயிறும் பசியும் இருக்கும் என்பதை மோடி மறந்து விட்டார் போலும். இப்பொழுது அடுத்த முறையும் தொலைக்காட்சியில் தோன்றி மக்களுக்கு என்ன டாஸ்க்கினை பிரதமர் கொடுப்பார் என்ற அச்சத்தில் ஏழை எளிய மக்களும் நடுத்தர மக்களும் இந்தியாவில் ஒருவித பயத்துடன் உள்ள நேரத்தில், இந்திய சர்க்கார் நிவாரண நிதியாக ரூபாய் 1.7 லட்சம் கோடியை அறிவித்திருக்கிறது. இது இந்தியாவின் ஜிடிபியில் 0.8 சதவீதம்தான். நெருக்கடியான சூழலில் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத மக்களைப் பாதுகாக்கும் வகையில் ஒதுக்கப்படுவது நிவாரண நிதி. ஆனால், கிட்டத்தட்ட அரசு அறிவித்து இருப்பதை விட இன்னும் 5 மடங்கு நிவாரண நிதியை அதிகரித்தால் மட்டுமே நோயால் உயிரிழப்பவர்களை விட அதிகமாக பசியால் உயிரிழக்கும் அவலத்தைக் கட்டுப்படுத்த முடியும் என்கின்றனர் பொருளாதார வல்லுநர்கள்.

தற்போதைய சூழலில் இந்திய அரசு அறிவித்து இருக்கும் நிவாரண நிதியில் வெறும் 60,000 கோடி அளவில் மட்டுமே நேரடியாக மக்களுக்குச் சென்று சேரும். எனவே தற்போது இந்திய அரசு அறிவித்திருப்பது நிவாரண நிதியாகவே வகைப்படுத்த முடியாது. உஜ்வாலா திட்டத்தின் கீழ் இலவச சிலிண்டர்கள், உணவு விநியோகம், கைம்பெண்கள் மற்றும் முதியோருக்கான கருணைத் தொகை இந்த மூன்று பிரிவுகளில் மட்டுமே கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மற்றவையெல்லாம் மத்திய அரசின் கீழ் ஏற்கனவே நடைமுறையில் உள்ள திட்டங்கள் தான். உதாரணமாக ஜெய் கிசான் திட்டத்தை எடுத்துக் கொள்வோம். இந்த திட்டத்தின் மூலம் ஒன்றிய அரசு 8.6 கோடி விவசாயிகளுக்கு ஆண்டுக்கு 6000 ரூபாயை மூன்று தவணைகளாக வழங்குவதாக சொல்லப்பட்டது. அந்த வகையில் தற்போது ஒரு தவணையை, அதாவது ரூபாய் இரண்டாயிரத்தை முன்னதாகவே வழங்கப் போவதாக அறிவித்திருக்கிறது. இது அந்த திட்டத்தின் கீழ் பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்ட தொகைதான். அதை முன்னதாக வழங்குவதை எவ்வாறு நிவாரண ஒதுக்கீடாக எடுத்துக் கொள்ள முடியும்? நாடுமுழுவதும் 5.1 கோடி கட்டுமானத் தொழிலாளர்கள் உள்ளனர். ஆனால், கட்டுமான தொழிலாளர்களுக்கான நலத்திட்டங்களுக்கு பெறப்பட்ட நிதியில் ரூபாய் 30 ஆயிரம் கோடியை மாநில அரசு பயன்படுத்திக் கொள்ளலாம் என்று கூறுகிறது. இதன்மூலம் 3.5 கோடி கட்டுமான தொழிலாளர்கள் பயன்பெறுவார்கள் என்று சொல்கிறார்கள். ஆனால், இந்தியாவில் பதிவு செய்யாத கட்டுமான தொழிலாளர்கள் 3 கோடிக்கு மேல் உள்ளனர். பதிவு செய்யப்படாமல் இருப்போருக்கு என்ன செய்யப் போகிறது அரசு? இந்த தொகையும் ஏற்கனவே ஒதுக்கப்பட்ட நிதியில் முறையாக செலவிடப்படாமல் இருந்த தொகைதான்.

**இவர்களை இந்த அரசு கைவிடப்பட்ட மக்களாகக் கருதுகிறார்களா அல்லது ஏழை மக்கள் என்ற காரணத்தினால் செத்தொழியுங்கள் என்று மறைமுகமாகச் சொல்கிறார்களா என்ற கேள்வி நம்மிடையே எழுகிறது.**

எல்லாவற்றுக்கும் மேலாக அரசு அறிவித்திருக்கும் நலத்திட்டங்கள் என்பது 'பதிவு செய்த தொழிலாளர்களுக்கு' மட்டுமே வழங்கப்படும் என்பதே மிகப்பெரிய அதிர்ச்சி தான். இந்தியாவில் படிப்பறிவு இல்லாமல், கிராமங்களில் வாழும் மக்கள் அதிகம். அப்படிப்பட்ட சூழ்நிலையில் பதிவு செய்யாத-படிப்பறிவு இல்லாத நபர்களை இந்திய அரசு கைவிட்டுவிடும் அபாயம் உள்ளது. இந்தியாவில் சுமார் 18 லட்சம் பேர் வீடற்றவர்களாக சாலையோரங்களிலும் 7.3 கோடிபேர் எந்த அடிப்படை வசதியும் இல்லாமல் சாலையோரங்களில் துணி/தகரத்தை வைத்து சிறுகட்டுமானத்தை ஏற்படுத்தி வீடுகளாகப் பயன்படுத்து வாழுகின்றனர். இவர்களை இந்த அரசு கைவிடப்பட்ட மக்களாகக் கருதுகிறார்களா அல்லது ஏழை மக்கள்

**ஊரடங்கு அறிவிக்கப்பட்ட நாள் முதலே கிட்டத்தட்ட ஐம்பதுக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் உணவு கிடைக்காமல் பசியாலும், வெயில் கொடுமை தாங்காமல் தண்ணீரில்லாமல் மயக்கத்தினால் உயிர் இழந்திருக்கிறார்கள். இதில் 5 பேர் குழந்தைகள்.**

கட்டுரை குறித்த கருத்துக்களை தெரிவிக்க
may17voice@gmail.com

என்ற காரணத்தினால் செத்தொழியுங்கள் என்று மறைமுகமாகச் சொல்கிறார்களா என்ற கேள்வி நம்மிடையே எழுகிறது.

இந்த நாட்டில் கொரோனா நோய் பரவாமல் தடுப்பது எவ்வளவு முக்கியமோ அதே அளவு முக்கியம் உழைக்கக்கூடிய மக்களின் உயிரை பசியிலிருந்து காப்பாற்றுவது. உலக அரங்கில் சமூக நலத்திட்டங்களில் மிகமோசமாக செயல்படும் நாடாக இந்தியா இருந்து வருகிறது. ஒவ்வொரு மணிநேரமும் போதிய ஊட்டச்சத்து இல்லாமல் 46 குழந்தைகள் இந்தியாவில் இறக்கின்றனர். உலகில் கொடுமையான வறுமையில் பாதிக்கப்பட்டவர்கள் வசிக்கும் நாடுகளின் பட்டியலில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது. இந்தியாவில் 7 கோடியே 2 லட்சம் மக்கள் மிக மோசமான வறுமையில் பாதிக்கப்பட்டுள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. 38% பேர் ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டு உள்ளதாக தேசிய குடும்பநல மற்றும் சுகாதார அமைப்பு மேற்கொண்ட ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது. மேலும் ஊட்டச்சத்துக் குறைபாடு ஏற்பட்டு உள்ள குழந்தைகளில் 72 சதவீதம் பேர் இரத்த சோகையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்ற அதிர்ச்சி செய்தியும் அதிலிருந்து தெரிய வருகிறது. உலக ஊட்டச்சத்துக் குறைபாடு உள்ள குழந்தைகளில் 50 சதவீத குழந்தைகள் இந்தியாவில் இருக்கிறார்கள் என்கின்றன சமீபத்திய புள்ளி விவரங்கள். ஏற்கனவே இந்தியாவில் 5 லட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் அரசின் தவறான பொருளாதாரக் கொள்கையால் வறுமையினால் உயிரிழந்துள்ளனர் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். இந்த தரவுகளில் இருந்து தான் நாம் அரசுகளை நோக்கிய கேள்விகளை எழுப்ப வேண்டியிருக்கிறது.

**ஒன்றிய அரசுத் தலைமை வழக்கறிஞர் துஷெர் மெஹ்தா, “கிட்டத்தட்ட 23 லட்சம் பேருக்கு உணவுகளையும் தண்ணீரையும் பாதுகாப்பையும் வழங்கியிருக்கிறோம்” என்றும் “யாரும் பாதசாரிகள் இல்லை” என்றும் பொய்யான தகவலை உச்சநீதிமன்றத்தில் மார்ச் 31 ஆம் தேதி கூறியிருக்கிறார்**

புலம்பெயர் தொழிலாளர்களின் நிலைமையைக் கவனத்தில் கொண்ட உச்சநீதிமன்றம் தானாக முன்வந்து கேள்வியெழுப்பிய போது, அரசு தரப்பில் பதிலளித்த ஒன்றிய அரசுத் தலைமை வழக்கறிஞர் துஷெர் மெஹ்தா, “கிட்டத்தட்ட 23 லட்சம் பேருக்கு உணவுகளையும் தண்ணீரையும் பாதுகாப்பையும் வழங்கியிருக்கிறோம்” என்றும் “யாரும் பாதசாரிகள் இல்லை” என்றும் பொய்யான தகவலை உச்சநீதிமன்றத்தில் மார்ச் 31 ஆம் தேதி கூறியிருக்கிறார். இதற்கு பிறகுதான், மகாராஷ்டிரா மாநிலம் வர்தா என்னும் இடத்தில் தங்கி அங்குள்ள கல்லூரியில் உணவுபதப்படுத்தல் துறையில் பயிற்சி மாணவனாக படித்து வந்த, நாமக்கல் மாவட்டத்தில் சொந்த ஊரைக் கொண்ட மாணவர் பாலசுப்பிரமணி லோகேஷ், ஊரடங்கு உத்தரவுக் காரணமாக 30 மாணவர்களுடன் தங்களின் சொந்த ஊர்களுக்கு நடந்து செல்வது என முடிவு செய்தனர். கிட்டத்தட்ட 1340 கிலோமீட்டர் பயணம் செய்ய வேண்டியிருந்தது. எப்படியாவது சொந்த ஊருக்கு திரும்ப வேண்டும் என 30 மாணவர்களும் நடைபயணமாக வாய்ப்பு கிடைத்த சில இடங்களில் லாரி மூலமாக பயணம் செய்து, கிட்டதட்ட 9நாள்கள் தொடர்ந்த பயணத்தில் 490 கிலோமீட்டர் தூரம் கடந்த நிலையில்,தெலுங்கானா மாநிலம் செகந்திராபாத் வந்தவர்கள் சமுதாய நலக்கூடத்தில் இரவு தங்கியிருக்கின்றனர். முகாமில் இருக்கும் ஒரு நாற்காலியில் அமரும் போது லோகேஷ் திடீரென நிலைதடுமாறி மயங்கி விழுந்திருக்கிறார். மருத்துவமனையில் அவரைப் பரிசோதித்த மருத்துவர் அவர் மாரடைப்பு காரணமாக இறந்துவிட்டதாக தெரிவித்திருக்கிறார். 3 நாட்களாக தொடர்ச்சியாக நடந்து வந்ததால் அவருக்கு உடலில் நீர்ச்சத்துக் குறைபாடு ஏற்பட்டு அதன் காரணமாக மாரடைப்பு ஏற்பட்டிருக்கலாம் எனக் கூறப்படுகிறது. மற்றோருபுறம் வேலைகளை இழந்த தொழிலாளர்களை பேருந்துகளில் மீட்க 600 முதல் 1000 பேருந்துக்கட்டணத்தை வசூலித்திருக்கிறது, உத்திரப் பிரதேசத்தில் யோகி அரசு. இதைவிட கொடூரமாக தங்களது ஊர்களுக்குத் திரும்பிய தொழிலாளர்களை ஆட்டு மந்தைகளைப் போல் அனைவரையும் ஓரிடத்தில் அமரவைத்து அவர்கள் மேல் இரசாயனத் தண்ணீரைப் பாய்ச்சி அடித்து சுத்தம் செய்திருக்கிறது. அடிப்படையில் ஏழைகளை, அடிப்படை மனித மாண்புள்ளவர்களாகக்கூட இந்துத்துவ அரசு நடத்தவில்லை.



**இந்த நேரத்தில் கூடவா அரசை நோக்கி கேள்வி எழுப்புவார்கள் என்பவர்களுக்கு மக்கள் தொற்றுநோயால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நேரத்திலும், இந்திய ஒன்றிய அரசு 116 மில்லியன் டாலர்களுக்கு இஸ்ரேலிடம் இருந்து ஆயுதங்கள் வாங்கும் ஒப்பந்தத்தைக் கமுக்கமாக முடித்திருக்கிறது.**

அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு அடுத்த மூன்று மாதத்திற்கு குறைந்தபட்சம் 25 நாட்களுக்கான ஊதியத்தையும் ஓய்வூதியத்தையும் இரண்டு மடங்காக வழங்க வேண்டும். விலையில்லா தண்ணீர் மற்றும் இலவச மருத்துவத்தை அடிப்படையாகக் கொடுக்க வேண்டும். நியாயவிலைக் கடைகளில் வழங்கப்படும் பொருள்களை இரண்டு மடங்காக அளிக்க வேண்டும். கூடுதலாக வீடில்லாத குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் புலம் பெயர்ந்த தனிநபர்களுக்கும் பொதுசமையலறையை உருவாக்கி அரசே உணவு வழங்க வேண்டும். இந்திய அரசு உடனடியாக தன்னுடைய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3 சதவீதத்தை மருத்துவக் கட்டமைப்புக்கு செலவிடுவதற்கு உறுதியளிக்க வேண்டும். இந்தத் திட்டம் அனைவருக்கும் இலவசமாக ஆரம்ப மற்றும் இரண்டாம்நிலை மருத்துவ சேவையை வழங்குவதை நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும். இந்த அடிப்படைத் தேவைகள் உடனடியானவை என்பதால் நியூசிலாந்து மற்றும் ஸ்பெயின் அரசுகள் தங்கள் தனியார் மருத்துவக் கட்டமைப்பை நாட்டுடமை ஆக்கியது போல் இந்திய அரசாங்கமும் அதே வழிமுறையை அவசரமாகப் பின்பற்ற வேண்டும். எந்த நோயாளியும் கொரோனா பரிசோதனைக்காக சிகிச்சைக்காக தனியார் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டால் அதற்காக கட்டணம் வசூலிக்கப்படக்கூடாது என்பதாக அவசரச் சட்டம் இயற்றப்பட வேண்டும். இந்த நேரத்தில் கூடவா அரசை நோக்கி கேள்வி எழுப்புவார்கள் என்பவர்களுக்கு மக்கள் தொற்றுநோயால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நேரத்திலும், இந்திய ஒன்றிய அரசு 116 மில்லியன் டாலர்களுக்கு இஸ்ரேலிடம் இருந்து ஆயுதங்கள் வாங்கும் ஒப்பந்தத்தைக் கமுக்கமாக முடித்திருக்கிறது. அதுவும் தொழில் முடங்கி சோற்றுக்கு வழியில்லாமல் கிடக்கும் மக்களிடம் நிதி தாருங்கள் என்று கேட்கிறார் மோடி. ஆனால், அதே நேரத்தில் அம்பானி, GMR, அதானி, ESSAR, டாடா போன்ற கார்ப்பரேட் முதலாளிகள் அரசு வங்கிகளுக்கு திருப்பி அளிக்க மறுக்கும் 10 லட்சம் கோடி பணத்தைக் கேட்க ஏன் மோடி – ஆர்எஸ்எஸ் மற்றும் வலதுசாரி சிந்தனையாளர்களுக்கு இந்நேரத்தில் கூட தைரியம் வருவதில்லை?

ஓ.... இந்தியாவை ஆட்சி செய்து கொண்டிருக்கும் 56இன்ச் மார்புடைய மோடிஅரசாங்கமே! ஒரு தரப்பு மக்களுடைய பாதுகாப்பையும் மருத்துவத்தையும் உணவையும் பேணிப் பாதுகாப்பது மட்டும் இந்தியாவை வல்லரசாக, நல்லரசாக மாற்றிவிடாது! கோடான கோடி உழைக்கும் வர்க்கத்தை உடைய இந்தியாவில், ’ஒரு குறிப்பிட்ட மக்களின்’ வாழ்வாதாரத்தையும் சுகாதாரத்தையும் மற்றும் அடிப்படைத் தேவைகளையும் பூர்த்தி செய்ய விரும்பினால், இந்த தொற்றுநோயின் முடிவின் மறுப்பக்கத்திற்கு வரும்போது நீங்கள் ஆட்சி செய்யும் கோடான கோடி கிராமங்கள் இல்லாமல், மக்கள் இல்லாமல் தொழிலாளர்கள் இல்லாமல், குழந்தைகள் இல்லாமல், ஏழை எளிய மக்கள் இல்லாமல், நடுத்தர மக்கள் இல்லாமல், முதியவர்கள் இல்லாமல், மாற்றுத்திறனாளிகளும் திருநங்கைகளும் இல்லாமல் உங்கள் அரசு யாருக்கானதாக எவருக்காக இருக்கப் போகிறது?

பிரதமர் மோடி அவர்களே நீங்கள் சொல்லுவதை எல்லாம் மக்கள் கேட்கிறார்கள் என்ற பூரிப்புடன் இருக்காதீர்கள்! நோய் தொற்றின்அபாயத்தை இந்தியா இன்னும் உணரவில்லை. இந்தியாவில் சரியான சோதனை முறைகளை மேற்கொள்ளுதல் மற்றும் இன்னும் பல லட்சம் பேரை ஒரு நாளில் பரிசோதித்தல் ஆகியவற்றை விரைவாக செய்தால் மட்டுமே இந்த நாடும் நாட்டு மக்களும் உங்கள் ஆட்சியில் தப்பிப்பார்கள். எப்போதுமே உங்கள் மாளிகையிலிருந்து உயர்ந்த மாடிக் கட்டடங்களை மட்டும் பார்க்காமல், உங்கள் கண்ணாடிகளைத் துடைத்து ஏழைகள் உடைய குடிசை வீடுகளையும் பாருங்கள்! அப்போது உங்களுக்குப் புரியும் எங்களின் நிலைமை. அடுத்தமுறை நீங்கள் தொலைக்காட்சியில் வரும்பொழுதும் உங்களை அச்சத்துடனே பார்த்துக் கொண்டிருக்கும் இந்தியாவுடைய பெரும்பான்மை மக்களில் நாங்களும் ஒருவர். நீங்கள் செயல்படும் வரை உங்கள் அரசு பூதக்கண்ணாடி போட்டு மக்களைப் பார்க்கும் வரை சாமானியனுக்கும், ஏழை எளிய மக்களுக்கும் தொழிலாளர்களுக்கும் தீர்வு வரும் வரை எங்கள் குரல்களும் எங்கள் முழக்கங்களும்எங்கள் விரல்களும் உங்களை நோக்கி கேள்வி எழுப்பிக் கொண்டே இருக்கும்!

●

## மலேசியாவில் சிக்கி தவிக்கும் 200க்கும் மேற்பட்ட தமிழர்களையும், ஈரானில் சிக்கியிருக்கும் தமிழக மீனவர்களையும் உடனடியாக மீட்க மத்திய, மாநில அரசுகளை மே பதினேழு இயக்கம் வலியுறுத்தல்



உலகம் முழுவதும் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்திவரும் கொரோனா வைரஸ் காரணமாக பல்வேறு நாடுகள் தங்களது நாட்டின் விமான சேவையை முற்றிலும் ரத்து செய்திருக்கிறது. இதனால் தமிழகத்திலிருந்து படிக்க, வேலைக்கு சென்ற பலர் தங்களது சொந்த ஊருக்கு திரும்ப முடியாமல் அந்தந்த விமான நிலையங்களிலேயே தவிக்கும் சூழல் உருவாகியிருக்கிறது. அப்படியாக தமிழகத்திலிருந்து மருத்துவம் படிக்க பிலிப்பைன்ஸ் சென்றிருந்த 10 தமிழக மாணவர்களும், சுற்றுலாவுக்குச் சென்ற 200க்கும் மேற்பட்டவர்களும் ஒருவேளை உணவுகூட இல்லாமல் தங்களது சொந்த ஊரான தமிழகத்திற்கும் வர முடியாமல் மலேசிய தலைநகர் கோலாலம்பூர் விமான நிலையத்தில் சிக்கித் தவித்து வருகிறார்கள். மேலும் கன்னியாகுமரி மற்றும் நாகப்பட்டினத்தைச் சேர்ந்த மீனவர்கள் ஈரான் நாட்டினால் சிறைப் படுத்தப்பட்டு அங்கு மிகுந்த துன்புறுத்தலுக்கு உள்ளாவதாகவும் தங்களை மீட்கக்கோரியும், சில நாட்களுக்கு முன்பாக காணொளி மூலம் கேட்டிருந்தார்கள். ஆகவே மலேசியாவில் சிக்கி தவிக்கும் 209க்கும் மேற்பட்ட தமிழர்களையும், ஈரான் நாட்டில் சிறைப்படுத்தப்பட்டிருக்கும் தமிழக மீனவர்களையும் உடனடியாக மீட்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாநில அரசு அழுத்தம் தரவேண்டுமாய் மே 17 இயக்கம் கேட்டுக்கொள்கிறது.

## தூங்கா நகரின் தொன்மையை அழிக்காதே!



மதுரையில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் வரலாற்று அடையாளமான தமுக்கம் மைதானத்தை இடித்துவிட்டு நவீன மால், வாகனக் காப்பகம் போன்று வணிக வளாகம் கட்டப்பட்டு வருகிறது. மதுரை வரலாற்றின் பல்வேறு அரசியல் எழுச்சி கூட்டங்களையும் மாநாடுகளையும் இளையோர் எழுச்சியின் மையமாகவும் இருந்தது தமுக்கம் மைதானம்.பெரியார் அண்ணா தொடங்கி நிகழ்கால அரசியல் மற்றும் புத்தகக் கண்காட்சி வரை பெருமக்கள்திரள் ஒன்றுகூடும் ஒரு இடத்தைத் தனியார் கார்ப்ரேட்டுக்குத் தாரை வார்ப்பேதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. பண்பாட்டு ரீதியாக சித்திரை திருவிழாவின் மிகமுக்கிய நிகழ்வுகள் நடைபெறும் இடத்தை மாற்றி வேறொரு இடத்திற்கு மாற்றியமைப்பதை உடனே அரசும் மாநகராட்சி நிர்வாகமும் கைவிட வேண்டும். மதுரை மாவட்ட மக்களின் உணர்வோடும் அரசியலோடும் கலந்த தமுக்கத்தைத் தனியாருக்குத் தாரை வார்க்காதே..!

## கொரோனா தொற்றும் கியூபாவின் மனிதநேயமும்

# முதலாளித்துவத்தின் தோல்வியும் சோசலிசத்தின் எழுச்சியும்



**“உலக மாந்தனாக உருவெடுப்பது என்பது மனித குலத்திற்கு நாம் செலுத்த வேண்டியக் கடனை நேர்செய்வதாகும்”**

இன்று உலகம் எதிர்நோக்கியுள்ள நெருக்கடி புதிரானது. கண்ணுக்குத் தெரியாத ஆனால் அனைவரையும் பாதிக்கக்கூடிய பொது எதிரியோடு நாம் சண்டை போட்டுக் கொண்டிருக்கிறோம்.

இப்படிப்பட்ட ஒரு நிலையில் தான் கடந்த அரை நூற்றாண்டுகளாக யார் இந்த உலகத்தைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்று பெரும்பான்மையான மக்களை நம்ப வைத்தார்களோ அந்த அமெரிக்கா, இங்கிலாந்து உள்ளிட்ட மேற்குலக முதலாளித்துவ நாடுகளின் அடிவாரமே தற்போது ஆட்டம் கண்டு கொண்டிருக்கிறது. ’எதை தின்றால் பித்தம் தெளியும்’ என்கிற நிலையில் இன்று அமெரிக்கா உள்ளிட்ட முதலாளித்துவ நாடுகள் கொரோனா தொற்றிலிருந்து சொந்த மக்களையே காக்க முடியாமல் திணறிக் கொண்டிருக்கின்றன. தங்கள் நாட்டிலிருந்து இந்த கொரோனா வைரஸை எப்படியாவது விரட்டிவிட வேண்டுமென்று பகிரத முயற்சி செய்கிறார்கள். ஆனால் இவர்கள் எதிர்பார்ப்பதை விட கொரோனா வைரஸ் எனும் பொது எதிரி பல மடங்கு பலம் வாய்ந்தவனாக இருக்கிறான்.

**’எங்களுக்கு யாரும் உதவ முன்வரவில்லை. கையறு நிலையில் உச்சத்தை நாங்கள் உணர்ந்தோம். இங்கேயே நோய்த் தொற்றுக்கு ஆளாகி இறந்து விடுவோமோ என்று கூட அஞ்சினோம். கியூபா நீட்டிய உதவிக்கரமே எங்களை இன்று உயிருடன் வைத்துள்ளது. கியூப மக்கள் வெறுப்புடன் எங்களை எதிர் கொள்வார்கள் என்று எதிர்பார்த்தோம். மாறாக அன்புடன் எங்களை வரவேற்றனர். ஒரு சின்னசிறிய நாடு தங்கள் இதயத்தை எங்களுக்காக திறந்ததை மிகுந்த நன்றியுடன் நினைவுக் கூறுகிறோம்.**

இந்த சமயத்தில் தான் பொது சமூகத்திற்கு மக்கள் நலனில் அக்கறைக்கொண்ட மக்களுக்காக இயங்கும் பொது நிறுவனங்கள் உள்ளிட்ட பொதுமை சமூகம் இருந்திருந்தால் இந்த பிரச்சனையை எளிமையாக கைகொண்டிருக்கமுடியுமே என்ற எண்ணம் வந்திருக்கிறது. இப்படிப்பட்ட ‘சோசலிச’ எண்ணம் அவர்களுக்கு வருவதற்கு மிகமுக்கிய காரணம் கியூபா.

கியூபா கரீபிய கூட்டமைப்பில் இருக்கும் ஒரு சின்னஞ்சிறிய நாடு. இன்னும் சொல்லப்போனால் கடந்த 60 ஆண்டுகளாக அமெரிக்காவின் பொருளாதாரத் தடையில் சிக்கிய நாடும் கூட. இப்படிப்பட்ட ஒரு சின்ன நாட்டின் மருத்துவ உதவியைத்தான் இன்று உலகமே வியந்து பார்த்துக்கொண்டிருக்கிறது. இதற்கு இரண்டு உதாரணங்களை சொன்னால் புரிந்துகொள்ள ஏதுவாக இருக்கும்.

ஒன்று கடந்த மார்ச் மாதம் 12ஆம் தேதி இங்கிலாந்துக்கு சொந்தமான ’டைமண்ட் பிரின்ஸ்’ என்ற சொகுசு கப்பல் ஒன்றில் இருந்த 3700 பேரில் 50 பேருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது. இது மற்றவர்களுக்கு பரவாமல் இருக்க உடனடியாக அருகாமையில் இருக்கும் ஒரு நாட்டின் துறைமுகத்தில் கப்பலைத் தரையிறங்கி பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்கலாமென்று முடிவு எடுக்கப்படுகிறது. அதன்படி அந்த கப்பல் இருக்கும் இடத்திலிருந்து அருகாமையில் இருக்கும் நாடு இங்கிலாந்தின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட பஹாமாஸ் நாடு. உடனடியாக அந்த நாட்டிடம் நங்கூரமிட அனுமதி கோரப்படுகிறது. அவர்கள் அதற்கான அனுமதியைத் தரமறுத்துவிட்டார்கள். அதாவது இங்கிலாந்துக்காரர்கள் அதிகமாக இருக்கும் இங்கிலாந்து சொகுசு கப்பலை இங்கிலாந்து ஆதிக்கத்திற்கு உட்பட்ட ஒரு சின்ன நாடு அனுமதிக்க மறுத்து விட்டது. இங்கிலாந்து வெளியுறவுத்துறை அதிகாரிகள்



எவ்வளவோ முயற்சி செய்து பார்த்தும் பஹாமாஸ் நாடு தொடர்ந்து மறுத்துவிட்டது. வேறு வழியில்லாமல் வேறு பல நாடுகளிடம் இங்கிலாந்து அனுமதி கோருகிறது. யாருமே அனுமதியளிக்கவில்லை. இந்த நிலையில் 3700 பயணிகளுடன் என்ன செய்வது, எங்கு போவது என்று தெரியாமல் கப்பலில் தத்தளித்துக் கொண்டு இருந்தார்கள். இந்த நிலையில்தான் மார்ச் 18ம் தேதி இந்த கப்பலைத் தனது துறைமுகத்தில் நங்கூரமிடவும், பயணிகளைத் தங்கள் நாட்டிற்குள் ஏற்றுக்கொள்ளவும் நாங்கள் ஒத்துக் கொள்கிறோம் என்று அனுமதி அளித்தது கியூபா. இதனையடுத்து கப்பல் கியூபா வந்ததும் பயணிகள் அனைவரும் ’நன்றி கியூபா’ ’உங்களை நாங்கள் விரும்புகிறோம்’ என்ற பதாகைகளை ஏந்தி நன்றி பெருக்கோடு வெளியே வந்தார்கள். அவர்கள் அனைவருக்கும் தேவையான மருத்துவ உதவிகள் செய்த பின்னர் அவர்களை இங்கிலாந்துக்கு அனுப்பி வைத்தது கியூபா.

**இந்த நாட்டின் கடந்தகாலத்தை பற்றி இனி யாரும் பேசவேண்டாம்; எதிர்காலத்தை எப்படி உருவாக்குவது என்று யோசியுங்கள்; நம்மை போல் இனி உலகில் யாரும் துன்பப்படக்கூடாது என்ற இலட்சியத்தை மனதில்கொண்டு நடைபோடுங்கள், அதில் தவறுகள் வரலாம் அதை வெளிப்படையாக சொல்லி திருத்திக்கொள்வோம். நமக்கு என்று ஒருகாலம் வரும் அப்போது இந்த மொத்த உலகமும் நம்மை பார்த்து பெருமிதம் கொள்வார்கள். அப்படிப்பட்ட நிலையை அடைவதற்கான கொள்கைகளைதான் இனி நாங்கள் நடைமுறைப்படுத்தப்போகிறோம் என்று அறிவித்தார்**

இந்நிகழ்வு குறித்து அந்த கப்பலில் இருந்த பயணி ஒருவர் ’எங்களுக்கு யாரும் உதவ முன்வரவில்லை. கையறு நிலையில் உச்சத்தை நாங்கள் உணர்ந்தோம். இங்கேயே நோய்த் தொற்றுக்கு ஆளாகி இறந்து விடுவோமோ என்று கூட அஞ்சினோம். கியூபா நீட்டிய உதவிக்கரமே எங்களை இன்று உயிருடன் வைத்துள்ளது. கியூப மக்கள் வெறுப்புடன் எங்களை எதிர் கொள்வார்கள் என்று எதிர்பார்த்தோம். மாறாக அன்புடன் எங்களை வரவேற்றனர். ஒரு சின்னசிறிய நாடு தங்கள் இதயத்தை எங்களுக்காக திறந்ததை மிகுந்த நன்றியுடன் நினைவுக் கூறுகிறோம் என தெரிவித்தார்.

அடுத்து இந்த கொரோனா தொற்றால் சீனாவுக்கு அடுத்து அதிகம் பாதிக்கப்பட்ட நாடு இத்தாலி. இந்த தொற்று நோய் இத்தாலியில் பரவ ஆரம்பித்தவுடனேயே அந்நாட்டு அரசு அமெரிக்கா உள்ளிட்ட ஏனைய ஐரோப்பிய நாடுகளிடம் உதவி கோரியது. ஆனால் யாருமே உதவ முன்வரவில்லை. இதனால் இத்தாலியில் உயிரழப்புகள் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமிருக்கிறது. இத்தோடு தற்சமயம் இத்தாலியில் கொரோனாவுக்கு மருத்துவம் பார்க்கும் மருத்துவர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்களுக்கும் தொற்று வந்து அங்கு மருத்துவம் பார்க்க ஆளில்லாத மிகவும் இக்கட்டான ஒரு சூழல் நிலவியது.

இத்தாலியின் இந்த நிலையில் அவர்களுக்கு யாருமே உதவமுன்வராத நிலையில் கியுபா முன்வந்து அங்கு சுமார் 52பேர் கொண்ட தனது மருத்துவக்குழுவை இத்தாலியில் அதிகம் பாதிக்கப்பட்ட நகரான லொம்பாடிக்கு அனுப்பி வைத்திருக்கிறது.

இது கொரோனா தொற்றை மட்டும் எதிர்த்து போராட உலகமெங்கும் கியூபா

அனுப்பி வைத்த ஆறாவது மருத்துவக்குழு. ஏற்கனவே வெனிசுவேலா, நிக்கரகுவா, ஜமைக்கா, சுரினாம் கிரனடா ஆகிய நாடுகளுக்கும் கியூப மருத்துவக் குழுக்களை அனுப்பியிருக்கிறது. சீனாவுக்கு தனது வைரஸைக் கட்டுப்படுத்தும் மருந்தை அனுப்பிவைத்ததை போல உலகமெங்கும் சுமார் 28,628 கியூப மருத்துவர்கள் இந்த கொரோனா தொற்றை எதிர்த்து போரிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இத்தாலி கியூபாவின் உதவியை நாடியது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனெனில் முதலாளித்துவ கொள்கை கொண்ட ஒரு நாடு பொதுவுடைமை





கொள்கையைக் கொண்ட சின்னஞ்சிறிய நாட்டிடம் உதவிகேட்டிருக்கிறது என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். கியூபா மருத்துவர்களின் இத்தாலி வருகை குறித்து கருத்து தெரிவித்த இத்தாலி அரசு 'விரைவில் இத்தாலி இந்த தொற்றிலிருந்து மீளும் என்ற நம்பிக்கை வந்திருக்கிறது' என்கிறது. அந்த நம்பிக்கை பொய்த்து போகவில்லை என்பது தான் கடந்த சிலநாட்களாக இத்தாலியிலிருந்து வரும் செய்திகள் நமக்கு உணர்த்துகிறது. அங்கு தொற்றின் வேகம் குறைந்து வருகிறது என்பது தான் அந்த செய்தி.

மேற்சொன்ன இரண்டு செய்திகளும் உலக அளவில் இன்று நடைபெற்றிருக்கிற மிகமுக்கியமான நிகழ்வுகள். ஏனென்றால் இத்தனை நாட்கள் நம்பவைக்கப்பட்டிருந்த முதலாளித்துவக் கொள்கைகள் மக்களுக்கு ஆபத்து என்கிற போது காக்கவில்லை என்பதையும், எதன்மீது இத்தனை காலமும் முதலாளித்துவம் கற்களை வீசிக்கொண்டு இருந்ததோ அந்த சோசலிசம் தான் மக்களைக் காத்தது என்பதையும் உலக மக்கள் கண்முன்னே பார்த்திருக்கிறார்கள்.

கியுபாவின் இந்த வளர்ச்சி ஏதோ ஓர் இரவில் ஏற்பட்டதல்ல அங்கு கடந்த 60ஆண்டுகளாக சேகுவேரா, பிடல் காஸ்ட்ரோ, ராயல் காஸ்ட்ரோ போன்றவர்களின் மக்கள் நலக்கொள்கைகளினால் இன்று இது சாத்தியமாகி இருக்கிறது. புரடசிக்குப் பின் கீயூபாவில் அமைச்சராக பொறுப்பேற்க்கொண்ட சேகுவேரா "இந்த நாட்டின் கடந்தகாலத்தை பற்றி இனி யாரும் பேசவேண்டாம்; எதிர்காலத்தை எப்படி உருவாக்குவது என்று யோசியுங்கள்; நம்மைப் போல் இனி உலகில் யாரும் துன்பப்படக்கூடாது என்ற இலட்சியத்தை மனதில்கொண்டு நடைபோடுங்கள், அதில் தவறுகள் வரலாம் அதை வெளிப்படையாக சொல்லி திருத்திக்கொள்வோம். நமக்கு என்று ஒருகாலம் வரும் அப்போது இந்த மொத்த உலகமும் நம்மை பார்த்து பெருமிதம் கொள்வார்கள். அப்படிப்பட்ட நிலையை அடைவதற்கான கொள்கைகளைதான் இனி நாங்கள் நடைமுறைப்படுத்தப்போகிறோம் என்று அறிவித்தார்". இப்படியாகத்தான் கியூபா தன்னைத் தகவமைத்துக்கொண்டு மக்கள் நலன் என்பதை முதன்மைபடுத்தியது. எவ்வளவோ இன்னல் வந்தாலும் மக்கள் அனைவருக்கும் இலவசக்கல்வி என்பதிலோ, இலவச மருத்துவம் என்பதிலோ அல்லது மக்கள் நலத்திட்டத்திலோ ஒருநாளும் அது சமரசம் செய்து கொள்ளவில்லை. அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் இராணுவத்திற்கு அதிக நிதி ஒதுக்கிய போது, கியூபா மக்களின் அடிப்படை தேவைகளுக்கு அதிக நிதியை ஒதுக்கியது. அதன்விளைவு தான் இன்று மற்ற நாடுகளை ஒப்பிடும் போது கியூபா அனைத்து நிலையிலும் உயர்ந்திருக்கிறது. இதை கீழே உள்ள 2018-2019 புள்ளிவிபரங்கள் உணர்த்தும்.

பார்வைக் குறைபாடு உடையோருக்கான திட்டம் வாயிலாக 2011 ஆண்டு வரையில் 25 நாடுகளிலுள்ள 8 லடசத்திற்கும் மேலான மக்களுக்கு மீண்டும் கண்பார்வைக் கிடைக்க வழிவகை செய்திருக்கிறார்கள். அதில் சிறப்பு என்னவென்றால் கியூபாவின் விடுதலைக்கு வழிவகுத்த போராளி சேகுவேராவை 1967இல் சுட்டுக்கொன்ற மரியோ தெரோன் என்பவருக்கு 2007ஆம் ஆண்டு பொலியாவியாவில் தங்களது கண் சிகிச்சை முகாமில் மருத்துவம் பார்த்து மீண்டும் கண்பார்வை அளித்தார்கள் கியூப மருத்துவர்கள். இதுமட்டுமில்லாமல் உலகிலேயே குழந்தைகளுக்கு 16வகையான நோய்களுக்குத் தடுப்புமருந்து கொடுக்கும் ஒரே நாடு கியூபா தான். அதில் 15 மருந்தைக் கீயூபா தானே உற்பத்தி செய்கிறது. நீரிழிவு, மஞ்சள் காமாலை மூளைகாய்ச்சல் உள்ளிட்ட பாதிப்பு அதிகம் இருக்கும் நோய்களுக்கான மருந்து கியூபாவிடம் இருக்கிறது. ஆனால் கடந்த 60ஆண்டுகளாக அமெரிக்காவின் பொருளாதார தடையால் இது உலகமெங்கும் போய்ச்சேரமால் அமெரிக்கா தடுத்துவிட்டது.

இப்படிப்பட்ட மக்கள் நலனில் அக்கறைக்கொண்ட ஒரு சோசலிச நாடு தான் உலகத்தையே அச்சுறுத்திக்கொண்டிருக்கும் கொரோனா என்ற கண்ணுக்கு தெரியாத பொதுஎதிரியை எதிர்த்து பலநாடுகளில் இன்று போரிட்டுக்கொண்டிருக்கிறது.

கியூபாவைப் போன்றே 'ஈழம்' என்ற ஒரு சோசலிச சமதர்மக் குடியரசை உருவாக்கி எல்லா வகையிலும் மக்கள் நலனை முன்னுறுத்தி திட்டம் வகுத்து செயல்பட்ட விடுதலைப் புலிகளைத் தான் ஈழத்தில் அமெரிக்கா இங்கிலாந்து போன்ற முதலாளித்துவ நாடுகள் தனது பொருளாதார நலனுக்காக இராணுவத்தை வைத்து 2009இல் இந்தியா மற்றும் இலங்கையோடு கூட்டுச்சேர்ந்து இனப்படுகொலை செய்தது. ஈழம் என்ற நாடு அமைந்திருக்குமேயானால் அங்கும் கியூபாவைப் போல மக்கள் நலன் சார்ந்த அரசு உருவாகி அது இந்நேரம் மக்களைக் காக்கும் போரில் முன்னனியில் இருந்திருக்கும். இது ஆரூடமல்ல தமிழர் அறம் அப்படியானது தான்.

| நாடு | வாழ்நாள் விகிதம் | சிசு மரணம் | மருத்துவ விகிதம் | கற்றோர் விகிதம் | வேலை இன்மை | வறுமை விகிதம் |
|---|---|---|---|---|---|---|
| கியூபா | 79% | 1.37% | 1-111 | 99.89% | 2.25% | 0.9% |
| அமெரிக்கா | 78% | 1.15% | 1-391 | 99% | 3.6% | 11.8% |
| இங்கிலாந்து | 80.7% | 4.18% | 1-357 | 99% | 3.8% | 14.8% |
| இந்தியா | 67.5% | 3.36% | 1-1612 | 79.5% | 3.9% | 17% |

இப்படி ஒரு நிலையைக் கியூபா அடைந்ததால் தான் இன்று ஒருலட்சத்திற்கும் அதிகமான கியூப மருத்துவர்கள் 104 நாடுகளில் பாதிக்கப்படும் ஏழை எளியோர்களுக்கு மருத்துவ உதவி செய்து வருகின்றனர். 2004இல் கியுபாவால் தொடங்கப்பட்ட 'ஆப்ரேசன் மிராக்கிள்' எனும்

ஆகவே இந்த பேரிடர் காலத்தில் மக்களுக்கு ஏற்பட்டிருக்கிற இந்த சோசலிச எண்ணம் போராளி பிடல் காஸ்ட்ரோ சொல்வதைப்போல "நேற்றைய கனவுகள் நனவாகத் துவங்கியுள்ளன" என்பதைத்தான் காட்டுகிறது. ●

**கியூபாவின் விடுதலைக்கு வழிவகுத்த போராளி சேகுவேராவை 1967இல் சுட்டுக்கொன்ற மரியோ தெரோன் என்பவருக்கு 2007ஆம் ஆண்டு பொலியாவியாவில் தங்களது கண் சிகிச்சை முகாமில் மருத்துவம் பார்த்து மீண்டும் கண்பார்வை அளித்தார்கள் கியூப மருத்துவர்கள்**

கட்டுரை குறித்த கருத்துக்களை தெரிவிக்க
may17voice@gmail.com




**துக்ளக் குருமூர்த்தி** வீட்டில் குண்டு வீச முயற்சித்ததாக கூறி தந்தை பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் 10 பேர் மீது குண்டர் சட்டம் போடப்பட்டதைக் கண்டித்தும், சீர்காழி பெரியார் செல்வம் அவர்களை ரவுடி பட்டியலில் இணைத்ததை கண்டித்தும், பெரியார் உணர்வாளர்கள் கூட்டமைப்பு சார்பாக மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம். 14-03-20 அன்று மாலை சென்னை வள்ளுவர்கோட்டம் அருகில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மே பதினேழு இயக்கம் சார்பாக ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் காந்தி கலந்துகொண்டு கண்டன விளக்க உரையாற்றினார்.


## கொரோனா அச்சுறுத்தல் காரணமாக +1 மற்றும் +2 இறுதிதேர்வு எழுதாத 70 ஆயிரம் மாணவர்களுக்கு ஏப்ரல் 15 க்கும் மேல் மறுதேர்வு நடத்துக!

**தமிழக அரசை மே பதினேழு இயக்கம் வலியுறுத்தல் – 25 மார்ச் 2020**

**நாடு முழுவதும்** ஊரடங்கு உத்தரவு பிறப்பித்து விட்டு, பதினொன்றாம் வகுப்பிற்கும் பன்னிரண்டாம் வகுப்பிற்கும் இறுதித் தேர்வை வைத்தால் யார் தான் எழுத முடியும். ஆகவேதான் எழுபதாயிரம் பேர் இறுதித் தேர்வை எழுதாததற்கு மாணவர்களின் மீது குற்றம் சொல்வதில் ஞாயம் இல்லை. அரசே கொரோனா குறித்து ஆயிரம் அச்சத்தை உருவாக்கி விட்டு பேருந்து முதல் கடைகள் வரை அனைத்தையும் அடைத்து வைத்துவிட்டு மாணவர்களை மட்டும் தேர்வு எழுதச் சொல்வது என்ன நியாயம்.ஆகவே பதினோராம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு இறுதித் தேர்வு எழுதாத 70,000 மாணவர்களுக்கு எப்படி பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வை ஏப்ரல் 15-ம் தேதிக்குப் பிறகு வைத்துக் கொள்ளலாம் என்று தமிழக அரசு முடிவெடுத்ததோ, அதேபோல தேர்வு எழுத முடியாத மாணவர்களுக்கு ஊரடங்கு உத்தரவு முடிந்த பின் மறுதேர்வு நடத்த வேண்டும் என்று மே 17 இயக்கம் கேட்டுக்கொள்கிறது.



# கொரோனா நோயும் இஸ்லாமிய வெறுப்பும்




கொரோனா வைரஸ் என்று சொல்லக்கூடிய கோவிட்-19 வைரஸ் இன்று உலகம் முழுக்க பரவி பெருமளவு உயிர் சேதத்தையும், நாம் நினைத்து பார்க்கவே முடியாத அளவிற்கான பொருளாதார அழிவையும் ஏற்படுத்தியிருக்கிறது. இரண்டாம் உலகப்போருக்கு பிறகான உலக ஒழுங்கையே மாற்றியமைக்க கூடியதாக கொரோனாவின் தாக்கமும் பாதிப்பும் இன்று விரிவடைந்துள்ளது.

**உலகம் முழுவதும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வந்த வேளையில் இந்திய அரசு நிர்வாகம் மெத்தனப் போக்குடனே செயல்பட்டது. டிசம்பர் 31, 2019 அன்றே உலக சுகாதார நிறுவனம் கொரோனா வைரசினை உலகம் முழுவதிற்க்கும் பரவக்கூடிய நோய்த்தொற்றாக அறிவித்தது அப்பொழுதும் மோடி அரசிடம் இருந்து எந்த வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.**

உலகம் முழுவதும் கொரோனாவிற்கு எதிராக போராடிக்கொண்டிருக்கும் அதே வேளையில் இந்தியா இசுலாமியர்களுடன் போரிட்டு கொண்டிருக்கிறது. தலைநகர் டெல்லியில் மார்ச் இரண்டாவது வாரம் ( 13 - 15) நடைபெற்ற தப்ளிக் ஜமாத் மாநாட்டை முன்வைத்து இந்த மாநாடு திட்டமிட்டு இந்தியா முழுவதும் கொரோனாவைப் பரப்புவதற்காக முஸ்லிம்களால் ஏற்பாடு செய்யப்பட்டது போலவும், இம்மாநாட்டில் கலந்து கொண்ட வெளிநாட்டவர்கள் மூலம் கொரோனாவை இந்தியாவில் திட்டமிட்டு பரப்பியதாக ஒரு பொய்யினை RSS, BJP கும்பல் இந்தியா முழுவதும் பெரும்பாலான ஊடகங்கள், சமூக வளைதளங்கள் மூலமாகவும், BJP தொழில்நுட்ப பிரிவு மூலமாகவும் (BJP IT WING) திட்டமிட்டு பரப்பின. இதற்கு உதாரனமாக ஏப்ரல் 1 ஆம் தேதி 'ஜிகாத் வைரஸ்(CORONA JIHAD)' என்பதே இந்தியா முழுவதும் ஊடகங்களில் டிரென்டிங்கில் இருந்தது மற்றும் ஏப்ரல் 2 தேதி 'MUSLIMS MEANS TERRORITS" என்ற ஹேஸ்டேக் இந்திய அளவில் டிரெண்ட் ஆனதைக் குறிப்பிடலாம். இந்தியாவில் வைரஸை விட இஸ்லாமியர்கள் மீதான இந்த வெறுப்பே வேகமாக பரவியது.

**தலைநகர் டெல்லியில் இந்த தப்ளிக் ஜமாத் மாநாடு நடைபெற்ற வேளையில் இந்தியா முழுவதும் என்ன நடந்து கொண்டிருந்தது என்பதை பார்க்கும் போது தான் BJP RSS கும்பலின் இஸ்லாமிய வெறுப்பு அரசியலுக்கு நாம் எவ்வளவு பலியாகியிருக்கிறோம் என்பதை உணர முடியும்.**

தலைநகர் டெல்லியில் இந்த தப்ளிக் ஜமாத் மாநாடு நடைபெற்ற வேளையில் இந்தியா முழுவதும் என்ன நடந்து கொண்டிருந்தது என்பதை பார்க்கும் போது தான் BJP RSS கும்பலின் இஸ்லாமிய வெறுப்பு அரசியலுக்கு நாம் எவ்வளவு பலியாகியிருக்கிறோம் என்பதை உணர முடியும். மார்ச் 11-13 ல் பஞ்சாபில் சீக்கிய மத குரு ஒருவர் இத்தாலியில் இருந்து இந்தியா திரும்பியபின் சுய ஊரடங்கை கடைபிடிக்காமல் பல்லாயிரம் பேர் கலந்து கொண்ட ' ஹோலா மொஹல்லா (HOLA MOHALLA)" என்ற சீக்கிய திருவிழாவில் கலந்து கொண்டார். பின்பு அவர் கொரோனா தாக்கத்தினால் உயிரிழந்தது மட்டுமில்லாமல் அவருடைய உறவினர்கள் 19 பேருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது. பின்னர் அவர்களுடன் தொடர்புடைய 40,000 பேர் தனிமைப்படுத்தப்பட்டனர். இதனால் இந்து சீக்கிய சமூகம் தான் திட்டமிட்டு கொரோனாவைப் பரப்பியதாக இங்கு யாரும் கூறவில்லை.

சீரடி சாய்பாபா கோவில் மார்ச் 20 வரை திறந்தே இருந்தது; காசி விஸ்வநாதர் கோவில் மார்ச் 21 வரையும் திருப்பதி தேவஸ்தானம் மார்ச் 20 வரையும் திறந்தே இருந்தன. இக்கோவில்களில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் தினந்தோறும் வழிபாட்டுக்கு வந்து சென்றுள்ளனர்.

- இது ஒருபுறம் இருக்க மார்ச் 15 ஆம் தேதி கர்நாடக பி.ஜே.பி முதல்வர் எடியூரப்பா தன்னுடைய சொந்த அறிவிப்பையும் மீறி 3000 பேருக்கு மேல் கலந்து கொண்ட திருமண நிகழ்வில் கலந்து கொண்டார்.
- மார்ச் 18 ஆம் தேதி இந்தியாவின் குடியரசுத்தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் காலை உணவு விருந்தினை அளித்தார். இந்நிகழ்வில் எந்த ஒரு சமூக விலகலும் கடைபிடிக்கப்படவில்லை.
- மார்ச் 23 வரை இந்தியாவின் பாராளுமன்ற கூட்டத்தொடர் நூற்றுக்கணக்கானோர் பங்கேற்க நடக்கவே செய்தது.
- மார்ச் 23 ஆம் தேதி தான் BJP யின் சிவராஜ் சிங் சுவகான் பல்லாயிரம் பேர் பங்கேற்க அவர் மத்திய பிரதேச முதல்வராக பதவியேற்றுக்கொண்டார்.
- இவ்வளவு ஏன் ஊரடங்கு அறிவிக்கப்பட்ட மார்ச் 24 ஆம் தேதி தான் கிட்டதட்ட 12 இலட்சம் மாணவர்கள் பங்கேற்ற 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வினைத் தமிழக அரசே முன்னின்று நடத்தியது.
- மார்ச் 25 ஆம் தேதி உத்திரப் பிரதேசத்தில் இராமர் கோவிலுக்கு அடிக்கல் நாட்ட அம்மாநில முதல்வர் யோகி ஆதித்யநாத் தலைமையில் நூற்றுக்கணக்கானோர் திரண்டு ஊர்வலமாக சென்றனர்.
- ஏப்ரல் 2 ஆம் தேதி தெலுங்கான மாநில அமைச்சர்கள் பங்குபெற்ற இராமநவமி பூஜை வெகு சிறப்பாகவே நடைபெற்றது.

**இந்தியாவில் முதல் கொரானோ தொற்று சனவரி மாதம் 30 ஆம் தேதி கண்டறியப்பட்டது. இது நடந்த 52 நாட்களுக்குப் பிறகே மோடி ஊரடங்கு உத்தரவினை அறிவிக்கிறார். இதற்கு இடைப்பட்ட காலத்தில் கொரோனாவை எதிர்கொள்வதற்கான எந்த வித ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளோ, நடவடிக்கைகளோ மத்திய அரசால் மேற்கொள்ளப்படவில்லை**


இந்தியா முழுவதும் உண்மை நிலவரம் இவ்வாறு இருக்க பிஜேபியினரும் அவர்களுக்கு பக்கபலமாக இருக்கும் ஊடகங்களும் தப்ளிக் ஜமாத் மாநாட்டை முன்வைத்து இஸ்லாமியர்கள் மீது வெறுப்பை உமிழ்ந்து வருகின்றனர்.தலைநகர் டெல்லி நிஜாமுதீனில் மார்ச்சு மாதம் நடைபெற்ற தப்ளிக் ஜமாத் மாநாடு முன்கூட்டியே திட்டமிடப்பட்ட ஒன்றாகும். வெளிநாட்டவர் பங்கேற்கும் இந்நிகழ்விற்கு முன்கூட்டியே முறையாக விசா பெற்ப்பட்டே அவர்கள் பயணம் மேற்கொண்டுள்ளனர். அவர்களின் பயணத்திட்டமும் முன்கூட்டியே திட்டமிடப்பட்ட ஒன்றே ஆகும். மாநாடு நடைபெற்ற இடம் தப்ளிக் ஜமாதீன் தலைமைச்செயலகம் ஆகும் எனவே அங்கு விடுதி வசதியும் இருந்ததால் மாநாட்டில் பங்கேற்றவர்கள் மற்ற இந்தியர்களைப்போலவே கொரோனா குறித்த அவசர நிலையினை அறியாது மார்ச் 19 வரை தங்கியிருந்திருக்கின்றனர். மார்ச் 19 ஆம் தேதி பிரதமர் மோடி நாட்டு மக்களிடம் உரையாற்றிய பிறகு தான் நிலமையின் அவசரம் உணர்ந்து அவர்கள் வெளியேற தொடங்கியுள்ளனர் அதற்குள் போக்குவரத்து வசதிகள் எல்லாம் துன்டிக்கப்பட்டுவிட்டதால் கிட்டதட்ட 1000 பேருக்கு மேல்வெளியேறமுடியாமல் மாட்டிக்கொண்டனர். அவர்களை முறையாக வெளியேற்ற டெல்லி காவல்துறையிடம் உதவி கேட்ட போது அவர்கள் அதை அலட்சியப்படுத்தியதுடன் மார்ச் 16 ஆம் தேதி டெல்லி அரசு வெளியிட்ட 50 பேருக்கு மேல் யாரும் கூடக்கூடாது என்ற ஆணையை மீறியதாக தப்ளிக் ஜமாத் நிர்வாகிகள் மீது வழக்கும் தொடுத்தது.

இவ்வாறு எதிர்பாராமல் நடந்த ஒரு விபத்தினை ஏதோ சதிச்செயலைப்போலான விசமத்தனமான மதவெறியைத் திட்டமிட்டு பரப்பவேண்டிய அவசியம் ஏன்? கொரோனா நோய்த்தொற்று உலகம் முழுவதும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வந்த வேளையில் இந்திய அரசு நிர்வாகம் மெத்தனப்போக்குடனே செயல்பட்டது. டிசம்பர் 31 2019 அன்றே உலக சுகாதார நிறுவனம் கொரோனா வைரசினை உலகம் முழுவதிற்க்கும் பரவக்கூடிய நோய்த்தொற்றாக அறிவித்தது அப்பொழுதும் மோடி அரசிடம் இருந்து எந்த வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மார்ச் 11 தேதி உலக சுகாதார நிறுவனம் கொரோனாவை உலகம் முழுவதும் பரவியுள்ள தொற்று நோய் (PANDEMIC) என அறிவித்தது. ஆனால் இதற்கு பதில் அளிக்கும் விதமாக மத்திய உள்துறை அமைச்சகம் கொரோனா நோய்த்தொற்று ஒரு மருத்துவ அவசர நிலை இல்லை என அறிவித்தது.

**மாநில அரசுகள் தங்களது சொந்த முயற்சியால் தனது மக்களை காப்பாற்ற மேற்கொள்ளப்பட்ட முயற்ச்சிகளும் மத்திய அரசு முறையாக நிதி ஒதுக்கததாலும் ஒத்துழைப்பு இல்லாததாலும் தடைப்பட்டன. இதனால் இந்திய அரசின் மீது சாதரண மக்களுக்கு ஏற்ப்பட்ட நியாயமான கோபத்தினை திசை திருப்பவே இந்த தப்ளிக் ஜமாத் பிரச்சனை திட்டமிட்டு பெரிதாக்கப்பட்டு இந்திய எதிர்ப்புணர்வானது இஸ்லாமிய வெறுப்பணர்வாக மடைமாற்றப்பட்டது**

இந்தியாவில் முதல் கொரோனா தொற்று சனவரி மாதம் 30 ஆம் தேதி கண்டறியப்பட்டது. இதுநடந்த 52 நாட்களுக்குப் பிறகே மோடி ஊரடங்கு உத்தரவினை அறிவிக்கிறார். இதற்கு இடைப்பட்ட காலத்தில் கொரோனாவை எதிர்கொள்வதற்கான எந்த வித ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளோ, நடவடிக்கைகளோ மத்திய அரசால் மேற்கொள்ளப்படவில்லை. முறையான முன்திட்டமிடல் இல்லாமல் திடீரென அறிவிக்கப்பட்ட ஊரடங்கால் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் பாதிப்புக்குள்ளானர். வெளி மாநிலங்களில் வேலை செய்யும் தொழிலாளர்கள் நடந்தே தங்களது சொந்த மாநிலங்களுக்கு கூட்டம் கூட்டமாக பயணப்பட்டனர். பெரும் எண்ணிக்கையில் கூட்டம் கூட்டமாக மக்கள் மேற்கொண்ட பயணம் போன்றவை இயல்பாகவே அரசு நிர்வாகத்தின் செயலற்ற தன்மையையே படம் பிடித்து காட்டின. ஊரங்கு அறிவிக்கப்பட்ட பின் அதனால் பாதிப்புக்கள்ளாகும் மக்களுக்கு எந்தவித நலத்திட்ட உதவிகளையோ பொருளாதார உதவிகளையோ வழங்காமல் வெறும் வெற்றுகூச்சலாகவே பிரதமரின் உரைகள் அமைந்திருந்தின. மாநில அரசுகள் தங்களது சொந்த முயற்சியால் தனது மக்களை காப்பாற்ற மேற்கொள்ளப்பட்ட முயற்ச்சிகளும் மத்திய அரசு முறையாக நிதி ஒதுக்கததாலும் ஒத்துழைப்பு இல்லாததாலும் தடைப்பட்டன. இதனால் இந்திய அரசின் மீது சாதரண மக்களுக்கு ஏற்ப்பட்ட நியாயமான கோபத்தினை திசை திருப்பவே இந்த தப்ளிக் ஜமாத் பிரச்சனை திட்டமிட்டு பெரிதாக்கப்பட்டு இந்திய எதிர்ப்புணர்வானது இஸ்லாமிய வெறுப்பணர்வாக மடைமாற்றப்பட்டது.

மார்ச் 18 ஆம் தேதியே தெலுங்கான மாநில அமைச்சகம் அம்மாநிலத்தில் கொரோனா தொற்றுக்குள்ளானவர்களின் பயண விபரங்களை ஆராயும் போது அவர்களுக்கும் டெல்லி தப்ளிக் ஜமாத் மாநாட்டிற்க்கும் தொடர்பு இருப்பதான உறுதிபடுத்தப்பட்ட தகவலை இந்திய சுகாதார துறைக்கு வழங்கியுள்ளது. தமிழக அரசும் இதே மாதிரியான எச்சரிக்கையை மார்ச் 21 ஆம் தேதி மத்திய உள்துறை அமைச்சகத்திற்கு வழங்கியது. ஆனால் அப்போதொல்லாம் எந்த நடவடிக்கையும் எடுக்காத இந்திய அரசு சரியாக மார்ச் 31 ஆம் தேதி பத்திரிக்கையாளர்களை சந்தித்து தப்ளிக் ஜமாத் குறித்த தகவல்களை வெளியிட்டது. அடுத்த இரண்டு நாட்களுக்கு இந்தியா முழுவதும் ' ஜிகாத் வைரஸ்' என்று பொய்யான தகவல் ஊடகங்களாலும் சமூக வலைதளங்களாலும் பி.ஜே.பி தொழில்நுட்ப பிரிவாலும் திட்டமிட்டு பரப்பப்பட்டது. மோடி அரசின் செயலற்ற தன்மையை மறைக்கவே இப்படி ஒரு திட்டமிட்ட மத வெறுப்புணர்வை பி.ஜே.பி ஆர்.எஸ். எஸ் கும்பல் திட்டமிட்டு பரப்பியது. அடுத்தாக உலகம் முழுக்க பாசிஸ்டுகள் தங்களை இவ்வாறே அடையாளப்படுத்தி கொள்கின்றனர். அமெரிக்காவில் கொரோனாவின் பாதிப்பை சிறிதும் தடுப்பதற்கு திரானியற்ற அமெரிக்க அதிபர் டிரம்ப் தன்னுடைய பேட்டிகளிலும் டிவீட்டுகளிலும் கொரோனா வைரஸை 'சீனா வைரஸ்' என்று கூறி சாதாரண அமெரிக்க மக்களிடம் சீன வெறுப்புணர்வை விதைத்து தன்னுடைய அரசின் செயலற்ற தன்மையை மறைக்க முயலுவது போலவே இந்திய மோடி அரசு ' ஜிகாத் வைரஸ்' என்று இஸ்லாமிய வெறுப்புணர்வை விதைத்து தப்பிக்க முயலுகிறது. உலகம் முழுவதும் பாசிஸ்டுகள் போலியான ஒரு எதிரியை உருவகப்படுத்தி தாம் தப்பிப்பது என்ற உத்தியையே அப்பாவி இஸ்லாமியர்களை எதிரியாக காட்டுவதன் மூலம் பாசிச மோடி அரசு செய்து வருகிறது.




கொரோனாவிற்கு முன் இந்திய குடியுரிமை திருத்தச்சட்டம் (CAA)-2019 இந்திய அளவில் பெரும் எதிர்ப்பு ஏற்பட்டது. இச்சட்டம் ஒட்டுமொத்த இந்தியர்களுக்கும் எதிரானது எனினும் குறிப்பாக இஸ்லாமியர்களுக்கு எதிரானதாகும். எனவே ஒட்டு மொத்த இஸ்லாமிய சமூகமும் ஒன்று திரண்டு நாட்டின் பல்வேறு பகுதிகளில் இச்சட்டத்திற்கு எதிரான மூர்க்கமான தொடர் போராட்டத்தினை நடத்தியது. இதனைத்தொடர்ந்து தான் டெல்லி ஷாகின் பாக்கில் ஆர்.எஸ்.எஸ் கும்பல் இஸ்லாமியர்களுக்கு எதிரான திட்டமிட்ட வன்முறை வெறியாட்டத்தை நடத்தி முடித்தது. இதன் காரணமாக இந்தியா முழுவதும் இஸ்லாமியர்கள் மீதான ஒரு அனுதாப அலையும் குடியுரிமைத் திருத்தச் சட்டதிற்கு எதிரான மனநிலையும் மக்கள் மனதில் ஏற்பட்டுள்ளது. தற்போது கொரோனா நோய்த்தொற்றின் காரணமாக குடியுரிமைத் திருத்தச்சட்டத்திற்கு எதிரான தொடர் போராட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. ஆனால் மறுபடியும் இந்த போராட்டம் தொடரும் போது இந்த நியாயமான கோரிக்கைக்கு இருக்கும் பொதுச்சமூக ஆதரவைக் குறைத்து இஸ்லாமியர்கள் மீதான வெறுப்பை விதைப்பதற்கே இந்தக் கொரோனா நோய்த்தொற்றை மோடி அரசு பயன்படுத்திக்கொண்டது.

**கொரோனா நோய்த்தொற்றின் காரணமாக குடியுரிமை திருத்தச்சட்டத்திற்கு எதிரான தொடர் போராட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. ஆனால் மறுபடியும் இந்த போராட்டம் தொடரும் போது இந்த நியாயமான கோரிக்கைக்கு இருக்கும் பொதுச்சமூக ஆதரவை குறைத்து இஸ்லாமியர்கள் மீதான வெறுப்பை விதைப்பதற்கே இந்தக் கொரோனா நோய்த்தொற்றை மோடி அரசு பயன்படுத்திக்கொண்டது.**

தற்போது பல்வேறு ஆய்வுகளும் சோதனை முடிவுகளும் மோடி அரசு திட்டமிட்டு பரப்பிய இந்த தப்ளிக் ஜமாத் குறித்தான பொய்களைக் கட்டுடைத்துக் காட்டுகின்றன. குறிப்பாக இந்திய மருத்துவ ஆராய்ச்சி கழகத்தின் (ICMR) அறிவியலாளர்கள் சமர்பித்த ஆய்வறிக்கையொன்று தீவிர சுவாசப்பிரச்சனை (Secere Respiratory Illness) உள்ள 40% நோயாளிகள் டெல்லி தொடர்பான பயண வரலாறு எதுவும் இல்லாதவர்கள் என்று கூறியுள்ளது. பத்திரிக்கையாளர் சந்திப்பில் பேசிய மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத்துறையின் இணைச்செயலர் லாவ் அகர்வால் (lav Agarwal) அவர்கள் இந்தியாவின் கொரோனா தொற்று எண்ணிக்கையானது ஒவ்வொரு 4.1 நாட்களுக்கும் இரண்டு மடங்காக உயர்கிறது என்றும் இதில் தப்ளிக் ஜமாத் நிகழ்வால் ஏற்ப்பட்ட பாதிப்பு மட்டும் இல்லையென்றால் அந்த இரட்டிப்பு மடங்காக 7.4 நாட்கள் ஆகும் என்றும் ஒரு தகவலைச் சொல்லியிருக்கிறார். ஆனால் மத்திய சுகாதாரத்துறை வெளியிட்ட புள்ளி விபரங்களை எடுத்துப்பார்த்தால் உண்மை வேறு மாதிரியாக உள்ளது. இதன்படி மார்ச் 10 இல் 62 ஆக இருந்த கொரோனா பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை ஏப்ரல் 6 வரை 4067 ஆக உயர்ந்துள்ளது. இதன்படி வைரஸ் பாதிப்பு இரட்டிப்பாக 4.14 நாட்கள் ஆகியுள்ளது. இந்த மொத்த பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 4067 ல் அரசு வெளியிட்ட விபரங்களின் படி தப்ளிக் ஜமாத் மாநாட்டில் கலந்து கொண்டவர்கள் 1445, எனவே தப்ளிக் ஜமாத் மாநாட்டின் தாக்கம் இல்லையெனில் பாதிப்பு 2622 (4067-1445=2622) ஆகும். இதன்படி பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை இரட்டிப்பாக தேவையான நாட்கள் 4.63 நாட்கள் ஆகும். இதிலிருந்து தற்போதைய நிலவரத்திற்கும் தப்ளிக் ஜமாத்தின் தாக்கத்திற்கும் பெரிய அளவு தொடர்பில்லை என்பது தெளிவாக தெரிகிறது.

**கொரியாவில் சர்ச்சுக்கு சென்ற ஒரு பெண்ணின் மூலம் 5000 பேருக்கு கொரோனா தொற்று ஏற்ப்பட்ட போது அங்கு யாரும் அதை மதமாக பார்க்கவில்லை; இங்கிலாந்தில் ஊரடங்கையும் மீறி இந்து சாமியாரின் இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்ட 1000 பேரில் பலர் கொரோனா பாதிப்புக்குள்ளான போது அங்கும் யாரும் இதனை மதமாக பார்க்கவில்லை, இங்கே பிரதான பிரச்சனை நோய் தானே ஒழிய நோயாளி அல்ல**

கொரியாவில் சர்ச்சுக்கு சென்ற ஒரு பெண்ணின் மூலம் 5000 பேருக்கு கொரோனா தொற்று ஏற்ப்பட்ட போது அங்கு யாரும் அதை மதமாக பார்க்கவில்லை; இங்கிலாந்தில் ஊரடங்கையும் மீறி இந்து சாமியாரின் இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்ட 1000 பேரில் பலர் கொரோனா பாதிப்புக்குள்ளான போது அங்கும் யாரும் இதனை மதமாக பார்க்கவில்லை. இங்கே பிரதான பிரச்சனை நோய் தானே ஒழிய நோயாளி அல்ல; ஒரு பெருந்தொற்று நோயால் பாதிக்கப்பட்டவர்களை நாம் பாதிக்கப்பட்டவர்களாக அணுகி அவர்களுக்கு உதவ வேண்டுமே ஒழிய அவர்களையே குற்றவாளிகளாக்கி புறக்கணிக்கூடாது.

இத்தகைய இக்கட்டான ஒரு காலகட்டத்தில் நாம் அனைவரும் ஒற்றுமையுடன் இருந்து அரசின் கையாலாகதனத்தை அம்பலப்படுத்தி அதனைச் செயல்பட வைப்பதே முக்கியமானதாகும். அதை விடுத்து பாசிச பிரிவினைவாதிகள் பரப்பும் பொய்யான மத வெறிக்கு ஆளானால் நமக்கு தர வேண்டிய நிதியை மத்திய அரசு தர மறுப்பதையும் , நமக்கு சேர வேண்டிய அவசர உயிர் காக்கும் மருத்துவ உபகரணங்களை இந்திய அரசு சேரவிடாமல் தடுத்து வைத்திருப்பதையும் நோக்கி இறுதிவரை கேள்வி எழுப்ப முடியாமலே போய்விடும். பாசிஸ்டுகள் நம்மிடம் எதிர்பார்ப்பதும் இதைத்தான்; இத்தகைய மத வெறிக்கு பலியாகாமல் ஒற்றுமையுடன் பாதிக்கப்பட்டவர்கள் உடன் இருந்து கொரோனா பெருந்தொற்றை எதிர் கொள்வோம். ●

கட்டுரை குறித்த கருத்துக்களை தெரிவிக்க
may17voice@gmail.com

# கலவரங்களின் கமாண்ட் சென்டர் வாட்சாப்!



இது உங்கள் "வாட்சாப்" நம்பரா? என்று சாதாரணமாக கேட்கும் அளவிற்கு இந்த தகவல் பகிரும் செயலி அனைவரிடமும் பரவியுள்ளது. 40 கோடிக்கும் மேலான இந்தியர்கள் வாட்சாப் பயன்படுத்துகின்றனர். அதாவது, மூன்று பேரில் ஒருவரிடம் வாட்சாப் உள்ளது. உலகளவில் 200 கோடி வாட்சாப் பயன்பாட்டாளர்கள் உள்ளனர். தொடக்கத்தில், வாட்சப் நிறுவனர்களின் லாப நோக்கமின்மையும், பாதுகாப்பான எளிமையான தகவல் பரிமாற்ற தொழில்நுட்பமும் வாட்சாப்பின் அசுர வளர்ச்சிக்கு அடிப்படை காரணங்களாக பார்க்கப்படுகின்றன. அதேநேரம், வாட்சாப் தகவல்களைக் கண்காணிக்க முடியாமல் சர்வதேச அரசுகள் திண்டாடின. குறிப்பாக, வாட்சாப் அதிகமாக பயன்படுத்தப்படும் இந்தியாவில் பாதுகாப்புத் துறைக்கு பெரும் அச்சமாக இருப்பதாக பேசப்பட்டு வந்தது.

உலக அரசுகள் வாட்சாப் தகவலைக் கண்காணிக்க வைத்த கோரிக்கைகளை நிறுவனர்கள், செயலியின் தொழில்நுட்பத்தால் கண்காணிப்பு சாத்தியப்படாது என்று தெரிவித்து வந்தனர். மேலும், இந்தியாவிற்குள் வாட்சாப் "சர்வர்" நிறுவ இந்தியா வைத்த கோரிக்கையையும் அந்நிறுவனம் நிராகரித்தது. 2014ல் முகநூல் நிறுவனம் வாட்சாப்பை மிக அதிக பணம் (சுமார் ரூ.110,000 கோடி) கொடுத்து வலுக்கட்டாயமாக வாங்கியது. அதற்குமுன் கேட்டிறாத பணம் கொடுத்து வாட்சாப்பை வாங்கிய முகநூல் நிறுவனம் அதை கொண்டு வருமானம் பெரும் வழிகளில் ஈடுபட்டது. அதில் ஒன்று தான் "வாட்சாப் பேமண்ட்" எனப்படும் பணப் பரிமாற்ற சேவை. ஆனால், இதற்கான உரிமத்தை இந்திய ரிசர்வ் வங்கி வழங்க மறுத்தது. அதேநேரத்தில், வாட்சப் "வதந்திகளால்" (குழந்தை கடத்தல், மாட்டுக்கறி வைத்திருத்தல்) சமூகத்தில் கலவரங்களும் கொலைகளும் நடப்பதாக வாட்சாப்பிற்கு எதிராக 2017-18ல் சர்வதேச அளவு பிரச்சாரம் நடந்தது. அடுத்த சில மாதங்களில் வாட்சாப் இந்தியாவில் முகநூல் நிறுவனத்தின் "டேட்டா சென்டர்" பயன்படுத்துவதாக அறிவித்தது.

இந்துத்துவ ஆர்.எஸ்.எஸின் வாட்சாப் வதந்திகளால் மட்டுமே ஆட்சியைப் பிடித்தவர் பாஜக பிரதமர் நரேந்திர மோடி. இன்று உலகெங்கும் உள்ள தீவிர வலதுசாரி தேசியவாதிகளின் யுக்திமுறையாகவும் இதுவே உள்ளது. ஒருபுறம், "வதந்திகளைப் பரப்ப வேண்டாம்" என்று வாட்சப் நிறுவனத்தின் முழுப்பக்க பத்திரிகை விளம்பரங்கள் வெளியாகின. மறுபுறம், ஆளும் கட்சியின் அன்றைய தலைவர் அமித் ஷா தங்கள் கட்சியின் லட்சக்கணக்கான வாட்சாப் குழுக்கள் மூலம் எப்படி "பொய்யை உண்மையாக்க முடியும், உண்மையைப் பொய்யாக்க முடியும்" என்று மேடைகளில் ஒப்புதல் வாக்குமூலம் அளித்து வந்தார்.

பாஜக தனது 2018-2019 பாராளுமன்ற தேர்தல் பிரச்சாரத்தை லட்சக்கணக்கான வாட்சாப் குழுக்களின் வாயிலாக பரப்பிய வதந்திகள் மூலமே மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றியது. தற்போது, இந்தியாவில் "வாட்சாப் பேமண்ட்" சேவை சோதனையில் உள்ளது. விரைவில் வர்த்தக சேவைக்கு வெளியாகவுள்ளது. இலாபவெறி கொண்ட ஒரு கார்பொரேட் நிறுவனமும் மத வெறிபிடித்த ஒரு கட்சியும் தங்கள் நலன்களைக் கருதி சுமுகமான ஒப்பந்தம் செய்து கொண்டதை இது தெளிவுபடுத்துகிறது.

இதுவரை இந்துத்துவவாதிகளின் வதந்திகளையும் மத வெறுப்பையும் பிரச்சாரம் செய்ய பயன்பட்ட வாட்சாப் தற்போது கலவரங்களை அரங்கேற்றவும் பயன்படுத்தப்படுகிறது.

பிப்ரவரி 22, சனிக்கிழமை அன்று "குடியுரிமைத் திருத்தச் சட்டம்" (CAA) மசோதாவிற்கு எதிரான அமைதிவழி மக்கள் போராட்டம் தில்லி ஜாபிராபாத் மெட்ரோ ரயில் நிலையம் அருகே தொடங்கியது. கடந்த இரண்டு மாதங்களாக தில்லி சகீன்பாக்கில் அமைதியாக நடைபெற்று வரும் தொடர் போராட்டத்தை அடுத்து இந்தியாவின் பல்வேறு நகரங்களிலும் இந்த சட்ட திருத்தத்திற்கு எதிரான போராட்டம் வலுத்தது.

இந்தியாவெங்கும் வலுத்து வரும் தொடர் போராட்டங்களால் ஆளும் பாஜக அரசு திணறி வந்தது. பிப்ரவரி 24, 25 அமெரிக்க பிரதமர் ட்ரம்ப் இந்தியா வருகை தரவுள்ள சமயத்தில் பிப்ரவரி 22ஆம் தேதி தில்லியில் புதிதாக தொடங்கிய போராட்டம் அரசை கடும் நெருக்கடிக்குள்ளாக்கியது. இந்நிலையில், பிப்ரவரி 23ஆம் தேதி அன்று குடியுரிமைச் சட்டத்திற்கு ஆதரவாக நடைபெற்ற பேரணியில் தில்லி பாஜக தலைவர் கபில் மிஸ்ரா புதிதாக தொடங்கப்பட்ட சாந்த்பாக், ஜாபிராபாத் போராட்டங்களைப் போராட்டக்காரர்கள் தாமாக மூன்று நாட்களுக்குள் கைவிடாவிட்டால் பாஜக தொண்டர்கள் கலைப்பார்கள் என்று காவல்துறை அதிகாரிகள் முன்னிலையில் மிரட்டல் விடுத்தார்.

கபில் மிஸ்ரா பேசி முடித்த சில நேரத்திற்கெல்லாம் பாஜக குண்டர்கள் குடியுரிமைச் சட்டத்திற்கு எதிராக போராடுபவர்கள் மீதான கல்வீச்சை தொடங்கினர். இந்த கல்வீச்சு தாக்குதல்களைக் காவல்துறை ஓரளவிற்கு கட்டுக்குள் கொண்டுவந்தது. மறுநாள், பிப்ரவரி 24 அமெரிக்க அதிபர் குஜராத்தில் இருந்த நேரத்தில் கல்வீச்சு கலவரம் மீண்டும் வெடித்தது. கலவரத்தைக் கட்டுப்படுத்த காவல் துறையும் அரசும் எந்த

**பிப்ரவரி 22, சனிக்கிழமை அன்று "குடியுரிமைத் திருத்தச் சட்டம்" (CAA) மசோதாவிற்கு எதிரான அமைதிவழி மக்கள் போராட்டம் தில்லி ஜாபிராபாத் மெட்ரோ ரயில் நிலையம் அருகே தொடங்கியது. கடந்த இரண்டு மாதங்களாக தில்லி சகீன்பாக்கில் அமைதியாக நடைபெற்று வரும் தொடர் போராட்டத்தை அடுத்து இந்தியாவின் பல்வேறு நகரங்களிலும் இந்த சட்ட திருத்தத்திற்கு எதிரான போராட்டம் வலுத்தது.**

**கபில் மிஸ்ரா பேசி முடித்த சில நேரத்திற்கெல்லாம் பாஜக குண்டர்கள் குடியுரிமைச் சட்டத்திற்கு எதிராக போராடுபவர்கள் மீதான கல்வீச்சை தொடங்கினர். இந்த கல்வீச்சு தாக்குதல்களைக் காவல்துறை ஓரளவிற்கு கட்டுக்குள் கொண்டுவந்தது. மறுநாள், பிப்ரவரி 24 அமெரிக்க அதிபர் குஜராத்தில் இருந்த நேரத்தில் கல்வீச்சு கலவரம் மீண்டும் வெடித்தது. கலவரத்தைக் கட்டுப்படுத்த காவல் துறையும் அரசும் எந்த நடவடிக்கையும் எடுக்காத நிலையில் இரவு இஸ்லாமியர்கள் குடியிருப்புகளும் வணிக நிறுவனங்களும் குறிவைத்து இந்துத்துவ மதவெறியர்களால் சூறையாடப்பட்டன.**

**இந்தியாவெங்கும் வலுத்து வரும் தொடர் போராட்டங்களால் ஆளும் பாஜக அரசு திணறி வந்தது. பிப்ரவரி 24, 25 அமெரிக்க பிரதமர் ட்ரம்ப் இந்தியா வருகை தரவுள்ள சமயத்தில் பிப்ரவரி 22ஆம் தேதி தில்லியில் புதிதாக தொடங்கிய போராட்டம் அரசை கடும் நெருக்கடிக்குள்ளாக்கியது. இந்நிலையில், பிப்ரவரி 23ஆம் தேதி அன்று குடியுரிமைச் சட்டத்திற்கு ஆதரவாக நடைபெற்ற பேரணியில் தில்லி பாஜக தலைவர் கபில் மிஸ்ரா புதிதாக தொடங்கப்பட்ட சாந்த்பாக், ஜாபிராபாத் போராட்டங்களைப் போராட்டக்காரர்கள் தாமாக மூன்று நாட்களுக்குள் கைவிடாவிட்டால் பாஜக தொண்டர்கள் கலைப்பார்கள் என்று காவல்துறை அதிகாரிகள் முன்னிலையில் மிரட்டல் விடுத்தார்.**

நடவடிக்கையும் எடுக்காத நிலையில் இரவு இஸ்லாமியர்கள் குடியிருப்புகளும் வணிக நிறுவனங்களும் குறிவைத்து இந்துத்துவ மதவெறியர்களால் சூறையாடப்பட்டன.

பிப்ரவரி 25, செவ்வாய் அன்று கலவரம் மேலும் தீவிரமடைந்து அருகில் உள்ள மற்ற பகுதிகளுக்கும் பரவியது. இந்துத்துவக் கலவரக்காரர்கள் தெருக்களில் செல்வோரின் பெயர்களை விசாரித்து அவர்கள் இஸ்லாமியர்களாக இருந்தால் கொலைவெறி தாக்குதல் நடத்தினர். பல நேரங்களில் ஆண்களின் கீழ் ஆடையைக் கழற்றி இஸ்லாமியர் அல்ல என்பதை நிரூபிக்க ஆண் குறியைக் காட்ட மிரட்டப்பட்டனர். பத்திரிகை நிருபர்களும் தங்கள் உயிர்களைக் காப்பாற்றிக்கொள்ள ஆண் குறியை காண்பித்துள்ளார். நிருபர்களின் ஊடக உபகரணங்களும் வாகனங்களும் அடித்து நொறுக்கப்பட்டன. 5 இஸ்லாமியர் வழிபாட்டுத் தளங்களும் தீயிட்டு கொளுத்தப்பட்டன. சிறுபான்மையினர் மீதான இந்துத்துவ மதவாதிகளின் இரத்தவெறி தாக்குதல்கள் தில்லி காவல்துறையின் முழு ஒத்துழைப்புடன் நடந்தேறியது. பல நேரங்களில் காவல்துறையினர் இந்துத்துவ வெறியர்களுக்கு கற்கள் மற்றும் இதர ஆயுதங்களை வழங்கியதும் தெரியவந்தது. புதன்கிழமையன்று துணை இராணுவத்தினர் வந்து நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவந்தனர். இந்த கலவரத்தில் சுமார் 53 பேர் கொல்லப்பட்டதாக செய்திகள் வெளியாகின.

**பல நேரங்களில் காவல்துறையினர் இந்துத்துவ வெறியர்களுக்கு கற்கள் மற்றும் இதர ஆயுதங்களை வழங்கியதும் தெரியவந்தது. புதன்கிழமையன்று துணை இராணுவத்தினர் வந்து நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவந்தனர். இந்த கலவரத்தில் சுமார் 53 பேர் கொல்லப்பட்டதாக செய்திகள் வெளியாகின**

**பிப்ரவரி 25, செவ்வாய் அன்று கலவரம் மேலும் தீவிரமடைந்து அருகில் உள்ள மற்ற பகுதிகளுக்கும் பரவியது. இந்துத்துவக் கலவரக்காரர்கள் தெருக்களில் செல்வோரின் பெயர்களை விசாரித்து அவர்கள் இஸ்லாமியர்களாக இருந்தால் கொலைவெறி தாக்குதல் நடத்தினர். பல நேரங்களில் ஆண்களின் கீழ் ஆடையைக் கழற்றி இஸ்லாமியர் அல்ல என்பதை நிரூபிக்க ஆண் குறியைக் காட்ட மிரட்டப்பட்டனர். பத்திரிகை நிருபர்களும் தங்கள் உயிர்களைக் காப்பாற்றிக்கொள்ள ஆண் குறியை காண்பித்துள்ளார். நிருபர்களின் ஊடக உபகரணங்களும் வாகனங்களும் அடித்து நொறுக்கப்பட்டன. 5 இஸ்லாமியர் வழிபாட்டு தளங்களும் தீயிட்டு கொளுத்தப்பட்டன. சிறுபான்மையினர் மீதான இந்துத்துவ மதவாதிகளின் இரத்தவெறி தாக்குதல்கள் தில்லி காவல்துறையின் முழு ஒத்துழைப்புடன் நடந்தேறியது**

தில்லி கலவரத்தை முன்னின்று நடத்தியவர்கள் “வெளியாட்கள்” என்று பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சார்ந்த மக்கள் தொடர்ந்து சொல்வதைக் கவனிக்க முடிந்தது. இதனடிப்படையில் தொடரப்பட்ட விசாரணைகளில் தில்லி கலவரத்தின் செயல்திட்டத்தில் “வாட்சாப்” முக்கிய பங்குவகித்துள்ளது அம்பலமானது.

பிப்ரவரி 23ஆம் தேதி கபில் மிஸ்ரா CAAவிற்கு எதிராக போராடும் மக்கள் மீது வன்மத்தை உமிழும் பேச்சு முடிந்தவுடன் கலவரக்காரர்கள் பல வாட்சாப் குழுக்களை உருவாக்கி அதில் பல்வேறு பகுதிகளில் உள்ள தங்கள் ஆதரவாளர்களை இணைத்துள்ளனர். தொடர்ந்து அந்த வாட்சாப் குழுக்களில் சிறுபான்மையினர் மீதான வெறுப்புத் தகவல்களையும், பொய்யான காணொளிகளையும் பரப்பினர்.

உதாரணமாக, ஒரு அட்டைப்பெட்டியில் இருந்து துப்பாக்கிகளை எடுப்பது போன்ற காணொளியுடன் “இந்துக்களைக் கொல்வதற்காக இஸ்லாமியர்கள் தில்லிக்கு ஆயுதங்களைக் கொண்டு வந்துள்ளனர்” என்று வாட்சாப் குழுக்களில் பரப்பினர். உண்மையில் அந்த காணொளி தில்லி காவல் துறையால் சில ஆண்டுகளுக்கு முன் ஒரு ஆயுத கடத்தல் வழக்கு சம்பந்தமாக வெளியிடப்பட்ட காணொளியாகும். இப்படியான பொய் தகவல்களைக் கண்ட வாட்சாப் குழுவினர்கள் பல்வேறு பகுதிகளில் உத்திரப் பிரதேசத்தில் இருந்தும் 24ஆம் தேதி தில்லிக்கு திரண்டு வந்துள்ளனர். அரசு விதிமுறைகளுக்கும் ஊடக கண்காணிப்புகளுக்கும் உட்படாமல் நேரடியாக மக்களுக்கு “பொய்” தகவல்களைக் கொண்டு சேர்ப்பதில் வாட்சாப் சிறப்பாக செயல்படுகிறது. இந்த தனித்துவத்தை முதலில் உணர்ந்த ஆர்எஸ்எஸ் பாஜகவிடம் இன்று மிகப்பெரிய வாட்சாப் குழு பிரச்சாரக் கட்டமைப்பு உள்ளது. எடுத்துக்காட்டாக, 2019 தேர்தலின் போது பீகாரில் மட்டும் 58,000க்கும் மேலான வாட்சாப் குழுக்களை வைத்திருந்தது. தமிழ் நாட்டிலும் தொடர்ந்து இந்த கட்டமைப்பை உருவாக்கி வருகின்றது. அச்சு, தொலைக்காட்சி, பொது கூட்டங்கள் ஒன்றிணைந்து செய்யமுடியாத ஒரு பிரச்சார பணியை வாட்சாப் மட்டுமே செய்து முடிக்கிறது. வாட்சாப் இல்லை என்றால் பாஜக ஆட்சி மறுநாளே கவிழும்! என்று சொன்னால் மிகையாகாது.



குடியுரிமைத் திருத்தச் சட்டத்திற்கு எதிரான போராட்டம். ஜாபிராபாத், தில்லி



குடியுரிமைத் திருத்தச் சட்டத்திற்கு எதிரான போராட்டம். ஜாபிராபாத், தில்லி

பல்வேறு பகுதிகளில் இருந்து வந்த “வெளியாட்களை” கலவரம் நடந்த பகுதியைச் சேர்ந்த சிலர் வாட்சாப் குழுவின் வாயிலாக வழி நடத்தியுள்ளனர். சிறுபான்மையினரின் வீடுகள், கடைகள், வணிக நிறுவனங்கள் அடையாளம் காட்டிக்கொடுத்துள்ளனர். தாக்குதலுக்குத் தேவையான ஆயுதங்கள் அனைத்தும் வைக்கப்பட்டுள்ள இடங்கள் வரை வாட்சாப்பில் பகிர்ந்துள்ளனர். இந்துத்துவ கலவரக்காரர்களின் இந்த நுணுக்கமான செயல்திட்டமுறையை இதற்கு முன்னர் தில்லி ஜவகர்லால் பல்கலைக் கழக மாணவர்கள் தாக்குதலில் காணலாம். “வாய்ஸ் மெசேஜ், புகைப்படங்கள், மேப் லொகேஷன்” என ஏ.பி.வி.பியைச் சேர்ந்த பல்கலைக் கழக மாணவர்கள் “வெளியாட்களை” வாட்சாப்பில் வழி நடத்தியுள்ளனர். வாட்சாப்பைக் கொண்டு மிக துல்லியமாக செயல்படுத்தப்பட்ட வன்முறை என்பதை பின்னர் செய்திகள் வெளியாகின. முன்னணி தாக்குதல் படைகளை வழிநடத்தும் “கமாண்ட் சென்டர்”களாக வாட்சாப் குழுக்கள் புது பரிமாணம் எடுத்துள்ளது.

வீடுகள், வணிக நிறுவனங்கள் முன் எழுதப்பட்டுள்ள பெயர் பலகைகள், வண்டிகளில் இருக்கும் மத குறியீடுகள் என கவனமாக பார்த்து சூறையாடியுள்ளனர். மத குறியீடுகள் இல்லாத வாகனங்களின் லைசென்ஸ் எண்களை ஆர்.டி.ஓ இணையதளத்தில் சொந்தக்காரரின் பெயரைப் பார்த்து இஸ்லாமியர் வாகனங்களை மட்டுமே கொளுத்தியுள்ளனர். இவ்வாறு பல டாக்சி ஓட்டுனர்களின் வாகனங்கள் தீக்கு இறையாகின. இந்தியாவில் தனிநபர் தகவல் பாதுகாப்பு முற்றிலும் கிடையாது. அப்படியான தகவல் பாதுகாப்புச் சட்டத்தின் அவசரத் தேவையை இந்த சம்பவம் உணர்த்துகிறது.

பல தலைமுறைகளாக ஒரே பகுதியில் வாழ்ந்து வரும் வேற்று மதத்தினர் இடையே வெறுப்பையும் வன்முறையையும் புகுத்துவது சாத்தியமில்லை என்பதால் இந்துத்துவ வெறியர்கள் “வெளியாட்களை” இறக்கி கலவரத்தை விதைத்துள்ளனர். அதனையடுத்து, கலவரத்தில் மோசமாக பாதிக்கப்பட்ட பகுதி மக்கள் இன்று மதங்களாக பிளவுபட்டுள்ளனர். இதுவே, இந்துத்துவ அரசியலின் வெற்றி!

●

கட்டுரை குறித்த கருத்துக்களை தெரிவிக்க
may17voice@gmail.com

## ஏழு தமிழர்களையும், தபெதிக தோழர்களையும் உடனடியாக பரோலில் விடுவித்திடு!

### தமிழக அரசை மே பதினேழு இயக்கம் வலியுறுத்தல் – மார்ச் 27, 2020



கொரோனா வைரஸ் பரவலை தொடர்ந்து தமிழ்நாட்டு சிறைகளிலுள்ள விசாரணை கைதிகளை தமிழ்நாட்டு அரசு சொந்த பிணையில் விடுவிப்பதாக சட்டத்துறை அமைச்சர் சி.வி.சண்முகம் அவர்கள் அறிவித்துள்ளார். அதேவேளை, தமிழ்நாட்டு அரசினால் விடுவிக்கப்பட்ட பின்பும் சிறையில் வாடும் 29 ஆண்டுகால சிறைவாசிகளான பேரறிவாளன் உள்ளிட்ட 7 தமிழர்களையும், பொய்யான குற்றச்சாட்டில் சிறையில் வைக்கப்பட்டுள்ள தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் தோழர்கள் 10 பேரையும் நீண்டகால பரோலில் உடனடியாக விடுவிக்க வேண்டுமென மே பதினேழு இயக்கம் வலியுறுத்துகிறது. மேலும், அரசியல் வழக்குகளில் சிறைப்படுத்தப்பட்டவர்களையும், 60 வயதிற்கு மேற்பட்ட சிறைவாசிகளையும், 7 ஆண்டுகளுக்கு மேல் சிறையில் இருக்கும் நீண்டகால சிறைவாசிகளையும், தமிழ்த்தேசிய போராளிகளையும், மனித உரிமை செயற்பாட்டாளர்களையும் நீண்டகால பரோலில் விடுவிக்க வேண்டுமென தமிழ்நாடு அரசிடம் மே பதினேழு இயக்கம் கோரிக்கை விடுக்கிறது.



# கொரோனா தொற்று பேரிடர்


## தமிழ்நாடு அரசுக்கு மே பதினேழு இயக்கம் முன்வைத்த கோரிக்கைகள்

கொரோனா தொற்றுப் பரவல் உடல்நல சிக்கலோடு இணைந்து பொருளாதார சிக்கலையும் மக்கள் மீது திணித்திருக்கிறது. சென்னை, காஞ்சிபுரம், ஈரோடு ஆகிய மூன்று மாவட்டங்களுக்கு மார்ச் 31 வரை ஊரடங்கு உத்தரவை பிறப்பித்திருக்கிறது. இந்த உத்தரவின் பின்னே உள்ள முக்கியத்துவம் சரியானதாக இருக்கும் போதிலும், பொருளாதார நிதி ஒதுக்கீடு குறித்து அறிவிப்புகள் எதுவும் இல்லாமல் இருப்பது ஏமாற்றத்தை அளிப்பதாக இருக்கிறது.

அன்றாட ஊதியப் பணியாளர்களும், முறைசாரா தொழில்களில் இருப்பவர்களும் (informal sectors), துணிக்கடை, நகைக்கடை போன்ற பெரிய கடைகளில் பணிபுரியும் ஒப்பந்தத் தொழிலாளர்களும், கடைநிலை ஊழியர்களும், இதர தினசரி உழைப்பாளர்களும் என பெரும்பான்மை மக்கள் பொருளாதார ரீதியாக மிகப் பெரும் இன்னலை சந்திக்க இருக்கிறார்கள். தகவல் தொழில்நுட்ப ஊழியர்களைப் போன்று வீட்டுக்குள் அமர்ந்து வேலையை முடித்து ஊதியம் பெறும் நிலை பெரும்பான்மை மக்களுக்கு கிடையாது. நோய்த் தாக்குதலோடு இணைந்து வந்திருக்கிற பொருளாதார நெருக்கடி பெரும்பான்மை உழைக்கும் மக்களை பெரும் சிக்கலுக்குள் தள்ளிட இருக்கிறது. அவசர கால அடிப்படையில் அதனை சரிசெய்து மக்களை பாதுகாக்க வேண்டிய கடமை அரசுக்கு இருக்கிறது.

பின்வரும் கோரிக்கைகளை மே பதினேழு இயக்கம் தமிழ்நாடு அரசுக்கு மே பதினேழு இயக்கம் முன்வைக்கிறது.

- முறைசாரா பணியாளர்களுக்கான நிதிச்சுமையை அரசு ஏற்க வேண்டும். ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு மாதத்தின் அத்தியாவசியத் தேவைக்கு அவசியமான நிதியினை அரசு உடனடியாக அளித்திட வேண்டும்.
- பெரிய கடைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு, விடுமுறையாக இருந்தாலும் ஊதியம் அளிக்கப்பட வேண்டியதை உறுதி செய்திட வேண்டும்.
- அரசு மருத்துவமனைகளின் முக்கியத்துவம் எத்தகையது என்பதை கொரோனா தொற்று நம் அனைவருக்கும் உணர்த்தியிருக்கிறது. கொரோனா தொற்றுக்கான பரிசோதனை (Mass testing) பரந்த அளவில் நடத்தப்பட வேண்டும். பரிசோதனையும், சிகிச்சையும் மக்களுக்கு இலவசமாக மட்டுமே நடத்தப்பட வேண்டும். எக்காரணம் கொண்டும் மருத்துவ சோதனைகளுக்கு மற்றும் சிகிச்சைகளுக்கு மக்களிடம் பணம் பெறுதல் கூடாது.
- கடன்கள், EMI போன்றவற்றிலிருந்து அனைத்துநிறுவனங்களும் மக்களுக்கு தற்காலிக விலக்கு அளித்திட அரசு உத்தரவிட வேண்டும்.




இந்திய அரசிற்கு மே பதினேழு இயக்கம் கோரிக்கை





இந்திய அரசிற்கு மே பதினேழு இயக்கம் கோரிக்கை




தமிழ்நாடு அரசிற்கு மே பதினேழு இயக்கம் கோரிக்கை




தமிழ்நாடு அரசிற்கு மே பதினேழு இயக்கம் கோரிக்கை




தமிழ்நாடு அரசிற்கு மே பதினேழு இயக்கம் கோரிக்கை




தமிழ்நாடு அரசிற்கு மே பதினேழு இயக்கம் கோரிக்கை

- மருத்துவப் பணியாளர்களுக்கான பாதுகாப்பு உபகரணங்கள் குறைவாகவே இருப்பதாக பல்வேறு இடங்களிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. உடனடியாக மருத்துவப் பணியாளர்களின் பாதுகாப்பிற்கென தனி நிதியினை ஒதுக்கிட வேண்டும். மருத்துவப் பணியாளர்கள் தங்கள் பணியை சிறப்பாக மேற்கொள்வதை உறுதி செய்திடும் வகையில் அவர்களுக்கு சுழற்சி அடிப்படையில் போதிய கால அளவிலான ஓய்வு வழங்கப்பட வேண்டும்.
- தொற்று பாதிப்பின் எண்ணிக்கை அதிகரிக்கும் ஆபத்து இருப்பதால் மக்களின் உயிரைப் பாதுகாப்பதற்கான வெண்டிலேட்டர்களின் தேவை மிக அதிகமாக இருக்கிறது. இப்போது வரை கொரோனா தொற்று நிற்கும் காலக்கெடு என்பது தெரியாததால், அதிக அளவிலான வெண்டிலேட்டர்களை அவசரகாலத் தேவை அடிப்படையில் உற்பத்தி செய்திட உத்தரவிட வேண்டும்.
- ரேசன் பொருட்கள் அனைத்தும் நேரடியாக வீட்டிற்கே சென்று வழங்கிடும் வகையில் ஏற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டும்.* துப்புரவுப் பணிகளை மேற்கொள்ளும் தொழிலாளர்களின் பாதுகாப்பு மிகப் பெரும் கேள்விக்குறியாக உள்ளது. அவர்களின் சுகாதாரத்தை உறுதி செய்திடும் வகையில் அதி உயர் பாதுகாப்பு உபகரணங்களை வழங்கிட வேண்டும். இந்த உபகரணங்கள் மற்றும் கருவிகள் இந்த இடர் காலத்தோடு மட்டுமே நில்லாமல் நிரந்தரமாக அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். துப்புரவுப் பணியாளர்களின் குடும்பத்தின் அத்தியாவசியப் பொருட்கள் அனைத்தையும் அரசே வழங்கிட வேண்டும்.
- பல நாடுகளில் மேற்கொள்ளப்பட்டதைப் போல, ஒவ்வொரு பகுதியிலும் பொது சமையலறைகள் உருவாக்கப்பட்டு வீடற்ற மக்களுக்கும், வறுமையில் இருக்கும் மக்களுக்கும் உணவு நேரடியாக வழங்கிட வேண்டும்.
- வாடகை வீடுகளில் குடியிருப்போருக்கான வாடகைப் பணத்தினை தற்காலிகமாக தளர்த்திடும் வகையில் அரசு உத்தரவிட வேண்டும்
- ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தில் மக்களுக்கு அளிக்கப்பட வேண்டிய பணம் பெருமளவில் வழங்கப்படாமல் இருக்கிறது. அதனை உடனடியாக வழங்குவதுடன் மீதமிருக்கும் நாட்களுக்கான பணத்தையும் முன்பணமாக வழங்கிட ஏற்பாடு செய்ய வேண்டும்.
- தமிழ்நாட்டிற்கு மத்திய அரசு அளிக்க வேண்டிய GST இழப்பீடு தொகையான 7214 கோடி ரூபாயை இன்னும் மத்திய அரசு வழங்காமல் இருக்கிறது. இந்த இக்கட்டான நேரத்தில் அதனை உடனடியாக வழங்கிட வேண்டும். மேலும் அத்தியவாசியப் பொருட்களின் மீதான GST வரி தற்காலிகமாக நீக்கப்பட்டு பொருட்கள் வரியின்றி விற்பனை செய்யப்பட வேண்டும்.
- கேரள அரசு கொரோனா பேரிடர் நிதியாக 20000 கோடியினை ஒதுக்கியுள்ளது. ஆனால் தமிழக அரசிடமிருந்து நிதி ஒதுக்கீடு குறித்த அறிவிப்புகள் எதுவும் இதுவரை வராமல் இருப்பது ஏமாற்றத்தையே அளிக்கிறது. “கவனமாக இருங்கள்” என்கிற வாய்மொழி எச்சரிக்கையும், தடுப்பு நடவடிக்கைகளும் மட்டுமே மக்களை இந்த பேரிடரிலிருந்து மீட்க உதவாது. உடனடியாக பேரிடர் நிதி அறிவிப்பினை அரசு செய்ய வேண்டும்.

இந்த முக்கியமான கால சூழலில் தொற்றைத் தடுப்பதற்கான அறிவிப்புகள் மற்றும் அறிவுரையோடு மட்டுமே நில்லாமல், அரசின் கடமையை உணர்ந்து பேரிடர் நிதி ஒதுக்கீடு உடனடியாக ஒதுக்கப்பட வேண்டும் என்றும் மே பதினேழு இயக்கம் தமிழ்நாடு அரசினையும், இந்திய அரசினையும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது. ●

**மே17 இயக்கக் குரல்**
**தமிழின புவிசார் அரசியல் செய்தி இதழ்**
**தமிழ்நாட்டுக்கான ஆண்டு சந்தா ரூ.400**
**வெளிமாநிலத்திற்கு ரூ.600**
**மாதாந்திர இதழினைப் பெற தொடர்பு கொள்ளவும்: 9884072010**
மின்னஞ்சல்: may17voice@gmail.com



# CAA சட்டத்துக்கு எதிரான
# போராட்ட களத்தில் மே பதினேழு இயக்கம்



01

திருச்சி தென்னூர் உழவர் சந்தை திடலில், CAA, NRC, NPR சட்டங்களை எதிர்த்து, திருச்சி வரகனேரி இளைஞர்கள் பொதுநலச் சங்கம் அல் முஹம்மதியா அறக்கட்டளை மற்றும் இறையருள் அறக்கட்டளை சார்பாக 1-03-20 அன்று மாலை நடைபெற்றது. தமிழக வாழ்வுரிமை கட்சி தலைவர் வேல்முருகன் உள்ளிட்ட தலைவர்கள் பங்கேற்ற மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டத்தில், மே பதினேழு இயக்கம் சார்பாக தோழர் திருமுருகன் காந்தி பங்கேற்று உரையாற்றினார்



02

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி அருகிலுள்ள ஓர் கிராமத்தில், குடியுரிமை திருத்த சட்டத்திற்கு எதிராக 01-03-20 அன்று நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் மே பதினேழு இயக்க ஒருங்கிணைப்பாளர் தோழர் பிரவீன்குமார் கலந்துகொண்டு உரையாற்றினார்.



03

திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டையில், குடியுரிமை திருத்த சட்டத்திற்கு எதிராக சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றக் கோரியும், தமிழகத்தில் CAA, NRC, NPR கணக்கெடுப்பை நடத்தக் கூடாது என தமிழக அரசை வலியுறுத்தி முத்துப்பேட்டை ஷாஹீன்பாக் என்னும் தொடர் முழக்க காத்திருப்பு போராட்டத்தின் 16-வது நாளான 01-03-20 அன்று மே பதினேழு இயக்கம் பங்கெடுத்தது. ஒருங்கிணைப்பாளர் தோழர் பிரவீன் குமார் கலந்துகொண்டு போராடிவரும் மக்களிடையே உரையாற்றினார்.



04

சேலம் கோட்டை பகுதியில், CAA-NRC-NPR சட்டங்களை எதிர்த்து சேலம் ஷஹீன்பாக் என்னும் தொடர் போராட்டத்தின் 14-ம் நாளான 01-03-20 அன்று மே பதினேழு இயக்கம் பங்கெடுத்தது. தோழர் திருமுருகன் காந்தி கலந்துகொண்டு போராடிவரும் மக்களிடையே உரையாற்றினார்.



05

புதுக்கோட்டை அம்மாபட்டினத்தில், CAA-NRC-NPR சட்டங்களை எதிர்த்து அம்மாபட்டினம் ஷஹீன்பாக் என்னும் தொடர் போராட்டத்தின் 14-ம் நாளான 01-03-20 அன்று மே பதினேழு இயக்கம் பங்கெடுத்தது. இதில், ஒருங்கிணைப்பாளர் தோழர் பிரவீன் குமார் கலந்துகொண்டு போராடிவரும் மக்களிடையே உரையாற்றினார்



06

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அனைத்து கட்சிகள் மற்றும் மதவாத எதிர்ப்பு கூட்டமைப்பு சார்பாக மத்திய அரசின் புதிய குடியுரிமை திருத்த சட்டத்தை திரும்பப் பெறக் கோரி மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம் ஆலங்குடி சந்தைப்பேட்டை காந்தி பூங்கா திடலில் 02-03-20 திங்கள் அன்று மாலை நடைபெற்றது. இதில் மே பதினேழு இயக்கம் சார்பாக ஒருங்கிணைப்பாளர் தோழர் திருமுருகன் காந்தி கலந்துகொண்டு கண்டன உரையாற்றினார்.



07

திருப்பூரில் குடியுரிமை திருத்தச்சட்டத்தை எதிர்த்து பல்லாயிரக்கானக்கான பொதுமக்கள் தலைமையில் நடைபெற்றுவரும் தொடர் போராட்டத்தில் 23.02.2020 அன்று தோழர் திருமுருகன் காந்தி கலந்து கொண்டு உரையாற்றினார்.



08

புதுக்கோட்டையில், உரிமை மீட்பு கூட்டமைப்பு சார்பாக CAA-NRC-NPR சட்டங்களை எதிர்த்து புதுக்கோட்டை ஷஹீன்பாக் என்னும் தொடர் தர்ணா போராட்டத்தில் 02-03-20 அன்று மே பதினேழு இயக்கம் பங்கெடுத்தது. ஒருங்கிணைப்பாளர் தோழர் திருமுருகன் காந்தி கலந்துகொண்டு போராடிவரும் மக்களிடையே உரையாற்றினார்.



09

கடலூர் மாவட்டம் லால்பேட்டையில், CAA, NRC, NPR போன்ற மக்கள் விரோத சட்டங்களை எதிர்த்து நடைபெற்று வரும் தொடர் போராட்டத்தின் 12வது நாளில் 03-03-20 அன்று மே பதினேழு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் தோழர் திருமுருகன் காந்தி கலந்துகொண்டு, போராடி வரும் மக்களிடையே உரையாற்றினார்.



10

சென்னை பல்லாவரத்தில், CAA-NRC-NPR சட்டங்களை எதிர்த்து பல்லாவரம் ஷாஹீன்பாக் என்னும் தொடர் போராட்டத்தில் 5ம் நாளான 04-03-20 அன்று மே பதினேழு இயக்கம் பங்கெடுத்தது. ஒருங்கிணைப்பாளர் தோழர் பிரவீன் குமார் கலந்துகொண்டு போராடிவரும் மக்களிடையே உரையாற்றினார்



11

புதுச்சேரியில், CAA, NRC, NPR போன்ற சட்டங்களை கொண்டு மதத்தின் பெயரால் மனிதர்களை பிரிப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து, இந்திய அரசியல் சட்டப் பாதுகாப்பிற்கான பொதுமக்கள் கூடுகை 05-03-20 வியாழன் மாலை புதுவை சாரம் ஜீவா சிலை அருகில் (அவ்வைத்திடல்) நடைபெற்றது. மனித உரிமைகள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இயக்கம் சார்பாக ஒருங்கிணைப்படுகின்ற இந்த மாபெரும் கூடுகையில், மே பதினேழு இயக்கம் சார்பாக ஒருங்கிணைப்பாளர் தோழர் திருமுருகன் காந்தி கலந்துகொண்டு உரையாற்றினார்.



12

இராமநாதபுரம் பாம்பூரணி திடலில் இராமநாதபுரம் ஷாஹீன்பாக் என்னும் தொடர் போராட்டத்தில் 07-03-20 மாலை 6 மணியளவிலும், இராமநாதபுரம் மாவட்டம் பெரியபட்டினத்தில், பெரியப்பட்டினம் ஷாஹீன்பாக் என்னும் தொடர் போராட்டத்தில் மாலை 8 மணியளவிலும், மே பதினேழு இயக்க ஒருங்கிணைப்பாளர் தோழர் திருமுருகன் காந்தி உரையாற்றினார்.



13

மார்ச் 8, 2020 அன்று தேவிப்பட்டினம் முஸ்லிம் மகளிர் குழு நடத்திய CAA, NPR, NRC எதிர்ப்பு தொடர் தர்ணா போராட்டத்தில் மே பதினேழு இயக்க ஒருங்கிணைப்பாளர் தோழர் திருமுருகன்காந்தி உரையாற்றினார்.



14

மார்ச் 8, 2020 அன்று CAA, NRC, NPR க்கு எதிரான அம்மாபட்டினம் சாஹின்பாக் தொடர் போராட்டத்தில் மே பதினேழு இயக்க ஒருங்கிணைப்பாளர் தோழர் திருமுருகன்காந்தி உரையாற்றினார்.




15

மார்ச் 8, 2020 அன்று இராமநாதபுரம் மாவட்டம் தொண்டி சாஹின்பாக்கில் குடிமையுரிமைத் திருத்தச் சட்டம் மற்றும் NPR, NRC க்கு எதிரான தொடர் போராட்டத்தில் மே பதினேழு இயக்க ஒருங்கிணைப்பாளர் தோழர் திருமுருகன் காந்தி உரையாற்றினார்.




16

மார்ச் 8, 2020 அன்று முத்துப்பேட்டை சாஹின்பாக்கில் 23 வது நாளாக தொடரும் குடியுரிமைத் திருத்தச் சட்டத்திற்கு எதிரான போராட்டத்தில் தோழர் திருமுருகன் காந்தி உரையாற்றினார்



17

திருவாரூர் மாவட்டம் நன்னிலத்தில், குடியுரிமை திருத்த சட்டத்தை திரும்பப் பெற வலியுறுத்தி ஐக்கிய ஜமாஅத் கூட்டமைப்பு சார்பாக, 08-03-20 ஞாயிறன்று பேரணி மற்றும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் மே பதினேழு இயக்க ஒருங்கிணைப்பாளர்தோழர் பிரவீன் குமார் கலந்துகொண்டு உரையாற்றினார்.




18

திருவாரூர் மாவட்டம் அடியக்கமங்கலத்தில் மார்ச் 9, 2020 அன்று மாலை 6 மணியளவிலும், திருவாரூர் மாவட்டம் கூத்தாநல்லூரில் மாலை 7:30 மணியளவிலும், குடியுரிமை சட்டங்களுக்கு எதிராக நடைபெற்ற போராட்டத்தில் மே பதினேழு இயக்க ஒருங்கிணைப்பாளர் தோழர் திருமுருகன் காந்தி உரையாற்றினார்.




19

மார்ச் 10, 2020 அன்று தேனி மாவட்டம் பெரியகுளம் ஷாயின்பாஃக் குடியுரிமை திருத்த சட்டம் சிகிகி, தேசிய குடிமக்கள் பதிவேட்டை NRCயை ரத்து செய்யக்கோரி நடைபெறும் தொடர் போராட்டத்தில் தோழர் திருமுருகன் காந்தி அவர்கள் உரையாற்றினார்.



20

மார்ச் 10, 2020 தேனி மாவட்டம் கம்பம் ஷாயின்பாஃக் குடியுரிமை திருத்த சட்டம் CAA, தேசிய குடிமக்கள் பதிவேட்டை NRCயை ரத்து செய்யக்கோரி தொடர் போராட்டத்தில் தோழர் திருமுருகன் காந்தி அவர்களின் உரையாற்றினார்.




21

இந்திய குடியுரிமை திருத்தச்சட்டம் NPR, NRC, CAA ஆகியவற்றை கண்டித்து மதுரை சொக்கலிங்கபுரத்தில் நடைபெற்ற மாபெரும் கண்டன விளக்கப் பொதுக்கூட்டத்தில் மே பதினேழு இயக்க ஒருங்கிணைப்பாளர் தோழர் திருமுருகன் காந்தி உரையாற்றினார்.




22

இராமநாதபுரம் மாவட்டம் மாறியூரில், 12-03-2020 அன்று மாலை, குடியுரிமை திருத்தச்சட்டத்தை எதிர்த்து நடைபெற்ற கண்டன பொதுக்கூட்டத்தில், மே பதினேழு இயக்கம் சார்பாக ஒருங்கிணைப்பாளர் தோழர் பிரவீன் குமார் கலந்துகொண்டு கண்டன உரையாற்றினார்.



23

இராமநாதபுரம் மாவட்டம் புதுமடத்தில், குடியுரிமை திருத்த சட்டத்திற்கு எதிராக புதுமடம் இளைஞர் முன்னேற்ற சங்கம் சார்பாக 15-03-2020 அன்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் மே பதினேழு இயக்கம் சார்பாக ஒருங்கிணைப்பாளர் தோழர் பிரவீன் குமார் கலந்து கொண்டு உரையாற்றினார்.

**மே பதினேழு இயக்கத்தோடு இணைந்து பணியாற்ற வாருங்கள்**

**நாம் ஒன்றிணைந்தால் வரலாற்றைப் புரட்டிப் போடலாம்!**

+91 98840 72010

contact.may17@gmail.com | www.may17iyakkam.com

facebook.com/mayseventeenmovement





# போரை முதலீடாக்கும் பொருளாதாரம்

இந்திய ஒன்றியத்தின் குடிமகனின் ஒவ்வொரு அசைவுகளையும் "தேசப்பற்றை" வைத்து மதிப்பீடு செய்யும் சாவர்க்கர் வழித்தோன்றலான ஆர்.எஸ்.எஸ். பாஜக அரசின் தேசப்பற்றை அவர்கள் கொண்டாடும் இராணுவத் துறையின் நிதி மற்றும் இதர செயல்பாடுகளை ஆராய்வதின் மூலம் அறிய முடியும்.

2020-21 நிதி அறிக்கையில் ரூ.4,71,378 கோடி பாதுகாப்பு துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. அதாவது, 2020-21 நிதியாண்டின் 15.5% நிதியானது பாதுகாப்புத் துறைக்கு வழங்கப்பட்டுள்ளது. இது, இந்திய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.1% ஆகும். ஆனால், மக்களுக்குக் கல்வி வழங்கும் மனிதவள துறை 3.33% நிதி பெறுகிறது. ஆப்பிரிக்க நாடுகளுடன் போட்டி போடும் சுகாதாரக் குறியீடுகளை வைத்துள்ள ஒன்றியத்தின் சுகாதாரத் துறை 2.21% நிதியைப் பெறுகிறது. இந்தியாவின் பெரும்பான்மை (சுமார் 43%) வேலைவாய்ப்புகளை வழங்கும் விவசாய துறை 4.69% நிதியைப் பெறுகிறது.

2020-21 நிதியாண்டின் மொத்த அறிவிக்கப்பட்ட செலவு: ரூ.30,42,230 கோடி


| ஒன்றிய அரசு செலவுகள் | 2020-21 நிதி ஒதுக்கீடு (ரூ. கோடி) | மொத்த நிதியில் % |
|---|---|---|
| மனிதவள மேம்பாடு | 99,312 | 3.33 |
| சுகாதாரம், குடும்ப நலன் | 67,112 | 2.21 |
| விவசாயம், விவசாயி நலன் | 142,762 | 4.69 |
| பாதுகாப்பு | 471,378 | 15.49 |

கல்வி, சுகாதாரம், உணவு, வேலைவாய்ப்பு என்று மக்களின் அடிப்படைகளைப் பூர்த்தி செய்யும் துறைகள் மொத்தம் சேர்ந்து 10.23% நிதி ஒதுக்கீட்டைப் பெறுகின்றன. "பாரத தேசம்" மீது எதிரிகளின் அச்சுறுத்தல் இருப்பதாக தொடர்ந்து கட்டியெழுப்பப்படும் பிம்பத்தின் காரணமாக இராணுவம் 15.5% நிதியைப் பெறுகிறது. இதை மேலும் உயர்த்தவேண்டும் என்று ஆங்கிலேயர்களுக்கு மன்னிப்பு கடிதம் எழுதியே அரசியல் சாதனை படைத்த வீர் சாவர்க்கரின் வாரிசுகள் கூச்சலிடுகின்றனர். இவர்கள், ஒருபோதும் மக்களுக்கு அறிவியல் கல்வி வழங்கிட, பசியாற உணவு வழங்கிட, நோய்களைக் குணமாக்கும் மருத்துவமனைகளை வழங்கிட என்று கூச்சலிட்டதாக வரலாறு இல்லை. இனிமேலும், இருக்கப்போவதில்லை!

எந்நேரமும், "யார் இந்தியன்" என்று சோதனை நடத்த இராணுவ வீரனுடன் ஒப்பிட்டு பேசும் பாஜகவினர் அந்த இராணுவ வீரர்களுக்காவது உண்மையாக இருந்தார்களா? இராணுவத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்த நிதியில் 30.2% சம்பளத்திற்கும், 28.4% ஓய்வூதியமாகவும் செலவிடப்படுகிறது. இந்த இராணுவ ஓய்வூதிய செலவைக் குறைக்கவேண்டும் என்று அரசு பல்வேறு நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. ஆண்டிற்கு 60,000 வீரர்கள் ஓய்வு பெறும் நிலையில் ஓய்வூதியத்திற்கான "மாற்று ஏற்பாட்டை" ஆலோசித்து வருகின்றனர், பாஜக தேசப்பற்றாளர்கள்!

## இராணுவத் தளவாட இறக்குமதி

இந்திய மக்களின் அடிப்படைத் தேவைகளைப் புறந்தள்ளிவிட்டு பெரும்பான்மை நிதி ஒதுக்கீட்டை விழுங்கும் பாதுகாப்புத் துறையின் பணம் எங்கு செல்கிறது என்று கவனித்தால், இந்துத்துவவாதிகளின் தேசப்பற்று பல்லை இளிக்கிறது. 2015-19 காலத்தில் இராணுவத் தளவாட இறக்குமதியில் உலகளவில் இந்தியா இரண்டாம் இடத்தைப் (சவூதி முதலிடம்) பிடித்து வருகிறது. அதற்கு முன்னரும் இந்தியா அதே இடத்தைத் தான் பிடித்ததாக உலகின் இராணுவத் தளவாட வணிகத்தை ஆராய்ந்து வரும் SIPRI (Stockholm International Peace Research Institute) தெரிவித்துள்ளது. அதாவது, ஆயுதம் வாங்குகிறோம் என்று இந்தியர்களின் வரிப்பணத்தை அந்நிய கார்பொரேட்களுக்குக் கொட்டிக் கொடுக்கின்றனர்.




ஆயுத வணிகம் என்பது பல பில்லியன் அமெரிக்க டாலர்களில் புரளும் துறை. உலகின் பெரும் முதலீடுகளும் ஊழல்களும் இந்த துறையில் தான் நடைபெறுகின்றன. ஆகையால், பாஜகவின் சமீபத்திய ரபேல் போர் விமான ஊழல் போன்று பல ஊழல்கள் சாதாரணமாக நடைபெறுவது வழக்கம். இந்தியாவின் இந்த இராணுவத் தளவாடச் சந்தையை அமெரிக்காவும், இஸ்ரேலும் பல பத்தாண்டுகளாக குறி வைத்திருந்தன. அமெரிக்காவின் பெரும்பான்மை இராணுவ ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப உருவாக்கம் இஸ்ரேலில் தான் நடைபெறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. இரஷ்யாவிடம் இருந்த இந்தியாவின் சந்தை தற்போது மிக வேகமாக அமெரிக்கா வசம் கைமாறி வருகிறது. இதுதான், மோடியின்அமெரிக்க நட்பு நெருக்கத்தின் இரகசியம்.

அந்நிய வியாபாரிகளின் ஆயுத விற்பனை இந்தியாவில் வளர்ந்து வரும் அதே நேரத்தில் இந்திய உற்பத்தியாளர்களின், பெரும்பான்மையாக பொதுத்துறை நிறுவனங்கள், பங்கு குறைந்து வருகிறது. HAL, NAL, DRDO போன்ற பல பொதுத்துறை நிறுவனங்களின் உற்பத்திகளை முறைப்படி குறைத்து வரும் இந்திய ஒன்றிய அரசு, இந்திய தனியார் முதலாளிகளுக்கு உரிமங்களை வழங்கி வருகிறது. பற்பசை, குளியல் சோப்பு செய்வதற்கான தொழில்நுட்ப அறிவைக் கூட வெளிநாடுகளில் இருந்து பெற்று செய்யும் மார்வாரி பனியா தரகர்களுக்கு அதிநவீன போர் விமானங்கள், நீர் மூழ்கி கப்பல்கள் செய்யும் வர்த்தக உரிமங்கள் வலிய வழங்கப்படுகிறது.உற்பத்தி உரிமங்களைப் பெற்ற மார்வாரி பனியா தரகர்களுடன் இராணுவத் தளவாட உற்பத்தி தொழில்நுட்ப அறிவைப் பகிர எந்த நாடும் முன்வரவில்லை. இவர்களுக்கான தொழில்நுட்ப அறிவுகளை பெற்று தரும் பணியில் பனியா சேவகர் மோடி அவர்கள் பல்வேறு நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டார்.

## பறிபோகும் இறையாண்மை

இந்தியாவின் வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு "மேக்-இன்-இந்தியா" திட்டத்தை பிரதமர் அறிவித்தார். இந்த திட்டத்தின் கீழ் இராணுவத் தளவாட உற்பத்தியை இந்தியாவில் செய்வோம் என்று உலக நாடுகளிடம் இராணுவத் ஒப்பந்தங்களை கையெழுத்திட்டு வந்தார். இராணுவத் தளவாட உற்பத்தி மண்டலங்களை இந்தியா முழுவதும் அமைத்து உற்பத்தி, வேலைவாய்ப்பு, பொருளாதாரம் என அனைத்து வளர்ச்சிகளையும் ஏற்படுத்துவேன் என்று முழங்கினார். இதை, ஆண்டு தோறும் "இராணுவக் கண்காட்சி" (defence expo), (2018ல் சென்னையில் நடைபெற்றது) நடத்தி பாஜக அரசு விளம்பரம் செய்து வருகிறது.

இராணுவ ஆராய்ச்சி கண்டுபிடிப்புகளுக்கு பல பில்லியன் டாலர்களை செலவிடும் பணக்கார நாடுகள் தங்கள் தொழில்நுட்ப அறிவை இந்தியாவுடன் பகிர்வதற்கு தயாராக இல்லை. இந்த இராணுவ இரகசிய தொழில்நுட்பத்தைப் பகிர்வதற்கு அந்நாடுகள் பல்வேறு கோரிக்கைகளை வைத்தன. இவற்றில் சில இந்திய இறையாண்மைக்கே பாதகமானவை. இதன் காரணமாக, இந்தியாவில் இராணுவ உற்பத்தி திட்டங்கள் நெடுங்காலமாக தலைதூக்காமல் பிரதமர் மோடியின் "மேக்-இன்-இந்தியா" கனவு பட்டமரமாய் நின்றது.

இறுதியாக, எப்பாடுபட்டாவது இந்தியாவிற்கு அந்நிய இராணுவ உற்பத்தி நிறுவனங்களைக் கொண்டு வர வேண்டுமென்று "வலிமையான தலைவர்" பாரத பிரதமர் தீர்மானித்தார். இவர், ஆங்கிலேயருடன் கைகோர்த்து சுபாஷ் சந்திர போஸ் கட்டிய இந்திய இராணுவத்தை வீழ்த்திய வீர் சாவர்க்கரின் வரலாற்றை உடையவராயிற்றே! ஆகையால், இந்திய இறையாண்மையை அமெரிக்காவிற்கு தாரைவார்க்கும் பல்வேறு ஒப்பந்தங்களைச் சத்தமில்லாமல் கையெழுத்திட்டார். இது குறித்து எந்த எதிர்க்கட்சியும் கவலைப்படவில்லை என்பது கூடுதல் வேதனை. 30.8.2016 அன்று கையெழுத்தான LEMOA (Logistics Exchange Memorandum of Agreement) ஒப்பந்தத்தின்படி அமெரிக்க இராணுவ விமானங்கள், கப்பல்கள் எப்போது வேண்டுமானாலும் இந்தியாவிற்குள் வந்து நிறுத்திக்கொள்ளலாம்.

6.11.2018 அன்று கையெழுத்தான COMCASA (Communications Compatibility and Security Agreement) ஒப்பந்தத்தின் வாயிலாக இந்திய இராணுவப் பாதுகாப்புத் துறையின் தொலைத்தொடர்பு வலைப்பின்னலில்

(communication network) அமெரிக்க இராணுவத்திற்கு நேரடியான இணைப்பு வழங்கப்படும். விரைவில், BECA (Basic Exchange and Cooperation Agreement) எனப்படும் ஒப்பந்தம் கையெழுத்தாகவுள்ளது. இந்த ஒப்பந்தத்தின்படி இந்தியாவின் புவியியல் (Geospatial) சார்ந்த தகவல்கள் அனைத்தும் அமெரிக்காவுடன் பகிரப்படும்.

இப்படி இந்தியாவின் பாதுகாப்பு அனைத்தையும் உலக ஏகாதிபத்திய அமெரிக்காவின் காலடியில் வைத்து தான் "உலகமே மதிக்கும்" பிரதமர் மோடி அந்நிய இராணுவத் தொழில்நுட்பங்களை இந்தியாவிற்கு கொண்டு செல்ல அமெரிக்கா அனுமதியளித்தது. இதில், கூடுதலாக இராணுவத் தளவாட உற்பத்தி நிறுவனங்கள் தங்களுக்கு பெரும்பான்மை பங்கும் நிர்வாகக் கட்டுப்பாடும் வேண்டும் என்று கட்டளையிட்டனர். உடனே, அதையும் செய்து முடித்தார் மோடி. இன்று, அந்நிய நிறுவனங்கள் 49% வரை இந்திய இராணுவ உற்பத்தி நிறுவனத்தில் நேரடியாக முதலீடு செய்யலாம். மேலும், அரசின் ஒப்புதல் பெற்று 100% அந்நிய முதலீடு செய்யலாம். பெப்சி, கொக்க கோலா நிலைக்கு இராணுவத் தளவாட உற்பத்தி துறையைப் திறந்துவிட்டுள்ளார் தேசம் காக்கும் பாரத பிரதமர் மோடி.

ஒரு நாட்டின் இறையாண்மையையும் பாதுகாப்பையும் அந்நிய நாட்டின் நிறுவனங்களிடம் தாரைவார்த்துள்ள "தேச விரோதிகள்" தான் மற்றவர்களைப் பார்த்து "நீ தேச பக்தனா?" என்று கொந்தளிக்கின்றனர். உலக இராணுவத் தொழில்நுட்பம் மற்றும் உற்பத்தித் துறைகளில் முன்னோடிகளாக இருக்கும் உலகின் கட்டப்பஞ்சாயத்தை நடத்தும் அமெரிக்காவும் பேரினவாதியான இஸ்ரேலும் இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் நெருங்கிய நண்பர்கள். இந்த இரு நாடுகளின் பொருளாதாரமே இராணுவத் தளவாடங்கள் விற்பனையை அடிப்படையாக கொண்டவை. போரினால் உயிரிழந்து உடைமைகள் இழந்து இருப்பவர்கள் மீது இராணுவ ஒப்பந்தங்களைக் கையெழுத்திடும் பிணந்திண்ணிகள். உலகில் நடக்கும் தொடர் போர்கள் அனைத்தும் இவர்களுக்கு வர்த்தகத்திற்கான வாய்ப்பு. இராணுவத் தளவாட உற்பத்தியை அடிப்படையாக கொண்டு இந்திய பொருளாதாரத்தைக் கட்டியமைத்தால் நாளை இந்தியாவும் "உலகில் போர் நல்லது" என்ற வெளியுறவுக் கொள்கையை மேற்கொள்ளும். இந்த பாழுங்கிணற்றில் தான் இந்திய ஒன்றியத்தின் எதிர்காலத்தைக் கொண்டுபோய் தள்ளியுள்ளது இந்துத்துவ பார்ப்பன பனியா அரசு.

உலக ஏகாதிபத்தியப் பேரினவாதிகளுடன் இந்தியப் பார்ப்பன அதிகார வர்க்கம் கைகோர்க்கும் அதேவேளையில் அந்நிய இராணுவத் தளவாட உற்பத்தி முதலீட்டு நிறுவனங்களுடன் பங்குதாரராக தரகு வியாபாரிகளான பனியாக்கள் கைகோர்ப்பார்கள். ஆக மொத்தத்தில், இவர்களைப் பொறுத்தவரை "தேச பக்தி" என்பது அதிகாரத்தையும் வணிகத்தையும் கைப்பற்றுவதற்கான முதலீடு. அவ்வளவு தான்!

●

கட்டுரை குறித்த கருத்துக்களை தெரிவிக்க
may17voice@gmail.com

# கொரோனா விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழு

**பத்திரிகைச் செய்தி – 28 மார்ச், 2020**

தமிழகத்தில் இயங்கும் சில இயக்கங்களின், கட்சிகளின் தோழர்கள் (மார்ச் 28, 2020) கூட்டாகக் கலந்தாலோசித்து "கொரோனா விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழு" என்கிற ஓர் அமைப்பைத் துவங்கப்பட்டிருக்கிறது. முன்னெப்போதும் கண்டிராத ஒரு மாபெரும் நுண்ணுயிர்ப் பேரிடரை இந்த உலகமும், இந்தியத் தேசமும், நமது தமிழ் நாடும் எதிர்கொண்டு நிற்கின்றன. பரந்துபட்ட அளவில் இயங்கி, மக்கள் உயிர்களை பாதுகாப்பதற்காக மத்திய, மாநில அரசுகள் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துவருகின்றன.

சிற்சில குறைகளும், பிரச்சினைகளும் காணப்பட்டாலும், மத்திய, மாநில அரசுகளின் உயிர்காப்பு நடவடிக்கைகளுக்கு அனைத்து தரப்பினரும் முழு ஒத்துழைப்பு வழங்குவது மிகவும் முக்கியமானது. அதேபோல, மத்திய, மாநில அரசுகள் அறிவித்திருக்கும் சிறப்பு ஏற்பாடுகளின் பலன்களும், நலத்திட்ட உதவிகளும் அனைத்து தரப்பு மக்களுக்குச் சென்றடைவதையும் உறுதி செய்தாக வேண்டும். போதிய கால அவகாசமின்மையோடு அறிவிக்கப்பட்ட மத்திய, மாநில அரசுகளின் அவசர ஊரடங்கு நடவடிக்கையால், ஏராளமான ஏழை எளிய மக்கள் தத்தம் ஊர்களுக்கு போய்ச் சேர முடியாமல் வழிகளில் தவிப்பதையும், வேலையின்றி, வருமானமின்றி, பசி பட்டினியால் துன்புறுவதையும் பார்க்கிறோம். மத்திய, மாநில அரசுகளுக்கும், பல்வேறுப் பிரச்சினைகளோடு கிடந்துழலும் மக்களுக்கும் இடையேயான ஒரு தொடர்புப் பாலமாக இந்த "கொரோனா விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழு" இயங்கும்.

பொதுமக்கள் இந்தக் குழுவினரை தொடர்பு கொள்வதற்கான வழிவகைகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. கீழ்க்காணும் தோழர்கள் இந்தக் குழுவில் பங்கேற்று மக்கள் பணியாற்றுவதற்கு இசைவு தெரிவித்திருக்கின்றனர்:

- பழ. நெடுமாறன்
- தொல். திருமாவளவன், விறி
- கொளத்தூர் மணி
- பேராசிரியர் ஜவாஹிருல்லா
- தி. வேல்முருகன்
- தெஹ்லான் பாகவி
- திருமுருகன் காந்தி
- கே. எம். ஷரீஃப்
- இனிகோ இருதயராஜ்
- வன்னி அரசு
- நெல்லை முபாரக்
- அப்துல் சமது
- பெரியார் சரவணன்
- சுப. உதயகுமாரன்

இந்த முயற்சிக்கு பொதுமக்களும், ஊடகங்களும், அரசுத் தரப்பினரும் ஆதரவு தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.
நன்றி

**கொரோனா விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழு வாட்சப் தொடர்பு எண்கள்:**
**94459 10100, 98656 83735**

# கொரோனா நோய் எதிர்ப்புப் பணியில் தமிழ் மருத்துவத்தையும் (சித்த மருத்துவம்) கவனத்தில் எடுத்து செயலாற்றுக!

**தமிழக அரசை மே பதினேழு இயக்கம் வலியுறுத்தல்**
**30 மார்ச், 2020**



கடந்த 28.03.2020அன்று இந்திய ஒன்றியத்தின் பிரதமர் நேரடியாக கொரானா தடுப்பு நடவடிக்கை தொடர்பாக சித்தமருத்துவர்களிடம் கலந்தாலோசித்திருக்கிறார். இதில் தமிழகத்தை சேர்ந்த சித்த மருத்துவர்கள் தங்களது கருத்துகளை தெரிவித்திருக்கிறார்கள். அதாவது தமிழகத்தில் பரவிய டெங்கு காய்ச்சலை 'நிலவேம்பு கசாயம்' மூலம் தமிழகத்தில் இருந்து முழுமையாக நீக்கினோம். அதேபோல இந்த கொரானா வைரஸ் நோய் மக்களை தாக்காமல் இருக்க உடலில் எதிர்ப்பு சக்தியை உருவாக்கும் மருந்தை அவர்கள் பரிந்துரை செய்திருக்கிறார்கள். எப்படி நிலவேம்பு கசாயத்தை ஒவ்வொரு கிராமம் வாரியாகவும், நகரம் வாரியாகவும் பொதுமக்கள் கூடும் அனைத்து இடங்களிலும் மக்களுக்கு விநியோகித்து டெங்குவை ஒழித்தோமென்றும், அதேபோல இந்த மருந்தையும் கொடுத்தால் மனித உடலில் எதிர்ப்பு சக்தி அதிகரித்து இந்த கொரானா வைரஸ் நோய் பரவாமல் கட்டுப்படுத்த முடியும் என்று அவர்கள் மிக உறுதியுடன் தெரிவித்து இருக்கிறார்கள்.இதை கேட்ட பிரதமர் இது குறித்து விரைந்து முடிவெடுப்பதாக சொல்லியிருக்கிறார். ஆனால் இந்த ஆலோசனை கூட்டம் முடிந்து கிட்டதட்ட 48மணி நேரத்திற்கு மேல் ஆகியும் மத்திய அரசு இன்னும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் இருக்கிறது. இந்த அவசர நிலையில் இதுபோன்ற காலதாமதம் மேலும் அசாதாரண சூழ்நிலையையே உருவாக்கும். எனவே மேலும் தாமதம் ஆவதை தடுக்கும் விதமாக தமிழக அரசே முன்வந்து மத்திய அரசிடம் இதுகுறித்து விளக்கம் கேட்டு செயலில் இறங்க வேண்டுமென்று மே 17 இயக்கம் தமிழக அரசை கேட்டுக்கொள்கிறது.


இயக்கத் தொடர்புக்கு : +91 98840 72010
இயக்கத்தில் இணைய : may17iyakkam.com/join
இயக்க செயலி : மே 17 இயக்கம்
இயக்க முகநூல் : mayseventeenmovement
இயக்க இணையதளம் : www.may17iyakkam.com
புத்தகங்களை பெற : www.nimirbooks.com

**தமிழ் சமூகத்திற்காக தொடர்ந்து களப்பணியாற்ற நிதி உதவி தாருங்கள்**

| | | |
|---|---|---|
| Account Name | : | Susindran P |
| A/c no | : | 37936911382 |
| Branch | : | State Bank of India, Ashok Nagar branch |
| Account Type | : | Savings |
| IFSC code | : | SBIN0001857 |
| MICRCODE | : | 600003009 |

அறம் சார்ந்து ஈழத்தமிழர்களிடம் நிதி பெறுவதை தவிர்க்கிறோம். வெளிநாட்டு வாழ் தமிழர்கள் தங்களது இந்திய வங்கிக்கணக்கில் இருந்து நிதி உதவி செய்யலாம்

காற்றின் நாவில்
நஞ்சை தடவியது யார்?

தர்க்கங்களைப் போதியென
தன் தலையில் மந்தநிலையும்
மக்களின் பசித்த வயிற்றுக்கு
உணவாகப் பிணங்களையே
தருகிறது இப்பிரபஞ்சம்

அரசனின் மூச்சுக் காற்றாய்
குடிகளின் ஆயுள் மீளத் துடிப்பது
எஞ்சிய வாழ்வின் அநீதிகளை
அளக்கவா? இல்லை
கழிவிரக்க தொடு தன்னை
ஒப்புக்கொடுக்கவா?

பிஞ்சுகளின் பாதம்
தாரில் இழைப்பட்ட பறவையின்
குறு இறகாகக் குழைகிறது
ஆருடம் சொல்லும்
கடவுள்கள் யாவும்
தன்னை தனிமைப்
படுத்திக்கொண்டனர்

கானல் நீராகிப்போன
வாழ்வின் நீர்ச்சுனை வேண்டும்
கடும் தாகம் கொண்ட
காடையின் தொண்டை
வல்லாதிக்க அரசுகளின்
எள்ளல்கள் யாவும்
காற்றுப் பிழிந்து
யாருமற்ற வீதிகளில்
உலர்த்தியது முழு உடலு
எரிந்து அடங்கிய
விளக்கின் திரியாக
கரிந்து உதிர்கிறது
இவர்களிடம் விளக்கு
ஏற்றச் சொல்லிக் கேட்பது
எத்தனை அநீதீ?

இங்குப்
பிழைத்திருப்பதுதான் சவால்
அச்சமென்பது
அதில் ஒரு கணமே.



‘மே 17 இயக்கக் குரல்’ இதழை தரவிறக்கம் செய்ய

# www.may17kural.com
# www.may17iyakkam.com

தொடர்பு எண் (பேச / வாட்சாப்)

# +91 98840 72010

கருத்துகள் தெரிவிக்க மின்னஞ்சல்

# may17voice@gmail.com

குரல் வளர்ச்சிக்கு நன்கொடை செலுத்த

# +91 98840 72010


## நிமிர் பதிப்பகத்தின் வெளியீடுகள்

நிமிர் பதிப்பகம்


நிமிர் பதிப்பகத்தின் புத்தகங்களை இணையத்தில் பெற

**www.nimirbooks.com**

98414 85116 | nimirbooks@gmail.com




விலை ரூ.400




விலை ரூ.60




விலை ரூ.55




விலை ரூ.50